என்றும் உங்களுடன் புத்தகம்-1

மங்கையர் மலர்

MANGAYAR MALAR டிசம்பர் 2007 262 பக்கங்கள் ரூ.18/-





www.cmmindia.com
இனிய தருணங்கள்.
ஜான்சன்ஸ் தருணங்கள்.
CORPORATE FORMAL SHIRTS
JANSONS
Formal Shirts | Suiting | Innerwear (Men & Women) | Sportswear | Dhotis | Lungis |
Towels | Blouse Materials | School Uniforms
Available at all leading stores in South India • www.jansonsgroup.com • rmg@jansonsgroup.com
Soon at Sri Lanka, Malaysia, Singapore and Middle-East Countries
For Enquiries - 99425 73535

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

அடுத்த இதழில்...

பொண்ணு மாப்பிள்ளை 64!

தை மாதம் பிறக்கப் போகிறது. இனி எங்கும் கெட்டிமேளச் சத்தம்தான்! இல்வாழ்க்கையில் இணையப் போகும் இளம்தம்பதிக்கு, டிப்ஸ் கொடுங்க! கர்ச்சீஃப் முதல் குடும்பக் கட்டுப்பாடு வரை, கல்யாண அழைப்பிதழ் முதல் தேனிலவு வரை... அவர்களுக்குப் பயன்படக்கூடிய அத்தனை விதமான ஆலோசனைகளையும் அள்ளி வழங்குங்க! சிறந்தவை குட்டி புக்கில் பிரசுரமாகி சன்மானம் பெறும்! பொண்ணு மாப்பிள்ளை - 64! எனக் குறிப்பிட்டு அஞ்சலட்டையில் மட்டுமே எழுதவும்.

கடைசித் தேதி : 8.12.07





செஃப் ஜேக்கப் வழங்கும்

நாஞ்சில் நாட்டுச் சமையல் ஆரம்பம்

பொங்கல் + புத்தாண்டுச் சிறப்பிதழாக மலர்கிறது

சந்தோஷம்தானே!

2008 எப்படி?

புத்தாண்டு ராசி பலன்கள்



புதிய பகுதிகள் → **ஃபேஷ**



28

கருவாக்கத்தில் நவீனம்!

முதலில் படிக்க...

சிறுகதைகள்

குஷி பக்கங்கள்

இலவச இணைப்பு : குட்டி புக்



பி.கோகுலபாலன் வழங்கும்

அழகு வீடு 64!





முக்கிய அறிவிப்புகள்

1,158,191

கல்கி

தரத்திலும் நம்ப

ஸைனிங் - 8, எங்க வாழ்க்கை - 154

அட்டையில் : அஸ்வினி
படம் : சங்கர் சத்யமூர்த்தி



கிறிஸ்மஸ் சிறப்புச் சலுகை

30-11-07 முதல்
30-12-07 வரை





நீங்கள் வாங்கும் அனைத்து வைர நகைகளுக்கும் 250, 500, 1000, 2000, 5000 மதிப்புகளில் கிஃப்ட் வவுச்சர்கள் வழங்கப்படும்.

அனைத்து வைர நகைகளுக்கு (VVSI FG கலர்) தரம் கொண்டது.

- செய்கூலி இல்லை
- மிக குறைந்த சேதாரம்
- சாதா கற்களுக்கு விலை இல்லை

www.sripalsanijewels.com ஆன்லைன் மூலம் நகை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு டெலிவரி சார்ஜில் 50% தள்ளுபடி உண்டு இச்சலுகை 01.12.07 முதல் 01.01.08 வரை

SRI PALSANI JEWELS

110, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, (ஏவி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் அருகில்),
மைலாப்பூர், சென்னை - 600 004. போன்: 28111737, 28117036

ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆசியுடனும் ஆக்ஞையின்படியும் கீழ்கண்ட யாத்திரைகளை அறிவிக்கிறோம்.


1	19.01.2008 முதல் 03.02.2008 வரை 	அஹமதாபாத் பஞ்சதுவாரகா, சோமநாதம், நாகநாதம். (இரண்டு ஜோதிலிங்கம்) அம்பாஜி, மௌண்ட் அபு, ஏகலிங்கஜி, காங்க்ரோலி துவாரகா, ஸ்ரீநாத்துவாரகா, அஜ்மீர், புஷ்கர், ஜெய்ப்பூர் உள்ளிட்ட யாத்திரை.
2	11.02.2008 முதல் 21.02.2008 வரை	டெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஷ், சுகர்தல், ஆக்ரா, மதுரா, பிருந்தாவன் உள்ளிட்ட யாத்திரை.
3	24.02.2008 முதல் 11.03.2008 வரை 	ஆக்ரா, மதுரா, பிருந்தாவன், அயோத்தியா, நைமசாரண்யம், அலகாபாத், சித்திரக்கூடம், காசி, கயா, பூரி, புவனேஸ்வர் உள்ளிட்ட யாத்திரை.

ஒரே குருப்பாக வரும் அன்பர்களுக்கு காண்ட்ராக்ட் முறையில் அவர்கள் விரும்பும் இடங்களுக்கு அவர்கள் விரும்பும் தேதியில் யாத்திரை செய்து தரப்படும்.

தேதிவாரி அட்டவணை மற்றும் மேலும் விவரங்களுக்கு

ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்

1. யூசுப் லேன், அருணாசல ஆசாரி தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி : ஆபீஸ் : 044 - 28516845, வீடு : 044-28516957



ஒரு வார்த்தை!

எங்கும் புது மழை பொழிந்திருக்கிறது. காய்ந்து போன நதிகளிலும் வெள்ளம் கரை புரண்டோடுகிறது. புதிய பூக்களும் இள நுரையும் ஆற்றின் மேற்பரப்பில் சுழித்தோட, ஆழத்து நீரோட்டம் அமைதியாக இருக்கிறது!

என்னடா இது! ஆசிரியர் பக்கத்தில் வழக்கத்துக்கு மாறாக வர்ணனையும் வார்த்தை ஜாலமும் புதுசாய் இருக்கிறதே என்று புருவத்தை உயர்த்துறீங்கதானே? விஷயம் இருக்கு!

கடந்த ஆறேழு மாதங்களாக 'பூஞ்சாரல்' கலை நிகழ்ச்சிக்காக, தமிழகமெங்கும் உள்ள கல்லூரி மாணவமணிகளைச் சந்தித்தோம். அவர்களில் பலருக்கு எழுத்தார்வமும் படைப் புத்திறனும் இருந்தாலும் அதை வெளிப் படுத்தும் வழி தெரியாது தவிப்பது புரிந்தது. உடனே மேடையிலேயே அறிவித்தோம் 'கல்லூரி மாணவ/மாணவியர் தங்கள் படைப்புகளை மங்கையர் மலருக்கு எழுதி அனுப்பினால், அவை 'பூஞ்சாரல்' என்று ஒருசில பக்கங்களில் வெளியாகும்' என்று. உற்சாகமாக வந்து குவிந்தவற்றில் ஒருசில இந்த இதழில் (புத்தகம்-2) இடம்பெற்றுள் ளன.

இன்னொரு விஷயமும் உள்ளது!

சுமார் 27 ஆண்டுகளாக, பெண்களின் மனம் கவர்ந்த இதழாக வலம்வந்து கொண் டிருக்கும் மங்கையர் மலரை, 85 வயது பார்வதி பாட்டியும் படிக்கிறார், 16 வயது பவித்ராவும் படிக்கிறார். என்றாலும், இடைப் பட்ட வயதில் உள்ள வாசகியர்தான்

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பாரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பாரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி : 2225 1522,
2225 0623, 2225 1324
தொலைநகல் : 044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
மங்கையர் மலர்
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

மங்கையர் மலருக்கு மிக மிக அதிகம். அவர்கள் தங்கள் மகள், புகுந்த வீட்டுக்குப் போகும்போது, தாய்வீட்டுச் சீதனத்துடன் மங்கையர் மலரையும் தவறாது கொடுத்தனுப்புகின்றனர்.

அப்படி மட்டுமே அல்லாமல், கல்லூரி படிக்கும் இளையதலைமுறையினர், தாங்களாகவே மங்கையர் மலர் படிக்கும் ஆர்வத்தையும் ஏற்படுத்த என்ன செய்யலாம் என்று யோசித்தோம். 'மெஹந்தி போட்டி', 'லேட்டஸ்ட் ஃபேஷன் டிசைன்', போன்ற புதிய பகுதிகளை மட்டும் இந்த இதழில் ஆரம்பித்திருக்கிறோம். இது இளைய மனங்களை நிச்சயம் கவரும் என்று நம்புகிறோம்.

''என்னது? மெஹந்தி போட்டி வெறும் கல்லூரி மாணவர்களுக்குதானா...?'' என்று நமது வாசகியர் கலங்க வேண்டாம். இனி வரவிருக்கும் சமுதாயம் இளைஞர் கைகளில்தான் மலரவிருக்கிறது. நாம் கட்டிக் காத்து வந்த பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம், குடும்ப மேன்மை எல்லாவற்றையும் நன்கு அனுபவித்து, அந்த அனுபவத்தையும், ஆற்றலையும் வெற்றியையும், அப்படியே அவர்கள் கைகளில் கொடுத்து, ஒரு திரியிலிருந்து, நூறு ஜோதிகளை ஏற்ற வைக்க வேண்டியது நமது கடமை! உங்கள் அனுபவங்களைக் கொண்டு, இளையதலைமுறைக்கும் ஏற்றவகையில் மங்கையர் மலர் அமைய உங்கள் கருத்துகளையும் தெரிவியுங்க!

எங்கும் புது மழை பொழிந்துள்ளது. புதிய பூக்களும் இளநுரையும் நதியின் மேற்பரப்பை அலங்கரித்து அழகு தந்தாலும், ஆழ்ந்த நீரோட்டம் அமைதியாக இருந்து வெள்ளத்து வேகத்தை அதிகரிப்பது போல, பல்லாண்டு கால வாசகியரான நீங்கள், மங்கையர் மலரின் சீரிய நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இளையதலைமுறை வாசகர்களை வரவேற்பதோடு, முன்போலவே அன்பும், ஆதரவும் பாராட்டி, உங்கள் மங்கையர் மலரை உச்சிமுகர்வீர்கள் தானே!

அனுஷா நடராஜன்


JOHNSON
Not just tiles, Lifestyles.
ஃபாஷன்
உங்கள்
பாத்ரூமுக்காக
ஹைலைட்டர்
ப்ரோச்சருக்காக எங்களுக்கு எழுதவும் customercare@hrjohnsonindia.com
கஸ்டமர் கேர்: 022- 3064 7484.
டோல் ஃப்ரீ 1800-22-7484 MTNL மற்றும் BSNL லைன்களிலிருந்து மட்டும்
www.hrjohnsonindia.com

ஃபேஷன் டிசைனிங்-1

பெண்களுக்கும் டெய்லர்களுக்கும் என்றுமே தகராறுதான். ''எந்த டெய்லர் தைச்சாலும் எனக்கு சரி யாவே தைக்க மாட்டேங்கறானே... நீ யார்கிட்டே பிளவுஸ் கொடுக்கறே...?'' இந்தக் கேள்வியைக் கேட்காத பெண்தான் உண்டா?





அனார்கலி டிசைனர் ப்ளவுஸ்!

நம்மில் சிலருக்கு மாடர்னாக தைத்துக் கொள்ள ஆசையாய் இருக்கும். ஆனால், டெய்லரிடம் சரியாகச் சொல்லத் தெரி யாது. வேறு யாராவது போட்டிருப் பதைப் போல - அது நமக்குப் பொருந் துமா என்று யோசிக்க மாட்டார்கள் - தனக்கும் தைக்க வேண்டும் என்று சொல்லி தைத்துக் கொண்டு, ரவிக்கை பொருந்தாமல் போய்விட, எதற்கு இந்த அவஸ்தையெல்லாம்...?


சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள ஆடை அணிகலன் வடிவமைப்புப் பயிற்சி தரும் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன் மையத்தினர் நம் மங்கையர் மலர் வாசகிகளுக்காகவே ஸ்பெஷலாக சில புதிய டிசைன்களை உருவாக்கப்

போகிறார்கள். நமது உடல் எந்த டைப், எப்படி அணிந்தால் நமக்குப் பொருந்தும் என்று சில டிப்ஸ்களும் தருகிறார்கள்.

எதிரே உள்ள புகைப்படங்களில் உமா சுரேஷ் அணிந்திருக்கும் ரவிக்கையைப் பாருங்கள்... இதுதான் லேட்டஸ்ட் அனார்கலி ப்ளவுஸ்! இந்த டிஸைன் பிடிச்சிருக்கா...? ஓ.கே...


முதலில் அளவுகளைக் குறித்துக் கொள்ளுங்கள். இது 34 இன்ச் (அதாவது 86.5 செ.மீ.,) அளவு கொண்ட பெண்களுக்கான அடிப்படை ரவிக்கை அளவுகள்... சரியா?

வெட்டுவதற்கான அளவுகள்



இது புதுசு!


ரவிக்கை முன்னும் பின்னும்




ரவிக்கையின் பொதுவான அளவு :

நீளம் - 38 செ.மீ.
மார்பளவு - 92 செ.மீ.
இடுப்பளவு - 71 செ.மீ.,
தோள் பட்டை - 36 செ.மீ.,
கை நீளம் - 27 செ.மீ.,
கை முடிவில் - 24 செ.மீ.,


ஆர்ம் ஹோல் எனப்படும் தோள் பட்டை வளைவு - 48 செ.மீ.,



★ நீண்ட கழுத்துக்கு...



★ குட்டைக் கழுத்துக்கு...



★ அகன்ற கழுத்துக்கு...

டிப்ஸ்...

கடவுளோட படைப்புல ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு மாதிரி அளவுகள் கழுத்து, முதுகு, கை, கால் எல்லாம்... நம்ம நிறைகளை அதிகப்படுத்தி, குறைகளை மறைக்கிறதுதான் பொருத்தமான ஆடை அமைப்பு இல்லையா...? இதோ சில டிப்ஸ்...

ஏற்பாடு :
பத்மினி பட்டாபிராமன்

★ கழுத்துன்னு எடுத்தோம்னா மூனு விதம் இருக்கு.

நீண்ட கழுத்து, குட்டைக் கழுத்து, அகலக் கழுத்துன்னு..
(படங்களைப் பாருங்க...)

★ நீளக்கழுத்துக்காரங்க கழுத்தை மூடுகிற மாதிரி (குளோஸ்டு நெக்) ரவிக்கை போட வேண்டாமே! அது இன்னும் நீளமாக்கிக் காட்டும்! கழுத்து, தோள், முன்பகுதி எல்லாம் ஒரே கலர்ல ரவிக்கை போட்டா எடுப்பா இருக்கும்... (கைக்கு வேற கலர் போடற டிசைன் இவங்களுக்குப் பொருந்தாது!) அகலமாக - வட்டமாகவோ - சதுரமாகவோ - கழுத்து வச்ச ரவிக்கை வட்டமோ, சதுரமோ... போடலாம்.

★ குட்டைக் கழுத்துக்காரங்க, ஆழமான V டிஸைன், காலர் வைத்த ரவிக்கை போடலாம். தோள்பட்டையிலிருந்தே ஜரிகை வச்சு.. ஆழமா... உள் கழுத்து வரைக்கும் இருக்கிற மாதிரி போடலாம்...!

★ உங்களுக்கு அகலமான கழுத்தா? வளைவு வளைவாக இருக்கிற டிஸைன் போட்டா அட்டகாசமா இருக்குமே!

அது மட்டுமா? தோளிலேருந்து நேரா இறக்கி, நல்லா வளைச்ச கழுத்துப் பகுதியா தச்சுப் போட்டா.. எடுப்பா இருக்கும்!


இதே மாதிரி ஐடியாக்கள் நிறைய இருக்கு! அடுத்து வர்ற இதழ்கள்லே பார்க்கலாமே!

படங்கள் : ஸ்ரீஹரி

★ டஸ்ஸர் சில்க், ரா சில்க், டிஷ்யூ, ஸாட்டின், ஷிஃபான், நிறைய எம்ப்ராய்டரி பண்ணின துணி.. இதில் எல்லாம் ரவிக்கை தைக்கப் போறீங்களா...?

கண்டிப்பா லைனிங் கொடுங்க.

★ மெல்லிசா இருக்கிற துணின்னா கொஞ்சம் பளபளப்பான துணியிலேயோ அல்லது காண்ட்ராஸ்ட் கலர்லேயோ லைனிங் கொடுத்தா டபுள் ஷேட்ல அற்புதமா இருக்கும்.



★ இதே லைனிங் துணியை கொஞ்சம் நீட்டி, பார்டராக கைகள் அல்லது முதுகுல வச்சா... அது ஒரு டிஸைன்... அழகு!

சொல்ல விரும்புகிறோம்

'அந்த நாள் ஞாபகம் வந்ததே' கட்டுரை படித்தேன். கோயில்களில் பனை ஓலைகளைக் கட்டி வைத்து தீயிடுவதை 'சொக்கப்பனை' என்பார்கள்.
மடிப்பாக்கம், எஸ். நாராயணன்.

வாசகிகளுக்கு செலவைக் குறைக்கும் வகையில் 50 பைசா கார்டே போதும் என்று கூறியிருந்தார் அனுஷா. இப்போது தபால் கார்டின் விலை வெறும் இருபத்தைந்து பைசாதான்.
மயிலாப்பூர்,
எஸ். விஜயலெட்சுமி.

'அனுராதா ரமணனின் 'உள்ளம் தொட்டவள்' நிறைவு தந்தது.
மேற்கு மாம்பலம்,
ரா. ராஜேஸ்வரி.





அன்பு வெள்ளம் பாயட்டும்!

'உள்ளம் தொட்டவள்' உண்மையிலேயே உள்ளத்தைத் தொட்டுவிட்டது. அனுராதா ரமணனுக்குப் பாராட்டு!
திருநெல்வேலி - 7,
அங்கயற்கண்ணி அம்மையப்பன்.

'இவங்க இதைத்தான் வெடிப்பாங்க' கற்பனை அருமை!
சாத்தூர், சண்முகத்தாய் செல்லையா.

சாதாரண பொட்டு வெடியைத் தயாரிக்க இவ்வளவு சிரமமா? ஆச்சரியமடைந்தேன்! இந்த மாத ஆஹா 50 அத்தனையும் ஆஹா, ஓஹோ!
கிருஷ்ணகிரி - 1,
எல். மோஹனசுந்தரி கோபி.

குருப்பெயர்ச்சி பலன்கள், பரிகாரங்கள் அருமை. ஜோதிடப் புத்தகம் வாங்கி செலவு செய்வதைத் தடுத்து விட்டீர்களே!
சென்னை - 4,
சந்திரா ஜானகிராமன்.

'சர்வஜித் பெண்' சீதாலட்சுமியின் திடமனதும் அயராத உழைப்பும் பிரமிக்கச் செய்தன.
மதுரை - 9,
வஸந்தா பரமசிவம்.

'பெங்குவின் பாடம்' படித்ததும் என் மனதில் ஓடிய பழைய சினிமாப் பாடல் வரிகள் :

எத்தனை சிறிய பறவைக்கு
எத்தனை பெரிய அறிவிருக்கு
எத்தனை பெரிய மனிதனுக்கு இத்தனை
சிறிய அறிவிருக்கு!
நெய்வேலி - 3, மங்கையர்க்கரசி.

'ஒரு வார்த்தை'யைப் படித்த போது உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்த, எனக்கொரு மணியான வார்த்தை கிடைக்கவில்லை. ஆம்! பெண்களை அடிக்கும் ஒவ்வொரு ஆணின் இதயத்திலும் அந்த வார்த்தைகள் ஆணிகளாய்ப் பாய்ந்து சென்று அன்பு வெள்ளத்தைப் பாயச் செய்யட்டும்!
சென்னை - 77, து. இன்பமதி.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

பழைய நாளிதழ்களை நான்கு அடுக்கு பரத்திய பிறகு அதன் மீது ஈரத் துணிகளை போட்டு ஃபேனைச் சுற்றவிட்டால், விரைவில் உலர்ந்துவிடும். பூஞ்சக் காளான் வாசனையும் வராது.

— அலமேலு, கோவை.

ஒரு சகோதரி, வடை மாவு நீர்த்து விட்டால் துணியில் போட்டு வைத்தால் கெட்டிப்படும் எனக் கூறியிருந்தார். சரி. ஆனால் வடைமாவில் உள்ள உப்பு, காரத்தையும் இழுத்துக் கொண்டு விடும். மாறாக ஒரு கைப்பிடி அவலைக் கலந்து இரண்டு நிமிடம் கழித்து வடை செய்தால், நன்கு மொறுமொறுப்பாகவும் சுவை குன்றாமலும் இருக்கும்.

– எஸ். ரமாமணி, சின்ன காஞ்சிபுரம்.

கொழுப்பு நீக்கிய தயிரை உணவில் சேர்த்துக்கொண்டால் பனிக்காலத்தில் ஏற்படும் சரும வறட்சியைத் தடுப்பதோடு சருமத்தை 'பளிச்' என்று மாற்றி விடும்.

- கலாமணி, ராசிபுரம்.

டாக்டர்கள் மருந்துகளின் பெயர்களைத் தெளிவாக கேப்பிடல் எழுத்துக்களில் எழுதிக் கொடுத்தால், தவறான மருந்துகளைச் சாப்பிட்டு நோய் தீராமல் அவஸ்தைப்படுவதுடன், பக்கவிளைவுகளிலிருந்தும் தப்பிக்கலாமே!

- லலிதா செல்லப்பா, சென்னை - 75.

பிரயாணம் செய்வதால் உடல் சூடாக இருக்கிறதா? வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு நெய்யும் சர்க்கரையும் கலந்து குடியுங்கள். சூடு போயே போச்சு!

- ஜி. சிந்தியா, இராஜபாளையம்.

கார்டைக் காணோமா?



ஏ.டி.எம். கார்டு, கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்களா நீங்கள்? ஏ.டி.எம். கார்டு தொலைந்து போனால், உடனே சம்பந்தப்பட்ட வங்கிக்குத் தகவல் கொடுத்தால் சில நிமிடங்களில் அந்தக் கார்டைச் செயலிழக்கச் செய்துவிடுவார்கள். ஆனால் கிரெடிட் கார்டு திருட்டுப் போய்விட்டால், நாம் உடனே புகார் கொடுத்தாலும், அந்தக் கார்டைச் செயலிழக்கச் செய்ய 36 மணி நேரமாகும். அந்த இடைப்பட்ட நேரத்தில் திருடியவர்கள் அதைப் பயன்படுத்தி விடுவர். எனவே கவனம் தேவை!

- வி. மணி, ராசிபுரம்.

அடிச்சாங்க பரிசு!

ஆஹா பரிசு (நவம்பர்) போட்டியில், 'அன்றாடம் உபயோகிக்கும் காஸ் சிலிண்டர் 'ஆன்ல் இருக்கா? இல்லையா? என்று பார்த்தவுடன் பளிச்சுன்னு தெரியற மாதிரி பச்சை, சிவப்பு நிறத்தில் விளக்கு வசதியுடன் இன்டிகேட்டர் இருந்தால் டென்ஷன் இல்லாமல் இருக்குமே' என்ற குறிப்பை எழுதி ரூ. 150/- பரிசு பெறுகிறார் ஆர். சுபஸ்ரீ, சேலம். அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு பெறுகிறார் ஆர். மேரி ஜோஸ், புதுக்கோட்டை.



ஆஹா பரிசு!

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து, எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் ரூ. 150/- பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் ரூ. 150/- பரிசு! 'டிசம்பர் -ஆஹா பரிசு!' என்று மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி : 15.12.2007

பெட்டிக்கதைப் போட்டி! வாசகர் விருப்பம்

பெட்டிக்கதைகளை எழுதிக் குவித்து வரும் வாசகர்களுக்கு நன்றி! இந்த இதழில் மூன்று கதைகள் பிரசுரமாகியுள்ளன.

நீங்கள் எழுதும் கதைகளிலிருந்து, இந்த மாதம் மூன்று பெட்டிக் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாகும். பிரசுரமாகும் கதைகள் தலா ரூ. 150/- பரிசு பெறும்.

சிம்பிள் கண்டிஷன்ஸ் : 100 வார்த்தைகளுக்கு மிகாமல், சொந்த கற்பனையில், பெயர், முழு விலாசம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் இன்லாண்ட் லெட்டரில் மட்டுமே எழுதி 'பெட்டிக்கதைப் போட்டி' என்ற குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.



எண்ணுகிறதே!

இந்திரா மோகன், நன்மங்கலம்

கையில் எண்ணெய்க்
கிண்ணியை 'அம்மா'
எடுக்கும்போதெல்லாம்
கட்டிலுக்கடியில் ஒளிந்த
நாட்கள்...

பள்ளி முடிந்து திரும்புகையில்
நட்புக் கூட்டத்துடன்
பழத்தோட்டத்தில் திருடி
பதுங்கிப் பதுங்கி சாப்பிட்ட
நாட்கள்...

பள்ளியில் சுற்றுலா செல்வதற்குப்
பணமில்லையென்று சொன்ன
பவானிக்காக
அம்மாவின் உண்டியலில்
திருடித்தந்த
நாட்கள்...

கணக்கு ஆசிரியை
கண்டித்ததற்காக
'கருங்குரங்கு' என்று
பட்டம் கொடுத்த
நாட்கள்!

அரிசி, பருப்பை
அம்மா அறியாமல் திருடி
அடுத்தவீட்டு அம்பிகாவோடு
சமைத்த போது,
பாவாடையில் தீப்பற்ற
அம்மா தந்த அடி உதைகள்
இன்னும் எத்தனை எத்தனை
குறும்புகள்!
என் மகள் செய்கின்ற போது

பழைய ஞாபகங்கள்
படையெடுத்து வர
எப்படி அவளைத் தண்டிப்பது என
எண்ணுகிறது என் நெஞ்சம்!

சுய முன்னேற்றத் தொடர்-5

சில மதங்களில் கோயிலின் ஒரு எல்லை வரையே பெண் போக முடியும். சில மதங்களிலோ வழிபாட்டுத்தலங்களில் அவள் அனுமதிக்கப்படுவதே இல்லை. பெண் மீது அவ்வளவு பயம்! வெறுப்பு!

கிறித்தவத்தில்கூட பெண்கள் கன்னியாஸ்திரிகள் ஆக அனுமதிக்கப்பட்டார்களே ஒழிய, பாதிரியார்களாக ஆர்ச் பிஷப்புகளாக ஆக அனுமதிக்கப்படவில்லை. பிறகு எப்போது போப்பாண்டவர் ஆவது? ஒரு பெண்ணைக் கிறித்தவ போப்பாண்டவராக உங்களால் கற்பனையாவது செய்ய முடியுமா என்ன?

உலகம் முழுவதும் இதே கதைதான். சீனாவைச் சொல்லட்டுமா? ஆணுக்கு மட்டுமே ஆன்மா உண்டு. பெண்ணுக்கு ஆன்மாவே கிடையாது என்று கன்ஃபூஷியஸ் சொன்னதை, சீனா இன்னும் நம்புகிறது. ஆயிரம் ஆண்டுகளாக, பெண் கொலை செய்யப்பட்டால் அதை ஒரு பாவமாக, கொலையாகச் சீனர்கள் கருதவில்லை. காரணம் பெண் ஆன்மாவற்ற உடம்பு மட்டும் தானாம். அதனால் பெண் கொலை பாவம் இல்லையாம். இதைவிட வெட்கம் பெண்ணுக்கு வாக்குரிமை வழங்காத நாடுகள் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்கூட இருந்தன.



பெண்ணை மட்டம் தட்டும் ஆணாதிக்கத்தின் உச்சகட்ட அறிவிப்பு ஒன்று சொல்லட்டுமா? உலகின் மிகப் பெரிய மனிதர்களே இந்த விஷயத்தில் முட்டாள்களாக இருந்தார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள உதவும். ஆணைவிட பெண் குறைந்தவள் என்பதை நிலைநாட்ட கிரேக்க நாட்டில் சொல்லப்பட்ட ஒரு செய்தி. கேட்டால் உங்களுக்குச் சிரிப்பு வரும். ஆணுக்கு முப்பத்திரண்டு பல். பெண்ணுக்கு முப்பத்தி ஒன்று தானாம். எவ்





சுகிசிவம்

பெண்ணே, நீ வாழ்க!

வளவு முட்டாள்தனமான சிந்தனை? இதைச் சொன்ன அறிவாளி யார் தெரியுமா? தர்க்க உலகின் தந்தை என்று அழைக்கப்பட்ட அரிஸ்டாட்டில்... நம்ப முடிகிறதா? இத்தனைக்கும் இவருக்கு இரண்டு மனைவிகள் இருந்திருக்கிறார்கள். ஒரு மனைவியின் பல்லையாவது வாயைத் திறக்கச் செய்து எண்ணியிருக்கக் கூடாதா இந்த மகாமேதை? முட்டாள் தனமாக இவர் சொன்ன செய்தியைப் பல நூறு ஆண்டுகளாக எந்தக் கேள்வியும் கேட்காமல் கிரேக்கர்கள் ஒப்புக்கொண்டுவிட்டனர். ஒருவராவது எண்ணிப் பார்த்திருக்கக் கூடாதா? ம்ஹூம்... காரணம்... சொன்னவர் பெரிய மனிதர்... தர்க்க உலகின் தந்தை... அது மட்டுமல்ல... ''ஒரு பெண் எப்படி ஆணுக்ுச் சமமாக இருக்க முடியும்?'' என்கிற ஆமுக அகம்பாவம். அதுவே மிக முக்கிய காரணம்.

கட்டுரை மிகவும் சீரியஸாகப் போகிறதோ... ஒரு சின்னக் கதை. அலாவுதீன் அற்புத விளக்கு மாதிரி ஒரு விளக்கு ஒருவருக்குக் கிடைத்தது. விளக்கைத் தேய்த்ததும்,

அதிலிருந்து ஜீபூம்பா என்று ஒரு பூதம் புறப்பட்டது. ''கட்டளையிடுங்கள் செய்து முடிக்கிறேன்'' என்று பணிவுடன் தெரிவித்தது. என்ன வேலை சொன்னாலும் எவ்வளவு வேலை சொன்னாலும் கண் மூடித் திறப்பதற்குள் முடித்துவிட்டு, 'அடுத்த வேலை என்ன' என்று எஜமானனைப் பாடாய்ப்படுத்தியது. 'சடார்' என்று ஒரு வழுக்குகிற எண்ணெய்த் தூணைக் காட்டி ''இதன் உச்சி வரை ஏறு'' என்றான் எஜமானன். பாவம்... இரண்டடி ஏறுவதற்குள் எண்ணெய்த் தூண் வழுக்கி, பூதமானது கீழே விழுந்து கொண்டே இருந்து... காலம் காலமாய் இப்போதும் பூதம் ஏற முயற்சி செய்கிறது... எண்ணெய் வழுக்கி கீழே விழுகிறது. பாவம்... அந்தப் பூதம்...

இந்தப் பூதம் யார் தெரியுமா? கோபம் வேண்டாம். அந்தப் பூதம்தான் பெண்மை. வலிமை வாய்ந்த அதன் சக்தி முற்றிலும் பயன்படாமல் இன்று இப்படித்தான் விரயமாகிறது. தன்னை அவமதித்து, புறக்கணித்து

நான் புரிந்துகொண்ட வரை அவளது அன்பினாலேயே இந்த அற்புதம் சாத்தியமாகியது. ஆண் அவளை மோசமாக நடத்தி இருக்கிறான். இருந்தாலும் அவள் அவனை அன்பு செய்திருக்கிறாள். அடிமைப்படுத்தப்பட்டு கட்டுண்ட நிலையிலும் அவள் ஒரு தாயாகி, சகோதரியாகி, காதலியாகி, மகளாகி தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருக்கிறாள். இதுவே ஓர் அற்புதம்.

அவளது ஆளுமைக்கு எதிராக இந்த அளவுக்கு தாக்குதல் நடந்தும், அவள் தப்பிப் பிழைத்திருப்பது சாத்தியம் ஆனது. ஏனென்றால், இயற்கைக்கு ஆணைவிட பெண் அதிகமாகத் தேவைப்படுவதால் மட்டும்தான். இயற்கையே பெண்ணைப் பாதுகாத்து வந்துள்ளது. ஏனென்றால் பெண்ணே தாயாக இருக்கிறாள். அவளிடமிருந்தே உயிரனைத்தும் பிரவகிக்கிறது. அவளது அன்பின் மூலம்தான் வாழ்வு இன்னும் பாட முடிகிறது. இன்னும் ஆட முடிகிறது. உலகில் இன்னும்கூட கொஞ்சம்

...''அவரே புத்தர்... அந்தத் திருவடிகளைச் சரணம் என்

வீழ்த்தும் சமூக வழுக்கல்களிலிருந்து மேல் ஏறுவதிலேயே அதன் கவனமும் சக்தியும் விரயமாகிறது. ஆக்கபூர்வமான, வளர்ச்சிக்குப் பெண்மை பயன்படுத்தப்பட வேண்டும் என்று ஆணும் பெண்ணும் அக்கறை காட்டியாக வேண்டும். பெண்ணை, பெண்ணின் பெரும் சக்தியைச் சரியான திசையில் பாய்ச்ச வேண்டும்.

ஓஷோ சொல்கிறார் - அதைக் கூர்ந்து கவனியுங்கள்.

''பெண் ஏறக்குறைய பைத்தியக்காரி ஆக்கப்பட்டுவிட்டாள். எல்லா மதங்களையும் அரசாங்கங்களையும் ஆண்கள்தான் உண்டாக்கியிருக்கிறார்கள். எல்லாச் சட்டங்களையும், சமுதாயங்களையும் ஆண்கள்தான் உண்டாக்கி இருக்கிறார்கள். எல்லாக் கல்வி முறைகளையும் ஆண்கள்தான் உண்டாக்கி இருக்கிறார்கள். இப்படி எல்லாமே ஆண்களால் உண்டாக்கப்பட்டுள்ள சமுதாயத்தில் இதுவரைக்கும் அவள் பிழைத்து எஞ்சியிருப்பதே ஒரு மாபெரும் அற்புதம்தான்.

அழகு உள்ளது. இன்னமும் கொஞ்சம் அருள் தங்கி உள்ளது.''

பெண்ணே இயற்கைக்கு மிக வேண்டியவள். அதனாலேயே அவளை இயற்கை பாதுகாத்து வைத்திருக்கிறது. ஆண்களின் இத்தனை அடக்குமுறைக்கும் பிறகு அவள் தப்பிப் பிழைத்துத் தளிர்க்கிறாள். இயற்கையே அவளைப் பாதுகாத்து காப்பாற்றி இருக்கிறது. ஒரே காரணம். அவள் இயற்கைக்கு மிக வேண்டியவள். பிரபஞ்சத்தில் ஒளிந்திருக்கும் படைப்பாற்றல் பெண்ணிடம்தான் ஒளி விடுகிறது. பூமி எப்படி உயிர்ப்பிக்கிறதோ அப்படி அவளும் உயிர்ப்பிக்கிறாள். அதனால்தான் பூமியின் மிகச் சரியான பிரதிநிதியாகத் தாய் தேர்ந்தெடுக்கப்பட்டாள். சாஸ்திரப்படி பூமியை வலம் வர வேண்டிய ஒருவன் தாயை வலம்வந்தால் போதும் என்று அறிவிக்கப்பட்டது. தாய்மைதான் பெண்ணின் உச்சநிலை. தாய்மை என்ற தனித்தன்மையே அவளது தனிச்சிறப்பு.

பகவான் புத்தரைத் தரிசித்துவிட வேண்டும் என்கிற வெறியுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். அந்த இளைஞன் தனிமையில் தவிக்கப் போகும் தனது வயதான தாயைப் பற்றிக்கூட அவன் கவலைப் படவில்லை.

அவன் எங்கு போனாலும் புத்தர் அங்கிருந்து கொஞ்சம் முன்பாகத்தான் புறப்பட்டுப் போனார் என்று ஒரே பதில் கிடைத்தது. அவன் மனம் துவண்டு போனது. வழியில் தாம் சந்தித்த மற்றொரு மூத்த புத்த சந்யாஸியிடம் பகவான் புத்தரைத் தரிசிக்காமலேயே தன் வாழ்வு முடிந்து விடுமோ என்று கதறினான்.



முதிர்ந்த அந்த சந்யாஸி அன்புடன் அவனது கரங்களைப் பற்றி ஆறுதல் கூறினார். ''வருத்தப்படாதே மகனே... உன் வீடு திரும்பு... நீ புத்தரைத் தரிசிக்கும் பாக்யம் உள்ளவன் என்றால் எப்படியும் தரிசிப்பாய். புத்தர் கருணையானவர்'' என்றார். அவனோ... ''ஐயா... நான் முன்பின்னாகப் புத்தரைப் பார்த்ததே இல்லை. வழியில் எங்காவது திடீர் என்று புத்தரைக் காண நேர்ந்தால் நான் எப்படி அவரை அடையாளம் கண்டுகொள்வேன். தவற விட்டுவிடக் கூடாதே'' என்று அழுதான்.

''மகனே! வழி முழுவதும் சந்திப்பவர்கள் கால்களை உற்றுநோக்கியபடி போ... யார் தமது வலது கால் செருப்பை இடது காலிலும் இடதுகால் செருப்பை வலது காலிலும் அணிந்திருக்கிறாரோ அவரே புத்தர்... அந்தத் திருவடிகளைச் சரணம் என்று இறுகப் பற்றிக்கொள்'' என்று அதிசயமான அடையாளம் ஒன்றைச் சொல்லி அனுப்பினார்.

வழி முழுவதும் அவ்வாறு பார்த்தபடியே தன் ஊர் திரும்பினான். அவனது துரதிருஷ்டம். ஒருவர்கூட அப்படிக் காட்சி அளிக்கவே இல்லை. தனக்கு நல்லருள் கிடைக்கவில்லையே என்று வருந்தியபடி தன் வீடு வந்து கதவைத் தட்டினான். அவனது அழைப்பொலியைக் கேட்டதும், அடிவயிற்றில் பிள்ளை உதைத்த போது உணர்ந்த ஆனந்த உணர்வுகளுடன் அவன் வயது முதிர்ந்த தாய் ஓடோடி வந்து வாசற் கதவுகளைத் திறந்து கண்ணீருடன் மகனை வரவேற்றாள். இனி புத்தரைக் காணவே

இறுகப் பற்றிக் கொள்!”


முடியாது என்று தன் சகல நம்பிக்கையையும் இழந்திருந்த மகன், கதவைத் திறந்த தன் தாயின் கால்களைப் பழக்கதோஷத்தால் கவனித்தான். என்ன ஆச்சர்யம்? அவள் வலது காலில் இடது கால் செருப்பும், இடது காலில் வலது கால் செருப்பும் இருந்தன. கதவைத் தட்டிய மகன் திரும்பிப் போய் விடக்கூடாதே என்ற பதற்றத்தினால் பதறியபடி எழுந்தோடி வந்தவள் காலில் செருப்பு மாறி அணிந்து கொண்டதை அறியப் போகிறானா என்ன?

மகனுக்கு மூத்த சந்யாஸியின் சொல் நினைவில் மின்னியது. மெலிந்து மூத்து பாசத்தால் நடுங்கும் தாயின் மெல்லிய பாதங்களைக் கட்டிக்கொண்டு, 'பகவானே' என்று அழத்தொடங்கினான். புத்தரை விடவும் கருணையானவர் தாயாக மட்டும் தானே இருக்க முடியும்?

(தொடரும்)

பலே புரோட்டீன்ஸ்!

* நீருக்கு அடுத்தபடியாக, மனித உடலுக்குத் தேவையான அதிமுக்கிய ஊட்டச்சத்து புரதம்தான்!
* கார் ஓட, பெட்ரோல் தேவை! அது போல, நாம் நல்லபடி இயங்க புரோட்டீன் தேவை!
* நம் உடலில், பதினான்கு சதவிகிதத்துக்கு அதிகமாக புரோட்டீன் இழப்பு ஏற்பட்டால், ஆரோக்கியம் அம்பேலாயிடும்... ஜாக்கிரதை!




ஹை-புரோட்டீன் உணவைச் சாப்பிட்டால், கொழுப்புச்சத்து கரைந்து, உடல் எடை குறையும்!

* புரதம், குழந்தைகளின் முழுமையான உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. வளர்ந்தவர்களின் உடலின் திசுக்களைப் புதுப்பித்துக் காக்கிறது.
* அது தவிர, உடல் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து வைட்டமின்களும் தாதுச் சத்துக்களும் புரதத்தில் பரிபூரணமாக நிறைந்துள்ளன.

ஐம்பதுக்கும் மேற்பட்ட அமினோ அமிலங்களின் சேர்க்கை புரதத்தை உருவாக்கத் தேவைப்படுகின்றது.

தசைகளையும், நார்திசுக்களையும் தவிர, ஈரல், குடல், சிறுநீரகம் போன்ற உறுப்புகளிலும் புரதம் காணப்படுகிறது.



* முட்டை, மீன், இறைச்சி, பால் பொருள்கள் போன்ற விலங்கு சார்ந்த பொருள்கள் முழுமையான புரதச்சத்து நிறைந்தவை.
* பட்டாணி, வேர்க்கடலை, பீன்ஸ், கோதுமை, அரிசி, பருப்பு, தானியங்கள் போன்ற தாவரப் பொருள்கள் முழுமையற்ற புரதம் கொண்டவை.
* உடல் பருமன் உள்ளவர்கள்

* மனித உடல் எடையின் ஒரு கிலோவுக்கு ஒரு கிராம் என்ற விகிதத்தில் புரதம் தேவைப்படுகிறது. ஆனால் ஒரு தம்ளர் பாலில் 6.5 கிராம் அளவே புரதம் உள்ளது. 7-10 வயதுள்ள குழந்தையின் தினசரி புரதத் தேவையோ 41 கிராமாக உள்ளது.

துண்டு விழும் புரதச்சத்தை எப்படி ஈடுகட்டுவது? புரோட்டினெக்ஸ் அருந்துங்க!
நூறு கிராம் புரோட்டினெக்ஸில் 32 கிராம் அளவு புரதம் நிறைந்துள்ளது.
மற்ற முன்னணி ஆரோக்கிய பானங்களை விடவும் 50% அதிகப் புரதச்சத்தை உங்கள் புரோட்டினெக்ஸ் அளிக்கிறதே!
இன்னும் என்ன தயக்கம்? முழுமையான புரதம் வேணுமா? புரோட்டினெக்ஸ் அருந்துங்க!



தேவையானவை :

- கறுப்பு நிறத் துணி - வேண்டிய அளவில்,
- கார்பன் பேப்பர் (வெள்ளை நிறம்) - அதே அளவில்,
- படம் - நமது ரசனைக்கு ஏற்ற மாதிரி
- பென்சில் - 1,
- குந்தன் ஸ்டோன்கள் - 100 கிராம்,
- சிப்பி போன்ற சம்கி - 50 கிராம்,
- மல்டி கலர் சம்கி - 50 கிராம்,
- 3D அவுட் லைனர்,
- பசை - ஒட்டுவதற்கு.

(இவை அனைத்துமே பெரிய ஃபேன்ஸி கடைகளில் கிடைக்கின்றன.)







செய்முறை :

நல்ல தரமான, திக்கான கறுப்பு நிறத் துணியைத் தேர்ந்தெடுக்கவும்.

அதில் மயில் உருவத்தையோ அல்லது உங்கள் விருப்பத்துக்குரிய படத்தையோ, கார்பன் பேப்பர் மூலம் கவனமாக வரைந்து கொள்ளவும்.

பிறகு துணியில் 3D அவுட் லைனரினால் படத்தை மிகப் பொறுமையாக வரையவும்.

சிப்பி போன்ற சம்கியைப் பசையினால் அவுட்லைன் முழுக்க ஒட்டவும்.

மல்டி கலர் சம்கியை மயிலின் கழுத்து, உடல் பகுதிகளுக்கு பசையைத் தடவி ஒட்டவும். குந்தன் கற்களை மயில் இறகின் உட்புறமோ அல்லது உங்கள்

மினுக்குதே மயில் பெயிண்டிங்!

கற்பனைக்கு ஏற்பவோ ஒட்டவும். 3D அவுட்லைனரினால் ஆங்காங்கே வண்ணங்கள் திட்டவும்.

உதாரணமாக, மயிலின் கொண்டை, அலகு, பூச்செடி,







புத்கள் போன்ற இடங்களுக்கு 3D அவுட்லைனரைப் பயன்படுத்தலாம். இப்போது அழகான மயில் படம் ரெடி!

மரம், அலுமினியம், ஃபைபர் என விதவிதமான ஃப்ரேம்கள் தற்போது கிடைக்கின்றன என்பதால் அலங்காரமாக சட்டமிட்டு சுவரில் மாட்டலாம்.

- வி. வித்யா, கடலூர்.



★ பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் IUI எனப்படும் Intra Uterine Insemenation மட்டும் தான் கருவாக்க மருத்துவமாகக் கருதப்பட்டது. இந்த முறையில் விந்தணுக்களை, உறிஞ்சு குழாய் (syringe) மூலம் கர்ப்பப் பையினுள் நேரடியாகச் செலுத்துவார்கள்.

★ பின்னர் GIFT (Gamete Intra fallopian transfer) எனப்படும் அதற்கும் ஒரு படி மேலான சிகிச்சை பிரபலமானது. இம் முறையில் உயிரணுக் களையும் கருமுட்டை களையும் இணைத்து, கருவுறச் செய்யப் பட்டு, பின்னர் அந்தச் சினைக் கரு, கருவணு குழாயினுள் வைக்கப் பட்டது. ஆனால், இதிலும் வெற்றி வாய்ப்புகள் எதிர்பார்த்த அளவில் கிடைக்கவில்லை.

★ *1978ல்* சோதனைக் குழாய் பாப்பாவான லூயிஸ் ப்ரவுன் பிறந்த பின்புதான், புதிய சகாப்தமே ஆரம்பமானது. கருவணுக் குழாய் பழுதுபட்ட பெண்களுக்கும், மிகக் குறைந்த அளவில் உயிரணுக்கள் உள்ள ஆண்களுக்கும், அறியப்படாத காரணங் களால் மலட்டுத்தன்மை உள்ள தம்பதியருக்கும் இம்முறை வரப்பிரசாதமாக

''முதல் சோதனைக் குழாய் குழந்தையான லூயிஸ் ப்ரவுன் பிறந்த பிறகு, இந்த முப்பது வருடத்தில், கருவாக்க முறைகளில்தான் எத்தனை அசுர வளர்ச்சி. 'குழந்தையின்மை' என்ற

கருவாக்கத்தில்

சொல்லே வருங்காலத்தில் இல்லாமல் போகக்கூடும் என்பது போல அத்தனை நவீனமாகி விட்டது'' என்கிறார் நிர்மலா சதாசிவம்.

அமைந்தது.

★ அதற்குப் பின், 1994 வரை குழந்தையின்மை சிகிச்சைத் துறையில் பெரிய மாற்றங்கள் இருக்கவில்லை.

பின்னர் இக்ஸி (Intra Cytoplasmic Sperm Injection) என்ற புதிய முறை, மகத்தான முன்னேற்றம் கண்டது. இந்த முறையில், ஓர் உயிரணுவை கருமுட்டைக்குள் நேரிடையாக, மருத்துவரே ஊசி மூலம் செலுத்துவார். இதனால் கருவணு சினைப்படுத்தப்படுகிறது. இந்தச் சினைக்கரு தொடர்ந்து வளரத் தேவையான கல்ச்சர் திரவ ஊட்டம் கொடுக்கப்படுகிறது. இம்முறையில், ஓரிரு உயிரணுக்கள் உள்ள ஆண்களுக்குக்கூட குழந்தைப்பேறு கிடைக்க வழி செய்தது.

★ 1998-ஆம் ஆண்டு வரை, சினைக் கருக்கள் இரண்டு நாட்கள் (48 மணி நேரம்) வரை மட்டுமே இன்குபேட்டர் பெட்டிகளில் வளர்க்கப்பட்டு, பின்னர் கர்ப்பப் பையினுள் வைக்கப்பட்டன. அதன் வெற்றி வாய்ப்பும் 20-25% மட்டுமே இருந்ததால், 'Extended embryo Culture' என்ற முறை புழக்கத்துக்கு வந்தது. கரு உயிரை ஐந்து நாட்கள் வரை வளர்த்து, blastocyst எனப்



டாக்டர் நிர்மலா சதாசிவம்

படும் கரு திசு வடிவம் பெறும் வரை கல்ச்சர் செய்யும் முறை அறிமுகம் ஆனது. இதனால் உயிருள்ள (viable) உயிரற்ற (nonviable) என கருஉயிர்களைப் பிரித்தறியும் வாய்ப்பு மருத்துவர்களுக்குக் கிடைத்தது.

நவீனம்!

உயிர்த்தன்மை பெற்றுவிட்ட நிலையில், கர்ப்பப் பையில் வைக்கப்படும்போது, வெற்றி வாய்ப்பும் அதிகமாகத் தானே செய்யும்? அதே போல, இதற்கான பிரத்யேக இன்குபேட்டர் பெட்டிகள், உயிர்ச்சத்துத் திரவங்கள் (culture media) மிகத் தரமாகக் கிடைப்பதால், தோல்விகள் மிகக் குறைவே!

★ அடுத்தபடியாக இன்னும் கொஞ்சம் முன்னேற்றம். 'லேஸர் ஹேச்சிங்' என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் லேஸர் கதிர்களின் உதவியால், கருமுட்டையின் மேற்புற உறையானது, ஓரிரு இடங்களில் சிதைக்கப்படும். இதனால் கருஉயிர் எளிதாக வெளிப்பட்டு, கர்ப்பப்பையின் உட்சுவரை ஒட்டி வளரும்.

கண்ணுக்குத் தெரியாத கருமுட்டையைத் துளையிட்டு, அதனுள் ஊசி மூலம் செலுத்தும் அதிநவீன மைக்ரோஸ்கோப் இம்முறையில் பயன்படுத்தப்படுகிறது.

★ அடுத்தகட்ட முன்னேற்றம் 'ஹையலூரூனான்' (Hyalurunon) எனப்படும் ஒருவிதமான பயோ-கெமிக்கல் கருவுடன் சேர்க்கப்பட்டு கர்ப்பப் பையினுள் செலுத்தும்போது, கர்ப்பப்பையின் உட்சுவருக்கும் கருத்திசுவுக்குமான இணைப்புகளை (bonds) இது அதிகப்படுத்துகிறது. இதுவும் அறிய கண்டுபிடிப்புதான்.



★ 'Cryo-preservation' எனப்படும் கரு உயிர்களை உறைநிலையில் சேமிக்கும் வசதியும் இந்நாளில் பேருதவியாக உள்ளது.



நந்தி கல்யாணம்

'நந்தி கல்யாணம் பார்த்தால் முந்தி கல்யாணம்' என்பது பழமொழி.

பங்குனி மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் நந்திதேவருக்கு, சுயசாம்பிகை தேவிக்கும் ஒவ்வொரு ஆண்டும் திருமழபாடியில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடைபெறுகிறது.

நந்திதேவரும், சுயசாம்பிகை தேவியும் தம்பதி கோலத்தில் வீதிவலம் வருவார்கள். நந்தி கல்யாணம் பார்ப்பதன் மூலம் காளையர் கன்னியருக்கு விரைவில் திருமணம் நடைபெறும். அத்தகைய வரத்தை நந்திதேவர் அருளுவார் என்று ஐதிகம்.

வெகுநாள் திருமணம் தடைபட்டவர்கள் கூட இந்தக் கல்யாணத்தைப் பார்த்தால் நன்மை பெறுவர்.

– எஸ். பத்மாவதி, கிழக்கு தாம்பரம்.

கருவாக்கம் செய்யப்பட்ட சினை முட்டையை அதனுள் இருக்கும் கரு உயிரோடு, திரவ நைட்ரஜனில் உறைய வைத்துவிட்டால், அதை எத்தனை நூறு ஆண்டுகள் கழித்தும் மீண்டும் எடுத்துப் பயன் படுத்தலாம். பாட்டியிடம் எடுக்கப்பட்ட சினை முட்டையை, அவரது பேத்திக்குக் கூடப் பொருத்தி, அறிவியல் விந்தை புரியலாம்.

அது மட்டுமல்ல, மீதமாகும் கரு உயிர்களை (ஒரு தம்பதிக்கு ஒரு கருத்திக செலுத்தினாலே போதுமானது), பின்னர் அதே தம்பதிக்கு உதவும் வண்ணம் பாதுகாத்துத் தர இச்சிகிச்சை உதவுகிறது. இதனால் முதல் முறை தோல்வியடையும் தம்பதிக்கு, மீண்டும் பரிசோதனைகளோ, செலவுகளோ வைக்காமலேயே, இன்னொரு முறை கருத்தரிக்க வாய்ப்பு கிடைக்கிறது.

★ இவை தவிர, கருமுட்டைதானம், விந்து தானம், வாடகைத் தாய் முறை போன்றவையும் சமூகத்தில் மிகவும் பரவலாகிவிட்டன. இதுபோன்ற நவீனங்கள் நிறையவே இருப்பதால்தான், சமீபத்தில் 61 வயதான மூதாட்டி ஒருவருக்கு எங்கள் மருத்துவமனையில் குழந்தைப்பேறு கிடைத்தது.

இப்போதெல்லாம் ஆஸ்திரேலியா, யு.கே., மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளில், எந்தப் புதிய கண்டுபிடிப்பு இத்துறையில் நிகழ்ந்தாலும், அவை உடனே இந்தியாவிலும் அறிமுகமாகி விடுகின்றன. உலகமயமாக்கலுக்கு நன்றி!

★ எனவே... குழந்தைப்பேறு விரும்பும் தம்பதியர், முதிர் வயதை எட்டியிருந்தாலும், மருத்துவரின் ஆலோசனைகளைப் பின்பற்றி சிகிச்சைக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தால், நிச்சயமாக குழந்தைப்பேறு வாய்க்கும். தேவை எல்லாம், பொறுமையும் நம்பிக்கையும்தான்!

(அடுத்த இதழில் தைராய்டு சார்ந்த பிரச்னைகள்)

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

மற்றும்

CSC®

COMPUTER EDUCATION

இணைந்து வழங்கும்

கம்ப்யூட்டர் கல்வி உதவித்தொகை

ரூ. 10,800/-

HDCA (Honours Diploma in Computer Application)

COURSE CONTENTS	
• Enduser Application • Client/Server Application • Programming Tools • Web Designing	வழக்கமான கட்டணம் ரூ. 18,800/-
	தினத்தந்தி வாசகர்களுக்கு ரூ. 8,000/-

மாதத் தவணை முறையிலும் செலுத்தலாம்

கல்வித்தகுதி – குறைந்தபட்சம் 10–ஆம் வகுப்பு
ஒரு வருட HDCA பயிற்சியில் சேருபவருக்கு மட்டுமே
கல்வி உதவித்தொகையை பணமாக பெற இயலாது

முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

For more details contact nearest CSC centre / Call : 9941007206, 9940496325, 9444953620

இலட்சியப் பெண்கள்!

★ 'ஆச்சி மசாலா' தயாரிப்பாளர் நகரத்தார் வீட்டுப் பெண்மணி அல்ல; தெல்மா ஐசக் என்ற கிறிஸ்தவப் பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? (அமரர் கல்கியால் பாராட்டப் பட்ட கர்நாடக இசை மேதை தஞ்சாவூர் ஆபிரஹாம் பண்டிதரின் கொள்ளுப்பேத்தியாம் இவர்.)

★ காங்கிரஸ் தலைவர் பக்தவத்சலத்தின் மகளான சரோஜினி (வரதப்பன்)யை ஒன்பதாம் வகுப்புக்கு மேல் படிக்கக் குடும்பம் அனுமதிக்கவில்லை!



★ பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் ஏற்பட அடித்தளம் அமைத்தவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி சி.கே. கரியாலி.

★ குழந்தைப் பாக்கியம் இல்லை என்று வந்த ஒரு தம்பதியைப் பரிசோதித்து, 'வாய்ப்புக் குறைவு' என்று டாக்டர் கமலா செல்வராஜ் கருதியபோதிலும், விடாப்பிடியாக அவரை உற்சாகப்படுத்தி, ஊக்கமளித்தவர் அவருடைய பாட்டி சின்னம்மா!

★ ஏழுமுறை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நிலக்கோட்டை ஏ.எஸ். பொன்னம்மாள் இன்றைக்கும் பயணம் செய்வது ஆட்டோவிலும் பேருந்திலும்தான்.

★ இப்படிப் பல சுவையான தகவல்களை உள்ளடக்கிய இருபத்தேழு பிரபலங்களைப் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல்.

டாக்டர் கே. மீனா.



★ ராதிகா சரத்குமார், பாப்பா உமாநாத், மனோரமா, டாக்டர் பத்மா சுப்ரமணியம், டாக்டர் சாந்தா, டி.கே. பட்டம்மாள், வைஷசி வில்லவன் - என்று பல துறையினரைப் பற்றியும் சுவைபட எழுதியிருக்கிறார் ஆசிரியர் டாக்டர் கே. மீனா.

★ திருச்சிராப்பள்ளி ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி முதல்வராக விளங்கும் நூலாசிரியர், தம்முடைய மாணவிகளுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதற்காக இந்தச் சாதனைப் பெண்மணிகளைப் பற்றி எழுதியிருப்பதாய் தம்முடைய முன்னுரையில் கூறுகிறார். அவருடைய மாணவியர் மட்டுமின்றி, அனைவருக்குமே பயன்படக்கூடிய நூல்தான்.


இலட்சியப் பெண்கள் - டாக்டர் கே. மீனா, கதிர்மதி பதிப்பகம், 47/1 புதிய சுற்றுலா மாளிகை காலனி, டி.வி.எஸ். டோல்கேட், திருச்சி - 20. விலை ரூ. 70.00

– 'யெஸ்பால்'


வண்ணக் கோலங்கள்



13-13 (நேர்ப்புள்ளி)
- எம். அமுதாதேவி, பட்டுக்கோட்டை.




13 - 3 (நேர்ப்புள்ளி 3ல் நிறுத்தவும்)
- ஜே. பூங்கோதை, சென்னை - 78.



21 புள்ளி நேர்ப்புள்ளி 19 புள்ளி 4 வரிசை ஒன்று விட்டு 9 வரை கடைசி 1 புள்ளி
- பி. ஜெயந்தி திருமால், சேலம் - 8.



- ஆர். இராஜேஸ்வரி, போரூர்.



17 புள்ளி 3 வரிசை (நேர்ப்புள்ளி)
- டி. ராஜராஜேஸ்வரி, சேலம் - 8.

'சிவசக்தி காக்கும் கரங்கள்' - காப்பகத்தில் வசிக்கும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும், திருமலை ஸ்ரீ வேங்கடேச பெருமானின் கல்யாணத்துக்கும், என்ன சம்பந்தமிருக்க முடியும்? கடல் உப்புக்கும் மலை நார்த்தங்காய்க்கும் உள்ள சம்பந்தம்தான்! ஆனால் இரண்டும் சேரும்போது, ருசியான ஊறுகாய் கிடைப்பதுபோல, சுவையான நிகழ்ச்சி ஒன்று சமீபத்தில் நடந்ததே!



■ அனிதாகுஹா, விஜயகுமாரி



சென்னை, ஆழ்வார் திருநகரில் 1993-ல், ஏழு குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட 'சிவசக்தி காக்கும் கரங்கள்'- இன்று பெங்களூர், காஞ்சிபுரம் என தன் விழுதுகளை வேரூன்றி, பலரும் தங்கி அன்புடன் இளைப்பாறும் ஆலமரமாக விரிந்துள்ளது. இந்தக் காப்பகத்தின் ஜீவன்று கோலாகத் திகழும் சி.சி. விஜயகுமாரியிடம் பேசியபோது,

''அப்துல்கலாம், கிரண்பேடி, எஸ்.பி.பி., எழுத்தாளர் சுஜாதா, பாலுமகேந்திரா, இசையமைப்பாளர் வித்யாசாகர், எஸ்.வி. சேகர் என பலரும் எங்கள் காப்பகத்தின் மீது அன்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். எங்கள் இல்ல ஆண்டு விழாவை ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடத்த இவர்களைப் போல கருணை உள்ளம் கொண்ட ஆதரவாளர்கள் உதவி வருகின்றனர். இந்த வருடம், நாங்கள் வித்தியாசமாக ஏதாவது செய்ய நினைத்தோம். மும்பையில் உள்ள எங்கள் நண்பர் சண்முகானந்தா சங்கரைத் தொடர்பு கொண்டோம்.

''ஜனரஞ்சகமாக இருக்கணும். நல்ல கலை அம்சத்துடன் இருக்கணும். எங்கள் காப்பகத்துக்கு பெரிய நிதியைத் திரட்டும் நிகழ்ச்சியாகவும் அது அமையணும். அது போல ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு

செய்து தர முடியுமா?'' என்று கேட்டோம்.

அதற்கு அவர், ''கையில் வெண்ணெயை வைச்சிக்கிட்டு, நெய்க்கு அலையறீங்களே. 'பரதாஞ்சலி' நடனக்குழு உங்க சென்னையிலேயே இருக்கே!'' என்று நாட்டிய நாடக ஸ்பெஷலிஸ்ட் அனிதா குஹாவை அறிமுகப்படுத்தினார்.

எனக்கோ ஒரே சந்தேகம்!

'ஏதோ சினிமாப் பாட்டு, டான்ஸ், மேஜிக் ஷோ, மிமிக்ரி என்றால் கூட்டமும் சேரும். காப்பகத்துக் குழந்தைகளும் ரசிப்பார்கள். பரதநாட்டிய பாலே நிகழ்ச்சிகள்

"**நா**ன் ஏற்கெனவே சிவசக்தி இல்லம் பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். விஜயகுமாரியின் அழைப்பின் பேரில் அவர்களுடைய காப்பகத்துக்கு நேரிலும் சென்றேன். அங்கே... நூற்றுக்கணக்கான மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள், ஆதரவற்றோர், முதியோர் என அனைவரையும் சந்தித்தபோது, அழுகையை அடக்க ரொம்பவே சிரமப்பட்டேன். ''வாழ்க்கையைத் தொலைத்தாலும் வசந்தத்தில் திளைக்கின்றவர்கள் நாங்கள்'' என்று சொல்லாமல் சொல்லும் அந்த வண்ணத்துப் பூச்சிகளைப் பார்த்து உடனே ஒப்புக் கொண்டு விட்டேன்.

ஆனால் நானே எதிர்பார்க்காத வண்ணம் என் உடல்நலம் பாதித்தது. கடுமையான ஸ்பான்டிலைடிஸ் தாக்கியது.

''மூன்று மாத பரிபூரண ஓய்வு கட்டாயம் தேவை. எல்லாவற்றையும் நிறுத்துங்க!'' என்று டாக்டர் கண்டிப்பாகச் சொல்லி விடவே... எனக்கு முதலில் நினைவுக்கு வந்தது 'சிவசக்தி குழந்தைகளின் முகங்கள்தான்!



மார்கழி சந்தோஷங்கள்!

இவங்களுக்குப் புரியுமா? டிக்கெட்டுகள் விற்குமா?' என்றெல்லாம் கவலையே வந்து விட்டது.

ஆனால் சங்கரோ, மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே அரை மனதோடுதான் 'பரதாஞ்சலி'யின் அறங்காவலர் ரகோத்தமனைச் சென்று பார்த்தேன்'' என்று சொல்லி நிறுத்தினார் சி.சி. விஜயகுமாரி!

''இந்த ஒரே ஒரு நிகழ்ச்சிக்கு மட்டும் அனுமதி கொடுங்க. மற்றபடி சீஸனில் புக் ஆகியுள்ள நாட்டிய நாடகங்கள் அனைத்தையும் ரத்து செய்து விடுகிறேன்'' என்று மனவருத்தத்தோடு என் கணவரிடமும் டாக்டரிடமும் கேட்டேன். அதன் படியே எல்லா சபாக்களுக்கும் என் நிலைமையைத் தெரிவித்து கேன்சல் செய்தேன்'' என்றார் அனிதா.

“சதா வெங்கடேசம் ஸ்மராமி... ஸ்மராமி'' என்ற நாட்டிய நாடக விடியோவைப் போட்டுப் பார்த்த பிறகு எனக்குப் பரம திருப்தி! ஆனால் 'பார்வையாளர்களுக்குப் பிடிக்கணுமே... என் பிள்ளைகளுக்குப் பிடிக்கணுமே!' என உள்ளூர உதறல் கடைசி வரை இருக்கத்தான் செய்தது.

சொன்னால் நம்ப மாட்டீங்க.

புராணக் கதைதான்! ஸ்ரீனிவாசன் - பத்மாவதி கல்யாணக் காட்சிகள்தான்! ஆனால் அனிதாவின் கற்பனையில் விரிந்திருந்த வண்ணமயமான ஆடலும் பாடலும் குழந்தைகளை அப்படியே கட்டிப் போட்டு விட்டது. பந்தாட்டம், கோலாட்டம், மேஜிக் காட்சிகளில் விஸில் பறந்தன .

''அய்யோ... எங்க நிகழ்ச்சியை ஜனங்க ஆரவாரத்துடன் ரசிப்பாங்களே தவிர, விஸில் எல்லாம் பறக்காதே!'' என வெகுவாகக் கவலைப்பட்டார் அனிதா.

''எங்க பசங்க சந்தோஷமா இருந்தா கைதட்டுவாங்க! ரொம்பச் சந்தோஷமா இருந்தா விஸில் அடிப்பாங்க. அவங்க உங்க புரோகிராமை என்ஜாய் பண்றாங்க அனிதா!'' என்றதும்தான் அனிதாவின் முகத்தில் மகிழ்ச்சி பரவியது...'' என்றார் விஜயகுமாரி.

“பொதுவாக, இந்த நாட்டிய நாடகம் சபாக்களில் அரங்கேறும்போது, உயர் ரசனை கொண்டவர்கள் எங்கெல்லாம் கைதட்டுவார்களோ, எதையெல்லாம் ரசிப்பார்களோ அதை 'சிவசக்தி'வாசிகளும் ரசித்தனர். அர்த்தநாரீஸ்வரர் டான்ஸ், மாடு-கன்று டான்ஸ் போன்றவற்றுக்கு ஒன்ஸ்மோர் கேட்டது ஆச்சரியமாக இருந்தது. ஆடியன்ஸ் நடுவிலிருந்தே, திருக்கல்யாண ஊர்வலம் உலாவரும்போது, பெருமாள் - தாயாரைப் பார்த்து வணங்கவும் செய்தார்கள். அந்தக் குழந்தைகளின் சந்தோஷம்தான் என்னுடைய மார்கழி சந்தோஷம்'' என்று அனிதா சொல்ல...

''சினிமா, பாட்டு, டான்ஸ் போன்ற நிகழ்ச்சிகளைத்தான் விரும்புவார்கள் என நாமாகவே நமது குழந்தைகளின் ரசனையைக் குறைவாக எடைபோட்டு விட்டோமே என ரொம்பவே வருத்தமாயிருக்கு. தெய்வத்துக்கு மிக அருகில் இருக்கும் உயிர்ச் சித்திரங்களுக்கு தெய்விகக் கலையான பரதத்தைப் பிடிக்காமல் போகுமா? என்று நெஞ்சம் நெகிழ்ந்தேன்'' என்கிறார் விஜயகுமாரி!

- அம்ருலு

ஆஹா 50!



மார்கழி மாதம் கோலங்கள் போட விசேஷமான மாதம். கோலம் போடுவதற்கு முன் வாசல் தெளிக்கையிலே,

“கங்கை நீரே, கோதாவரியே
கோளப்படி சாணமே
அள்ளித் தெளிக்கின்றேன்
ஐஸ்வரியம் பெருக வேண்டும்
கரைத்துத் தெளிக்கின்றேன்
கைலாசம் சேர வேண்டும்
இருளோடு போ மூதேவி
பொருளோடு வா ஸ்ரீதேவி”

என்று சொல்லியவாறே வாசல் தெளிக்க வேண்டும். சாணி இல்லாமல் வாசல் தெளிக்கக் கூடாது.

கங்கையும், கோதாவரியும் வற்றாத ஜீவநதிகள். அரிசி மாவினால் கோலமிட, மஹாலக்ஷ்மி மனமகிழ்ந்து நம் இல்லம் நுழைவாள்.

- சியாமளா ராஜகோபால், சிட்லபாக்கம்.



கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்
பருத்தி பட்டின் கோடி அழகு
கோ-ஆப்டெக்ஸ்
வழங்குகிறது
30%
அரசுத் தள்ளுபடி
பருவகால வண்ணமயமான வண்ணங்களால் இந்த ஆண்டை ஒளிமயமாக்கிடுங்கள்.
கோ-ஆப்டெக்ஸில் கண்கவர் பட்டு, பருத்தி ஆடைகளுக்கான துணிவகைகள் 30% அரசுத் தள்ளுபடியுடன் இந்நாள் நிச்சயம் உங்களை பரவசப்படுத்திடும்.
ஏன் இன்னும் உங்களுக்கு தயக்கம்?
புதிய வருகை
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

''இட்ஸ் வெரிகுட்...!'' என்று அந்த லட்டைச் சுவைத்தாள் ஜூடித்...

''என்னடி சொல்றா? அவளுக்குப் பிடிச்சிருக்காமா?'' சமையலறையிலிருந்தபடியே சுசியின் அம்மா கேட்க..

''ரொம்ப நல்லாருக்காம் நீ செஞ்ச லட்டு...'' என்ற சுசி... தனது அமெரிக்க தோழியிடம்,

''இட்ஸ் மேட் ஆஃப் உரத் தால்...'' என்று உளுத்தம் பருப்பை கையில் வைத்து நீட்டினாள்.

''உளுத்துப் போன உடம்பைத் தேற்ற உளுந்துதான்... அவகிட்ட சொல்லு சுசி...'' என்றாள் அம்மா.

''ஆஹா! அப்படியே அவளுக்குப் புரிஞ்சுடும்... கொஞ்சம் இரும்மா... நான் சொல்ற விதத்துல சொல்றேன்...'' என்ற சுசி, உளுந்தின் மகிமையைச் சொல்ல ஆரம்பித்தாள். நேற்று அவள் விரும்பி விரும்பிச் சாப்பிட்ட இட்லி, தோசையில் உளுந்தின் ஆக்கிரமிப்புப் பற்றி விளக்கினாள்.

''வாவ்!'' ''ஆஸ்ஸம்!'' என்று பிரமித்த ஜூடித்தின் பிளந்த வாயில் அப்பளம் ஒன்றை வைத்து அடைத்தாள் சுசி!



அழகுக்கு...

✱ வெள்ளரிக்காய் 2 துண்டு எடுத்துக்குங்க. 2 ஸ்பூன் உளுந்து (சிறிது நேரம் ஊறியது) சேர்த்து மைய அரைச்சு கண்ணுக்கடியில் தடவினால், கருவளையம் காணாமல் போகும்.

✱ முழு உளுத்தம் பருப்பு 2 ஸ்பூன் எடுத்து முதல் நாள் இரவில் புளிச்ச தயிர்ல ஊறவையுங்க. அடுத்த நாள் காலையில் அரைச்சு, 2 ஸ்பூன் சீயக்காய்த் தூள், மூணு அல்லது நாலு சொட்டு ஷாம்பு விட்டுத் தலையில தேய்ச்சு அலசினா... 'கருகரு' கூந்தல்தான்!

✱ இதே மாதிரி முதல்நாள் ஊறவைச்ச உளுத்தம் பருப்புடன் செம்பருத்தி இலை, பூந்திக்கொட்டை கொஞ்சம் சேர்த்து அரைக்கவும். தலையில் பத்து நிமிஷம் ஊறவைச்சு நல்லா மசாஜ் செய்து அலசி

உளுக்காமல் இருக்க உளுந்து!



னால் கூந்தல் செழித்து வளரும்.

சரி, ஒண்ணுமே இல்லையா... தயிர்ல ஊறவைச்ச உளுந்தோட கொஞ்சம் கறிவேப்பிலை சேர்த்து அரைச்சு, தலையில தேய்ச்சுக் குளிச்சாலும் கூந்தல் பளபளக்குமே!

✱ நெத்தியில குங்குமம், ஸ்டிக்கர் பொட்டு வச்ச இடத்தில அலர்ஜிக் கறுப்பா? வறுத்தரைச்ச உளுத்த மாவு இருக்கும் இல்ல, அதோட அரை ஸ்பூன் கடலை மாவு கலந்து தடவுங்க. கறுப்பு திட்டுப் போயிடும்!

ஆரோக்கியத்துக்கு...

★ உளுந்து இடுப்புக்கு நல்ல பலம் என்கிற விஷயம் நம்ப தாய்மார் எல்லாருக்குமே தெரிஞ்ச விஷயம். அதனாலதானே வயசுக்கு வந்த பெண்ணுக்கும் பிரசவிச்ச பெண்ணுக்கும் மணக்க மணக்க உளுத்தங்களி செஞ்சு தராங்க!

உளுந்தை நல்லா அரைச்சு, நிறைய நல்லெண்ணெய், நெய் விட்டுக் கிளறுகிற களிதான்! இடுப்பு எலும்புக்கு அவ்வளவு பலம்!

உளுந்து ரெஸிபிகள்

உளுத்த மாவு லட்டு

தேவையான பொருள்கள் :
உளுத்தம் பருப்பு - 1 கப், வெல்லம் [அ] சர்க்கரை - 1½ கப்,
ஏலக்காய், முந்திரிப் பருப்பு - தேவையான அளவு.

செய்முறை : உளுத்தம் பருப்பைச் சிவக்க வறுத்து, பொடி செய்யவும். வெல்லம் அல்லது சர்க்கரைப் பொடி செய்து கலந்து, நிறைய நெய் விட்டு ஏலம், முந்திரிப் பருப்பு சேர்த்து உருண்டைகள் பிடிக்கவும்.

சர்க்கரைப் பாகு அல்லது வெல்லப்பாகு வைத்து உளுத்தம் பருப்பு மாவைக் கொட்டிக் கிளறியும் உருண்டைகள் பிடிக்கலாம்.

உளுந்து வடை

அனுமார் கோயில்ல பிரசாதமா கொடுக்கிற வடைதான் எத்தனை ருசி! அதை விட்டிலேயே செஞ்சு பாருங்களேன்!

தேவையான பொருள்கள் :
உளுத்தம் பருப்பு [ரவை போல உடைத்தது]- 1 கப்,
மிளகுத் தூள்
[ஒன்றிரண்டாக உடைத்தது],
உப்பு, பெருங்காயம்.

செய்முறை : உடைத்து வைத்திருக்கும் உளுத்தம் பருப்பில் தேவையான அளவு உப்பு, மிளகுத் தூள், பெருங்காயம் சேர்த்து பத்து நிமிடம் [போதும்] ஊறவைக்கவும். எண்ணெய் காய வைத்து, மெல்லிய வடைகளாகத் தட்டிப் பொரித்து எடுக்கவும்.

- பத்மினி பட்டாபிராமன்
படங்கள் : ஸ்ரீஹரி



ராஜம் முரளி



என் செல்வமே



பாட்டி : எஸ். நீங்கோதை
பேத்திகள் :
எஸ். பவதாரிணி, எஸ். ஷாலினி





தாத்தா : உபேந்திரன்
பாட்டி : சுசீலா
பேத்தி : தன்யா






தாத்தா : சோமசுந்தரம்
பாட்டி : கோமளா
பேரன் : எஸ். ஆகாஷ்





தாத்தா :
வெங்கடசுப்பிரமணியன்
பாட்டி : சரோஜா
பேரன் : வெங்கடசாப
விஸ்வேஷ்வர்





தாத்தா : வி. சங்கரன்
பாட்டி : கஸ்தூரி
பேத்திகள்: சஹானா, ஸ்ருதி



நீ ஜீரகம், நான் வெல்லம்!

ஆந்திர தேசத்திலே மாங்கல்ய தாரணத்தோடு 'ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே' என்று முகூர்த்தம் முடிந்துவிடாது. ஜீரகத்தையும், வெல்லத்தையும் சேர்த்து அரைப்பார்கள். அதை பெண் - மாப்பிள்ளை கையில் கொடுத்து ஒருவருக்கொருவர் உச்சந்தலையில் வைக்கச் சொல்வார்கள். இடையிலே திரை பிடித்திருப்பார்கள். அதுதான் முகூர்த்தம்! அந்த நேரத்திலே மகாசங்கல்பங்களெல்லாம் சொல்வார்கள். ஜீரகம் ஒரு ருசி; வெல்லம் இன்னொரு ருசி, இரண்டும் கலந்து இழைகின்றன. அதைப் போலவே இரண்டு பேரும் கலந்து இழைய வேண்டும் என்பது ஐதிகம்.

அதுமட்டுமல்ல... கல்யாணத்திலே உட்காருவதும், எழுந்திருப்பதும், சேவிப்பதுமாக இருப்பதால் சிலருக்குத் தலைச்சுற்றல் போன்ற உபாதைகள் வரும். வைத்திய சாஸ்திரப்படி ஜீரகத்தையும், வெல்லத்தையும் அரைத்து உச்சந்தலையில் வைத்தால் வெப்பம் தணியும்.

இன்றைக்கும் பெருமாளுக்கு வேங்கடத்திலே, பத்ராசலத்திலே கல்யாண உத்சவம் நடத்தும் போதும் இந்த ஜீரக - வெல்லச் சடங்கு நடக்கிறது.

- வத்சலா சதாசிவன், சிட்லபாக்கம்.

சர்வஜித் பெண்-6



1960களில் ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மாதச் சம்பளம் சுமார் 1500/- ஆக இருந்தபோது, முப்பது வயது இளம்பெண் ஒருத்திக்கு அதைவிட பல மடங்கு வருமானம் வந்தால் பொதுவாக அவள் என்ன செய்வாள்? வீட்டு மனைகள், வைர நகைகள் என்றுதானே வாங்கிக் குவிப்பாள்? ஆனால் திருநெல்வேலி எம்.டி. கண்ணா, ரொம்பவே வித்தியாச மானவர். திருமணமே செய்து கொள்ளாமல், தாம் சம்பாதித்த அத்தனையையும் தான தருமம், கோயில் பணிகள் என நற்காரியங்களுக்காகவே செலவழித்துக் கொண்டிருக்கிறார்.

"ரொம்ப சந்தோஷம். பகவான் உனக்கு நிறைய தர்றாருன்னா, அது உனக்காக மட்டும் தரலை. நீ அதை கஷ்டப்படற மத்தவங்களுக்கும் தரணும்னுதான் கொடுக்கிறார்"



* திருமுருக கிருபானந்தவாரியாருடன்...



* அமர்சேவா சங்க ராமகிருஷ்ணனுடன்...

கனவு

"எங்கம்மா செண்பகம் மாள், சின்ன வயசுல சாப்பாட்டுக்கே கஷ்டப் பட்டிருக்காங்க. கோயில்ல கொடுக்குற உண்டக்கட்டியைச் சாப் பிட்டு வளர்ந்திருக்காங்க. அவங்களுக்கு 13 வயசானபோது, எங்கப்பாவுக்கு இரண்டாந்தாரமா வாழ்க்கைப் பட்டாங்க. எங்கப்பா துரைஸ்வாமி அய்யங்கார், திருவாங்கூர் சமஸ்தானத்துல முதன்மை இன்ஜினியரா இருந்தவரு. எங்கம்மாவுக்கும் அப்பாவுக்கும் 35 வருஷ வித்தியாசம். ஆனா, எங்கப்பா அம்மாவை மகாராணியைப் போல வெச்சிருந்தாராம். பத்து வருஷத்துல நான்கு குழந்தைகள் பிறந்துடுச்சு. ஒருநாள் திடீர்னு அப்பா மாரடைப்புல இறந்து விட்டார். எங்கம்மா விதவை ஆனப்போ, அவங்களுக்கு 23 வயசு!

அக்காவுக்குக் கல்யாணமாச்சு. நான்

இன்டர்மீடியட் படிச்சிருந்தேன். என்னை என் தாய்மாமாவுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க எங்கம்மா துடிச்சாங்க. ஆனா, நான் கணவன், குடும்பம்னு எல்லாரையும் போலச் சின்ன வட்டத்துக்குள்ள சிக்கிக்க விரும்பலை. குடும்பத்தை எதிர்த்துக்கிட்டு சென்னைக்கு வந்துட்டேன்.

ஹாஸ்டலில் என்னுடன் தங்கியிருந்த ஜானகிபாய் என்பவர், என்.எஸ்.ஸி.,

ஒரு தோள்பையுடன் இறங்கி விட்டேன். முதலில் என்னைப் பார்த்தாலே, நாயை விரட்டுவது போல விரட்டுவார்கள். நான் விட மாட்டேன். மறுபடி போவேன். ''எம்மா... நான் தான் வேணாம்னு சொன்னேனே!'' என்பார். ''அது போன மாசம் சார். இப்ப உங்க மனசு மாறியிருக்கலாம் இல்லையா?'' என்பேன்

* பானகநரசிம்மருக்கு சங்கு காணிக்கை...





மெய்ப்பட வேண்டும்!

ஏஜெண்ட் வேலையை வாங்கித் தந்தார். அதாவது, தேசிய சேமிப்புப் பத்திரங்களைச் சேகரிக்கும் முகவர் வேலை! ஏஜெண்ட்டுக்கான ஃபோட்டோ எடுக்க அவருடன் போன போது கூட, வேண்டாவெறுப்பாகத்தான் போஸ் கொடுத்தேன், என் வாழ்வில் ஏற்படவிருக்கும் மாபெரும் திருப்பத்தை உணராமல்!'' என்று சின்ன சஸ்பென்ஸோடு நிறுத்தினார் எம்.டி.கண்ணா.

''சென்னையே எனக்குப் புதுசு! என்னிடம் சேமிப்புப் பத்திரங்களை யார் வாங்குவார்கள்?'' என்று ஆரம்பத்தில் மலைத்து நின்றேன். ஆனால் துணிவே துணைன்னு,

பணிவாக! அப்பவும் விரட்டுவார். நான் சோர்ந்து போக மாட்டேன். மறுபடி போய் நிற்பேன். எறும்பு ஊர கல்லும் தேயுமே! அரை மனசோடு சேருவார்கள். அதற்குப் பின் என்னுடைய அணுகுமுறை, நயமான சேவை போன்றவற்றைப் பார்த்து மகிழ்ந்து, அவர்களே புதிய நபர்களை அறிமுகப் படுத்துவாங்க.

கோகோ கோலா உரிமையாளர் மல்ஹன் என்பவரிடம் அறுபதாயிரத்துக்கு பத்திரங்கள் விற்றதில் 750 ரூபாய் கமிஷன் கிடைத்த போது, அப்படியே வானத்தில் பறந்து பஞ்சாகி விட்டேன். அவ்வளவுதான்! வெறி பிடித்தது போல, அப்படி ஓர் உழைப்பு.

கொளுத்தும் வெயிலோ, கொட்டும் மழையோ... நான் பாட்டுக்குத் தோள் பையுடன் சுற்றியலைந்தேன். பல நாட்கள் டீ மட்டுமே கூட சாப்பிட்டுஅலைவேன். அதற்கான பலனும் கிடைத்தது. ஒன்றல்ல... இரண்டல்ல... சுமார் 15 வருஷம், மாநிலத்திலேயே நம்பர் ஒன் ஏஜெண்டாக இருந்தேன். அப்புறம் எல்.ஐ.சி., யு.டி.ஐ. போன்றவற்றிலும் ஏஜெண்ட் ஆனேன். அதிலும் டாப்டென்னில் இடம்பிடிச்சு நிறைய பரிசுகள் வாங்கினேன்!'' என்ற கண்ணா, சிறு குழந்தை போல அத்தனையையும் ஆர்வத்தோடு காட்டினார்.

''லட்சக்கணக்கில் பணம் சேர்த்த ஏஜெண்ட் பெண்ணான நீங்க, வாரி வாரி வழங்கும் ஏஞ்சல் பெண்ணாக மாறியது எப்படி?''

''வாரி வாரி எல்லாம் வழங்கலை. அதெல்லாம் ரொம்பப் பெரிய வார்த்தை. என்னால முடிஞ்சதை தர்றேன். அவ்வளவுதான்!'' என்று அடக்கத்தோடு ஆரம்பித்தார்.

''எனக்குச் சிறு வயதிலிருந்தே மகாஸ்வாமிகள்தான் கண்கண்ட தெய்வம். ஒரு முறை தேனம்பாக்கத்துக்கு அவரைத் தரிசிக்கப் போயிருந்தேன். சில விநாடிகள் என் கண்களை மட்டுமே பார்த்து நயன தீக்ஷை வழங்கி அருளினார். அந்தச் சிறு மணித்துளிகளில் நான் புகையாய்க் கரைந்து விட்டிருந்தேன்.

''சுவாமி.. நான் இப்ப நல்லா இருக்கேன். நிறைய சம்பாதிக்கிறேன்''னு சிறு குழந்தை போல குதூகலமாகச் சொன்னேன். அதுக்கு அவர், ''ரொம்பச் சந்தோஷம். பகவான் உனக்கு நிறைய தர்றாருன்னா, அது உனக்காக மட்டும் தரலை. நீ அதைக் கஷ்டப்படற மத்தவங்களுக்கும் தரணும்னுதான் கொடுக்கிறார்'' என்றார். அந்த வார்த்தைகள் என் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டன.

அடுத்த முறை சென்ற போது, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜும் என் சித்தப்பாவுமான ராஜகோபால அய்யங்காருடன் போயிருந்த போது, தான் புதிதாகக் கோயில் கட்டிக் கொண்டிருப்பதைச் சொல்லி மகாஸ்வாமிகளிடம் ஆசி கோரினார்.

அதற்கு பரமாச்சாரியார், ''புதுசுப் புதுசா கோயில் கட்டறதை விட, சிதிலமடைஞ்சு போயிருக்கிற பழைய கோயில்களைப் புதுப்பிச்சு, புனர் உத்தாரணம் செய்யலாமே!'' என்றார்.


அதுவும் என் மனத்தில் பதிவானது.

காஞ்சிபுரம் மடத்தை விட்டு வெளியே வந்த போது, என் மனசுக்குள் இரண்டு தீர்மானங்கள் சம்மணமிட்டு அமர்ந்திருந்தன.

ஒன்று... மக்கள் சேவை... இரண்டாவது மகேசன் சேவை...

அன்றைக்கு ஆரம்பித்ததுதான். இதோ உங்களிடம் பேசிக் கொண்டிருக்கும் இந்த நிமிஷம் வரை, எனக்கு என எதையும் எடுத்து வைத்துக் கொள்ளாமல் உதவிக் கொண்டேயிருக்கிறேன்!''

எம்.டி.கண்ணா, பற்பல சமூக அமைப்புகளுக்கு ஓசையில்லாமல் நிதியுதவி அளித்து வருவதால், அவற்றை நம்மிடம் வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூட



* திருப்பணிக்கு முன்...

வெகுவாகத் தயக்கம் காட்டினார்.

தென்காசி ஆயக்குடி அமர்சேவா சங்கத்துக்கு இடம் வாங்க, சென்னையில் இருந்த தமது வீட்டை விற்று நிதியுதவி அளித்துள்ளார். மாற்றுத்திறன் கொண்டவர்களின் காப்பகத்துக்குக் கணிசமாக உதவியது, திருநெல்வேலி அவ்வை ஆசிரமப் பணிகள், முத்துக்

கிருஷ்ணா பெண்கள் நலவாழ்வு மையத்துக்குப் பொருளுதவி என பெரிய பட்டியலே அகப்படுகிறது.

சுரண்டை பராசக்தி மெட்ரிகுலேஷன் பள்ளி, சதக் அப்துல்லா கல்லூரி, சேவியர் கல்லூரி, ஸ்ரீ சாரதா கல்லூரி, குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி என மதபாகுபாடின்றி கல்வி உதவிகளை வழங்கி வருகிறார் கண்ணா.



• இப்போதைய தோற்றம் (வரதராஜ பெருமாள் கோயில்
(கீழ்த் திருப்பதி)



கண்ணாவின் சேவைகளில் ஹைலைட் என பலரும் கருதுவது, திருநெல்வேலியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இந்திரா நகரைத் தத்தெடுத்ததுதான்!

கடா வெட்டி பலி கொடுத்துக் கொண் டிருந்த கோயிலில், இன்று பவித்ர சேதன்யா ஸ்வாமிகள் வந்து பக்திப் பாடல்களையும் ஸ்லோகங்களையும் சொல்லிக் கொடுத்திருக்கிறார் என்றால், கண்ணாவின் கனிவான வார்த்தைகளில் இருந்த மாபெரும் சக்திதான் காரணம் என அந்தப் பகுதி மக்களே சிலாகிக்கிறார்கள்.

''கோயில் திருப்பணிகள் நான் மட்டுமே செய்யக்கூடியவை அல்லவே! லட்சக்கணக்கில் செலவாகும் என்பதால், உதவும் மனமுள்ள பல நல்ல உள்ளங்களை அணுகுவேன். அவர்களும் என் மீது உள்ள நம்பிக்கையால் நன்கொடைகள் தருவார்கள்.

என் கையால் ஒரு பைசாவைக் கூட வாங்கிக் கொள்ள மாட்டேன். சம்பந்தப்பட்ட அறப்பணியாளர்களிடமே தரச் சொல்வேன். இதனால் எத்தனையோ நல்ல காரியங்கள், நடந்துள்ளன. இவை எதுவுமே என்னால் முடிந்ததில்லை. பகவானே நடத்திக் கிறார்.''

எங்கோ விஜயவாடா அருகே இருக்கும் பானக நரசிம்மஸ்வாமி, இவரிடம் வலம் புரிச்சங்கை வாங்கிக் கொண்ட கதையைக் கேட்டால் ஆச்சரியமாக இருக்கிறது.

''கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு நேரடி ரயில் கிடைக்காததால், விஜயவாடாவில் நானும் என் அண்ணனும் இறங்கி, ரயில் மாற வேண்டியிருந்தது. இடையே கிடைத்த ஆறு மணி நேரத்தில், அருகில் உள்ள பானக நரசிம்மரைத் தரிசிக்கச் சென்றோம். கோயிலில் கூட்டமிருக்கவில்லை!



நற்பணி பெண்மணி எம்.டி. கண்ணாவை அடையாளம் காட்டிய திருநெல்வேலி வாசகி என். கோமதிக்கு நன்றி.

''மாமி... நீங்க தமிழ் ஆளா? இந்த நரசிம்மர் எவ்வளவு பானகம் வைத்தாலும் குடிச்சுடறார். இந்தச் சின்ன சங்கால கொடுத்து மாளலை. கன்னியாகுமரியில பெரிய வலம் புரிச்சங்கா வாங்கித் தந்தா, பெருமாள் கைங்கரியமா இருக்கும்!'' என்றார், அங்கிருந்த பிரதான பட்டாச்சாரியார் ஒருவர்.

நானும் ஆகட்டும் என்று மகிழ்ச்சியுடன் சம்மதித்தேன். மறு வாரமே, கன்னியாகுமரி போய் அலைந்துத் தேடினேன். யாரிடமும் நான் நினைச்ச அளவுக்குப் பெரிய வலம்புரிச் சங்கு இருக்கவில்லை. இறுதியாக, ஒரு கடையில், ஒன்றரை அடி நீளமுள்ள மிகப் பெரிய வலம்புரிச் சங்கு கிடைத்தது.

''குறைந்தபட்சம் அரை லட்சமாவது கேட்பான். காதுல இருக்குற வைரத் தோட்டைக் கழற்றிக் கொடுத்துட வேண்டியது தான்'' என்று நினைச்சேன்.

ஆனா அவனோ, ''கையில இருக்குறதைக் கொடுத்துட்டு எடுத்துட்டுப் போ பெரீம்மா!'' என்றான் அசிரத்தையாக.

என் கண்ணையே நம்ப முடியவில்லை. இரண்டாயிரத்து நானூறு ரூபாயை அவன் கையில் வெச்சுட்டு, திருநெல்வேலிக்கு ஓடி வந்தேன். இரண்டு கிலோ வெள்ளியில் பூண், பீடம் எல்லாம் செய்து, பானக நரசிம்மர் கோயிலுக்குப் போனோம். அங்கே எனக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

''இந்தக் கோயில்ல தமிழ் பேசற பட்டாச்சாரியர் யாருமே இல்லையே! உங்களை வலம்புரிச்சங்கு யார் கேட்டது?'' என்று அறநிலையத் துறை அதிகாரிகள் கேட்டனர்.

கோயிலில் பணியில் இருக்கும் அத்தனை பேரையும் அழைத்து வந்து காட்டினார்கள். நாங்கள் பார்த்த அர்ச்சகர் இருக்கவில்லை.

நான் மட்டும் இருந்திருந்தாலாவது ஏதோ பிரமை என்று ஒதுக்கிவிடலாம். ஆனால் என்னுடன் வந்த அண்ணன்' அவருக்குமா மனபிரமை?

மறு வாரம், வேறு ஒரு கோயிலுக்கு சங்கு தேடி கன்னியாகுமரி போனபோது, நான் பார்த்த கடையும் இல்லை! அப்படி ஒரு மீனவனும் கிடைக்கவில்லை!

எனக்கு ஆனந்தத்தில் மெய்சிலிர்த்தது. விஜயவாடாவில் இருக்கும் பெருமாள், எங்கோ பாளையங்கோட்டையில் இருக்கும் என்னைத் தேர்ந்தெடுத்து தனக்குத் தேவையானதைச் சாதித்துக் கொண்டாரே! எவ்வளவு கொடுப்பினை!'' என்கிறார் எம்.டி. கண்ணா!

'ஆன்மிக ரத்னா', 'சமூக சேவாமணி', 'தர்மாதிகாரி' 'மனிதநேய மாண்பாளர்' என நிறையப் பட்டங்கள் பெற்றிருக்கும் இவர், ஏதேனும் பணமுடிப்பு வந்தால் அதையும் அந்த அரங்கிலேயே சமூகசேவைக்கு வழங்கி விடுகிறார்.

''இவ்வளவு பெரிய வீட்டில் தனியாகவா இருக்கீங்க?'' என்றால்...

''இல்லையே! என் கூட மகாஸ்வாமிகள் இருக்காரே!'' என பதில் வருகிறது.

வீடு முழுக்க காஞ்சி முனிவர், மற்றும் சத்யசாயி பாபாவின் திருஉருவப் படங்கள்.

''ஏதோ செய்றேன். சேவை எனக்கு நானே இட்டுக் கொண்ட பணி. கடவுளை வேகமா அணுக எனக்குத் தெரிஞ்ச ஒரு வழி! அதுக்கு பாராட்டும், பப்ளிசிட்டியும் தேவையா? என்னை ஊக்குவிச்சு இனிமே என்ன ஆகப் போகுது? ஆன்மிகத்திலும் அறப்பணியிலும் ஈடுபட்டிருக்கிற சின்ன வயசுக்காரங்க எத்தனையோ பேர் இருக்காங்க. அவங்களை பேட்டி எடுங்களேன்!'' என்று நமக்கு யோசனை சொல்கிறார் கண்ணா ஆன்ட்டி, கண்ணா மாமி என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்படுகிற கண்ணா அம்மா!

- அனுராதா சேகர்



சௌபாக்யா
சௌபாக்யா வந்த பிறகு நான் ரொம்ப சோம்பேறி ஆகிட்டேன்னு என் கணவர் சொல்றார்!
6 Years Warranty
Sakthi
SWATHI
maa
Shree
110v AVAILABLE FOR USA AND CANADA
SOWBAGHYA®
AN ISO 9001:2000 CERTIFIED COMPANY
32A North Usman Road, T Nagar, Chennai - 600017
Tel: 044-28341760/28342908.
Branch Office: 5 Hasthinapuram Main Road,
Chrompet, Chennai. Tel: 22234420
Erode: 314 Perundurai Road, Erode. Ph: 0424 2260245/2269965
ADSMITH
சௌபாக்யா இருக்கட்டும்... சௌபாக்யமும் கிடைக்கட்டும்...

திருவிளக்கே... நமஸ்காரம்!



❁ திரியை விளக்கில் போடுவதற்கு முன்னர் அத்திரியின் இரண்டு அல்லது மூன்று இழைகளை (நூல்களை) ஒரு சாதாரண அரிசி நீளத்திற்கு வெளியில் இழுத்துக் கொள்ள வேண்டும். பிறகு திரியை விளக்கில் போட்டு, திரி எண்ணெய்யை உறிஞ்சிய பின்னர் விளக்கேற்றினால், ஒரே தீக்குச்சியில் குத்துவிளக்கின் ஐந்து முகத்தையும் தீபம் ஏற்றிவிடலாம்!

❁ எண்ணெயோடு உள்ள திரியின் நுனியை (ஒரு சிட்டிகை பொடி போடுவது போல்) அப்படியே அமுக்கினால் எண்ணெய் பிழியப்பட்டு விடும். உடனே அதே வாக்கில் திரியை வானத்தை நோக்கி நிமிர்த்தி வைத்துவிட்டு உடனே திரியில் நெருப்பைப் பற்றவைத்து விட்டால் பொதுவாக அரைமணி எரியும் தீபம் நின்று ஒரு மணி நேரம் கூட விளக்கு எரியும். ஒரு சொட்டு எண்ணெய் கூட வழியாது! (திரியை விளக்கின் உதடுகளில் படுக்க வைக்கக் கூடாது).

❁ தீபம் ஏற்றும் போது சிறியதாய் எரியவிட வேண்டும். சுடரிலிருந்து புகை வரக் கூடாது. அது வீட்டுக்கு ஆகாது.

❁ ஒவ்வொரு நாளும் தீபம் ஏற்றும் போது புதிய திரிதான் போட வேண்டும். நாம் ஓரிடத்தில் உட்காரப் போனால் துணியால் அல்லது கையால் தரையைத் துடைத்து விட்டு உட்காருகிறோம். அப்படியிருக்க அக்னி பகவானை பழைய திரியின் கரியில் உட்கார வைக்கலாமா? சிக்கனம் வேண்டுமானால் திரியின் நீளத்தைக் குறைத்துக் கொள்ளலாம். வீட்டுக்கு மங்களம் உண்டாக வேண்டுமெனில் புதிய திரிதான் போட வேண்டும்.

- கே. மோகன கல்யாண், குடவாசல்.

ஜெயஸ்ரீ ராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி-2007
ரூ.1000/- பரிசு பெறும் பிரசுரக் கதை

''உங்க ஃப்ரெண்டு சிவப்பிரகாசம் ஃபோன் பண்ணினாரு!'' என்றாள் என் மனைவி. அப்பொழுதுதான் அலுவலகத்திலிருந்து வீட்டினுள் நுழைந்திருந்தேன்.

''என்னவாம்?'' என்றேன் முகத்தைத் தண்ணீரால் அறைந்து கொண்டு.

''அவரோட அப்பா காலமாயிட்டாராம்!''


''என்னது?'' என் கைச்சொம்பு நழுவி வாளியில் விழுந்தது.

''நீங்கன்னா அவருக்குத் தனி பிரியமாச்சே! அதான்!''

''சரி, வரியா புறப்படலாம்?'' - இருவரும் கிளம்பி விட்டோம்.

பஸ்ஸுல போகும்போது சிவப்பிரகாசம் பற்றித்தான் பேச்சு.

''பாவங்க, உங்க ப்ரெண்டு குரல்ல அப்படி ஒரு சோகம். துக்கத்தால



''ஆமாம், இன்னிக்குக் காலை பதினோரு மணிக்கு இறந்துட்டாராம். நாளை காலை ஏழு மணிக்கு எடுக்கறாங்களாம்.''

''பிரகாசமேவா பேசினான்?''

''ஆமாம். ஏன்?''

''இல்லை. தகப்பனை இழந்தவன். பாவம் அதை தானேவா சொல்லணும்? எத்தனையோ பேர் இருப்பாங்களே துக்க வீட்டில்? அவங்களை விட்டுச் சொல்லக் கூடாதா, பாவம்?''

கம்மிப் போய், வார்த்தைல தெளிவில்லை! என்னதான், வயசானவர்னாலும், அப்பா உறவு அற்புதம்தான்!''

நான் சிரித்து விட்டேன். அவள் என்னை வினோதமாய்ப் பார்த்தாள்.

''சிரிக்கிற விஷயமா இது? எதுக்கு இந்தச் சிரிப்பு?'' என்று பல்லைக் கடித்தாள்.

''அழுதான்னியே பிரகாசம். அவன் அழுகைக்கு அர்த்தமே வேற!''

''என்னது?''



எஸ்.கமலா



விஷக்கொட்டு!

''ஆமாம். அவன் அப்பா இறந்ததுக்காக அழுதிருக்க மாட்டான். கஷ்டப்படாம போய்ச் சேர்ந்துட்டாரேன்னுதான் அழுதிருப்பான்!''

''என்ன?''

''ஆமாம். நிஜம் அதுதான். உண்மையில் அவுங்க அப்பா இறந்தது அவனுக்கும், அவங்க அம்மாவுக்கும் கெடைச்ச மிகப் பெரிய விடுதலை. நிம்மதி. அழுத்திய சுமையை, இறக்கி வச்ச மாதிரி அப்பாடா பெருமூச்சு தான்! ஆனா அதுக்கு முன்னாடி பாடுபட்டு, துடிதுடிச்சுச் சாகணும்னு வேண்டிக்கிட்டே இருந்தான். படுத்துக் கெடந்து, புழுத்து, படாதபாடுபட்டுச் சாகணும்னு ரொம்ப எதிர்பார்த்தான். அது நடக்காம திமிர்னு இறந்து போனதுல அவனுக்கு நியாயம் கிடைக்காமலே போச்சேன்னு நினைச்சிருப்பான். அந்த ஏமாற்றம்தான் அவனோட வேதனைக்குக் காரணம்!''

''என்னது நம்பவே முடியலையே! பெத்த தகப்பனார் மீது இத்தனை குரோதமா?''

''தகப்பனா இருந்தாலும், யாரா இருந்தாலும் வார்த்தைச் சூட்டை ஓரளவுக்குத்தான் பொறுப்பாங்க, பொறுக்க முடியும். இவன் அப்பாவோட வார்த்தை ஒவ்வொண்ணும் விஷக் கொட்டு. தேள் கொடுக்கை விஷத்துல தோய்ச்சுக் கொட்டற மாதிரி இருக்குமாம்! சவுக்கு நுனி, பாம்புப் பல், மூங்கில் முள், பழுக்க வைச்ச கரண்டி, கூர் ஊசி - எதைச் சொன்னாலும்

அந்த வார்த்தையின் குரூரத்துக்கு முன்னாடி எல்லாம் மழுங்கித்தான் போகும். அத்தனை விஷம். என்னோட ஹாஸ்டல்ல தங்கி இருக்கும்போதுகூட, வீட்ல அம்மா இந்த கிராதகன் வார்த்தைகளில் என்ன துடிதுடிக்கிறாளோன்னு நினைச்சு நினைச்சு மருகுவான். இயல்பா, அமைதியா அவன் இருந்து பார்த்ததே இல்லை. எப்பவும் பயத்தோடவும், படபடப்போடவும்தான் இருப்பான்."

"பெத்த அப்பாவைக் கண்டு இத்தனை பயமும் வெறுப்புமா? அத்தனை கொடூரமான வார்த்தைகளா? ஏன்?"

"இவங்கம்மாவுக்கு இவர் இரண்டாவது புருஷன். இவங்க அம்மாவோட அப்பா, அதாவது பிரகாசத்தோட தாய் வழி தாத்தா, பெரிய பணக்காரராம். ஒரே பெண்ணை நல்ல மாப்பிள்ளைக்குதான் பார்த்துப் பார்த்துக் கொடுத்திருக்கார். ஆனா, பாவம், அதே மாசத்துல, மாப்பிள்ளை மின்சாரம் தாக்கி செத்துட்டாராம். சொத்து இருந்து என்ன புண்ணியம்? பொண்ணு மூளியாயிருச்சேன்னு நினைச்சு உளுத்துப் போன மரமாயிட்டார்.

இப்ப வேணா விதவை மறுமணம் சகஜமானதா இருக்கலாம். ஆனா நாற்பது வருஷத்துக்கு முந்தி அது ரொம்ப புதுமை, புரட்சி! அந்த நேரத்துலதான் இப்ப செத்துப் போனாரே ரத்னவேலு - அவர் அந்தப் பொண்ணை ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்க முன் வந்திருக்காரு. பெண்ணோட அப்பாவும் ஆறுதல் அடைஞ்சு, ரொம்ப நம்பிக்கையோட தன் மகளுக்கு மறுமணம் செய்து வச்சிருக்கார். தன் சொத்தையும் புதுமாப்பிள்ளை பேருக்கே எழுதிட்டு கண் மூடிட்டார்.

அதுக்கு அப்புறம்தான் புதுப் புருஷனோட சுயரூபம் தெரிஞ்சிருக்கு அந்தப் பொண்ணுக்கு. பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் அவன் தன்னை கல்யாணம் பண்ணிக்கிட்டான்ங்கற உண்மையை விடவும், அவனோட வக்ர புத்தியும், வார்த்தையால நோகடிச்சு அதை ரசிக்கிற அவனோட மிருக குணமும்தான் அவளை ரொம்பப் பாதிச்சிருக்கு. எப்படியோ பிரகாசமும் பிறந்துட்டான். இவன் மேலயும், இவன் அம்மா மீதும், கடுகத்தனை அன்பும், பரிவும்கூட கிடையாது அந்த மனிதருக்கு.

"எச்சே, எச்சே!" என்றுதான் கூப்பிடுவார். 'எச்சில்பட்டது; கைபட்டவள்'னு மட்டமா நடத்தினார் அவன் அம்மாவை. அந்த அம்மா நின்னா, நடந்தா, பேசினா, சிரிச்சா "அவன்ட்ட இப்படித்தான் இருப்பியா? அவனுக்கு இப்படி நடந்தாதான் பிடிக்குமா?"னு ஒவ்வொரு அசைவுக்கும் ஒரு சந்தேகக் கேள்வி.

நிமிஷத்துக்கு நிமிஷம் செத்துப் போன முதல் கணவனை ஞாபகப்படுத்தி, சம்பந்தப்படுத்தி ஊசி குத்தலாட்டம் பேச்சு.



வயதான பெரியவர்கள் வீட்டில் இருந்தால் அவர்களுக்குச் சின்னச் சின்ன பணிவிடைகள் செய்ய விளையாட்டுப் போல வீட்டில் உள்ள பத்து வயதுக் குழந்தைகளைப் பழக்குங்கள். தண்ணீர் எடுத்துக் கொடுத்தல், மாத்திரைக் கவர்களைப் பிரித்துக் கொடுத்தல், படுக்கை விரித்துப் போடுதல், பேப்பர் படித்துக் காட்டுதல் போன்ற சின்னச் சின்ன செய்கைகளால் அவர்களிடம் அன்பும், அந்நியோன்யமும் அதிகரிக்கும். அவர்கள் பெரியவர்களானால் பெற்றோர்களை மதிக்கும் மனப்பக்குவம் ஏற்படும்.

- கனகம் பொன்னுசாமி,
பெருந்துறை.

பச்சிளம் குழந்தையைப் பார்க்கச் செல்லும் போது, சிலர் அதன் கைகளில் ரூபாய் நோட்டுகளைப் பரிசாகக் கொடுப்பது வழக்கம். பலரது கைகளில் புழங்குவதால் நோட்டில் ஏராளமான கிருமிகள் இருக்கும். எனவே, ரூபாய் நோட்டை குழந்தையின் கையில் தராமல் பெரியவர்களிடம் கொடுக்கலாமே!

- தஸ்மிலா அஸ்கர், இராமநாதபுர மாவட்டம்.



உடுத்தற புடவையிலிருந்து, உண்ணுற உணவு வரை, தினம் ஆயிரத்தெட்டு குடைச்சல்.

''ஏன் இந்தப் பச்சைக் கலர் புடவையே அடிக்கடி கட்டற? அதுதான் அவனுக்குப் பிடிக்குமா?''

''பொரிச்ச குழம்புன்னா அவனுக்கு ரொம்ப இஷ்டமா?'' இப்படி.

இவனுக்கும், இவங்க அம்மாக்கும் இருட்டு குகைல மாட்டிக்கிட்ட தவிப்பு; 'எந்த மூலைலேருந்து மிருகம் எப்பப் பாயுமோ? எப்படிப் பிராண்டுமோ'ன்னு ஒவ்வொரு நொடியும் பயம், பயம், பயம் தான். பாவம். அவங்க இரண்டு பேருக்கும் பைத்தியம் பிடிக்காம இருந்தது பெரிய விஷயம். ஆனா ஊர்ல அவங்கப்பாக்கு நல்ல பேரு. ''விதவைக்கு மறுவாழ்வு கொடுத்த பரந்த மனசுக்காரன்''னு!'

சொத்தை எழுதிக் கொடுத்து, சித்ரவதையை விலைக்கு வாங்கினது இந்த உலகத்துலயே நாங்களாத்தான் இருப்போம்! பிரகாசம் நிறைய தடவைச் சொல்லி வருத்தப்பட்டிருக்கான். இன்னொன்னும் சொல்வான் அடிக்கடி. ''அவன் துடிதுடிச்சு சாகணும்பா. படுத்து, கெடந்து, புழுத்து, நாறி... படணும். சித்ரவதை, அத்தனையும் படணும். தேள் கொட்டறது போல என்னையும், எங்கம்மாவையும், சொல்லால கொன்னதுக்கு அவன் அனுபவிக்கணும். அனுபவிப்பான். இது நடக்கும், எங்க கண்ணீர் வீண் போகாது!'' இத ஒரு நூறு தடவையாச்சும் உறுதியா சொல்லியிருப்பான். பாவம். அவன் எதிர்பார்ப்பு ஈடேறலை போலிருக்கு. படுக்காம, கிடக்காம 'பட்டு'னு போயிட்டார் போலிருக்கு!'' என்று சொன்னேன்.

விடிந்தும், விடியாத புலர் காலைப் பொழுதில் சிவப்பிரகாசம் வீட்டை அடைந்தோம். வாசலில் போடப்பட்டிருந்த அவசரப் பந்தலில் ஐந்தாறு மரபெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. தூங்கி வழிந்து கொண்டு சிலர் உட்கார்ந்திருந்தனர். மர நாற்காலியில் அமர்ந்திருந்த சிவா, எங்களைக் கண்டதும் எழுந்தான். தோளோடு அணைத்துக் கொண்டு உள்ளே சென்றேன். நடுக்கூடத்தில் கிடத்தப்பட்டிருந்த பிரேதத்துக்கு, வாங்கி வந்திருந்த மாலையைப் போட்டேன்.

தலைமாட்டில் எரிந்து கொண்டிருந்த விளக்குக்குப் பக்கத்தில் அவன் அம்மா நிச்சலனமாய் அமர்ந்திருந்தார். என் மனைவி அவர் அருகில் சென்று கட்டிக்கொண்டாள். அவர் குரலெடுத்து கத்தவோ, குலுங்கி அழவோ இல்லை. அவர் முகத்தில் பேரமைதி குடிகொண்டிருந்தது.

கொஞ்ச நேரம் நின்றுவிட்டு, நானும், நண்பனும் வெளியே வந்தோம். யாரோ இரண்டு தம்ளர்களில் காப்பி கொண்டு வந்து நீட்டினர். ஆளுக்கு ஒன்றை எடுத்துக் கொண்டு, மூன்றாவது வீட்டு வாசலில் இருந்த வேப்பமரத்தின் கீழே நின்றோம்.

''எப்படி சிவா?'' என்றேன் காப்பியைக் குடித்துக்கொண்டே.

''நேத்தி காலம்பரப்பா. பின்னாடி

மூங்கிக் குத்துல முன்னு கழிச்சிட்டிருந் தாங்க. அப்பா குணம்தான் உனக்குத் தெரியுமே. வெத்தலைப் பெட்டிய மடியில வச்சுக்கிட்டு வரப்புல அட்டணி கால் போட்டு உட்கார்ந்து காய்தா பண்ணிட்டிருந்தார். அப்ப கழிச்சிட்டிருந்தவங்க, ''பெரியய்யா, இங்க பாருங்க, எவ்ளோ பெரிய கூடு!''ன்னு கூப்பிட்டுக் காட்டியிருக்காங்க. பார்த்தா மூங்கிக் குத்து நடுவில் வெளிர் மஞ்சள் நிறத்துல பெரிய கூடு தொங்கி இருக்கு.

''என்னடா காத்தான், இத்தனை பெரிய தேன் கூடு? நல்ல மொரடா இருக்கே? நா இத்தனை நாள்ல பார்த்ததே இல்லையே?''

''இது தேன் கூடு இல்லீங்கையா, அது வேற நெறத்துல இருக்கும். நிறைய கண் இருக்கும். இது தாளை குழைச்ச மொறம் மொழுகினாப்புல சுத்தமா இருக்கு. ஒரே ஒரு ஓட்டைதான் இருக்கு. இது கதண்டு கூடுய்யா...!''

''தேன் இருக்குமா?''

''தேனாட்டமா வண்டுதான் இருக்கும்.''

''கலைடா?''


''ஏ சாமி, வேணாங்க தீயணைப்புத் துறை லேர்ந்து ஆளுங்க வந்துதான் எடுக்கணும். ராத்திரி, மேல கோட்டு போட்டுக்கிட்டு, கூட்டுல மண்ணெண்ணெயும், பெட்ரோலும் ஊத்தி, பொடி தூவி பந்தக்கால நெருப்ப வச்சா 'பொலபொலன்'னு கொட்டும். கீழே எரியிற வைக்கல்ல விழுந்து அத்தனையும் செத்துப் போயிடும். மணக்கரைல போன வருஷம் இதே மாதிரி கூட்ட அழிச்சப்ப நான் பார்த்திருக்கேன். இது கதண்டு. தேளத்தாண்டி கடுக்கும். கொட்டுனா வெஷம் ஜாஸ்தி. வேண்டாம்யா!''

''ஏய், நவருடா அந்தண்டை'' என்று சொல்லிவிட்டு, அவர்கள் எவ்வளவோ தடுத்தும் கேளாமல், பெரிய அலக்கால் கூட்டைக் கலைத்திருக்கிறார். அடுத்த நிமிஷம் 'குபுகுபு'ன்னு நூத்துக் கணக்குல, ஆயிரக்கணக்குல, கதண்டுகள் வெளில வந்திருக்கு. எல்லோரும் பயந்து ஓடி இருக்காங்க. அத்தனை பேரையும் விட்டுட்டு இந்தாளை - அதான் என் அப்பாவை மட்டும் சூழ்ந்து கொட்ட ஆரம்பிச்சுருக்கு. நெத்தியில், கண்ணில், மூக்கில், கன்னத்தில், உதட்டில், நாக்கில், காதில், தலையில், கழுத்தில், நெஞ்சில், கை காலில் ஒரு அங்குலம் இடம் பாக்கி இல்லை உடம்பில்.

''ஒரே நேரத்தில் அத்தனை கதண்டும் கொட்ட அந்த மனுஷன் துடிச்சார் பார் துடி - நாற்பது வருஷம் நாங்க துடிச்ச துடிப்பை [illegible] - அந்த நாலே நிமிஷத்துல அனுபவிச்சிட்டார். எல்லோரும் பிரமை பிடிச்சுப் போய்ப் பார்த்துட்டே நின்னோம். யாருக்கும் எதுவும் தோணலை. அப்புறம் சுதாரிச்சு பந்தத்தைக் கொளுத்திக்கிட்டு நாலஞ்சு ஆளுங்க போய் கதண்டைத் துரத்திட்டுப் பார்த்தா- விரைச்ச உடம்புதான் கெடைச்சது. எல்லாம் சில நிமிஷங்கள்தான். 'பொயட்டிக் ஜஸ்டிஸ்'னு படிச்சிருக்கமே, அதைக் கண்கூடாப் பார்த்தேன். கொட்டினது விஷ வண்டுகள் இல்லை - அவர் எங்களைத் திட்டிய வார்த்தைகள்தான். எண்ணிக்கை குறையாம, அட்சரம் பிசகாம திரும்ப அவரைக் கொட்டி இருக்கு'' என்று சொன்ன என் நண்பன் முகத்தில் பேரமைதி குடிகொண்டிருந்தது.

எனக்கு உடம்பு ஜில்லிட்டது. ●

ஆஹா 50!



சாதத்தில் எறும்புகள் வந்து விட்டால் ஒரு தேக்கரண்டியில் சர்க்கரையைப் போட்டு சாதத்தின் மேல் வைத்தால், சில நிமிடங்களில் எறும்புகள் சர்க்கரையை மொய்த்து விடும். கரண்டியை எறும்புகளோடு மெதுவாக வெளியே எடுத்து விடலாம்.

- ஆர். பிரசன்னா, கரூர்.

அண்மையில் என்னுடைய மகன், நாட்டுப் பெண், பேரன், பேத்திகள் எல்லோரும் குடந்தைக்கு வந்திருந்தார்கள். துபாயைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது என் மகன் என்னைப் பார்த்து, "நீங்களும், அம்மாவும் எப்ப துபாய் வரப் போறீங்க?" என்று கேட்டான்.

நான், "ஜனவரி , 24-ந் தேதிவாக்கில் எல்லா காரியங்களையும் முடித்துக் கொண்டு கிளம்பி வருகிறோம்" என்று கூறினேன். உடனே என்னுடைய பேரன், "துபாய்க்கு வாக்கில் வர முடியாது தாத்தா, ஃப்ளைட்டில்தான் வரமுடியும்!" என்று ஒரு போடு போட்டான்!

- ராதா கிருஷ்ணமூர்த்தி,
கும்பகோணம் - 1.



என் தங்கையின் மகன் பள்ளியில் நடந்த மாறுவேடப் போட்டியில் நேரு வேடம் போட்டான். தொப்பி தயாரிக்கும்பொழுது அது சற்று சிறியதாகச் செய்து விட்டேன். பின் சரிசெய்து போடச் சொல்லி நேருவைப் பற்றிய சிறு பாடலும் சொல்லித் தந்து அனுப்பினேன். மேடையில் ஏறியதும் அவன் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு, 'தேங்ஸ்' என்று கூறும் பொழுது தலைக் குல்லா கீழே விழுந்து விட்டது.

உடனே அவன் அனைவரையும் நோக்கி, "குரங்குக் குல்லா கீழே விழுந்து விட்டது. எடுத்துக் கொள்கிறேன்" என் றானே பார்க்கலாம்!

- கே. சுவர்ணா,
சிட்லபாக்கம்.

"இதோ பாருங்கோ!"

என் நான்கு வயது மகள், தன் தந்தையிடம் சென்று, "அப்பா, பாட்டி வீட்டில் யார் இருக்காங்க தெரியுமா?" என்று கேட்டாள்.

"யாரும்மா?" என்றார் அவள் அப்பா.

"பாட்டியின் தாத்தா" என்றாள்.

அவளுக்கு உறவுகளைத் தெளிவுபடுத்த அவர், "உங்க அம்மாவுக்கு நான் யார்?" என்று கேட்டார்.

"இதோ பாருங்கோ" என்றவுடன், எல்லோரும் சிரித்தே விட்டோம்.

- ஆர்.ஜி. மீனாக்ஷி,
சென்னை - 86.

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

மிளகாய் வற்றல் - 1, பூண்டு - 1 பல், மிளகு - 3 நல்லெண்ணெயில் போட்டு சூடுபடுத்தி ஆறவைத்து திப்பிகளை நீக்கி தலைக்குத் தேய்த்து வெந்நீரில் குளிக்க, வரட்டு இருமல் குணமாகும்.

- ஆர். உஷா, வத்தலக்குண்டு.

எந்த வகை ரசத்திற்கும் இறக்கும் முன் ஒரு கரண்டி தேங்காய்ப் பால் சேர்த்து, நெய்யில் கடுகு, கறிவேப்பிலை தாளித்தால் வாசம் ஊரைத் தூக்கும்.

- ஜெயா, சென்னை - 83.

பால் காய்ச்சும் முன் அந்தப் பாத்திரத்தில் சிறிது தண்ணீர் கொதிக்க வைத்தபின் பால் காய்ச்சினால் பால் இரியாது. பாத்திரத்திலும் ஒட்டாது.

- பி. சரண், ஈரோடு.

தெருவில் நடந்து செல்லும் பொழுது பாதாளச் சாக்கடை மூடியை மிதிக்காமல் செல்லுங்கள். சில சமயம் அதன்மீது காலை வைத்ததும் மூடி உள்ளே சென்று ஆபத்தை விளைவிக்கும்.

- பி. ஜானகி, பாளையங்கோட்டை.

மழைக்காலத்தில் தபால்களை எழுதுவதற்கு இங்க் பேனாவைத் தவிர்த்து பால்பாயிண்ட் பேனாவால் எழுதுங்கள். மழை நீரால் முகவரி அழியாமல் இருக்கும்.

- என். விஜயலெட்சுமி, தபோவனம்.

மசியல் வகைகளை எவர்சில்வர் பாத்திரத்தில் போட்டு மத்தால் மசித்தால் சரியாக மசியாது. அதற்கு உப்பை முதலிலேயே போடாமல் வேகவைத்து மசிக்கும் போது தேவையான அளவு கல் உப்பு போட்டு மசித்தால் சீக்கிரத்தில் மசிந்துவிடும்.

- வி. விஜயராணி, திருப்பூர்.



உடம்பில் தோன்றும் மருவை அகற்றிட ஒரு கிண்ணத்தில் தண்ணீர் விட்டு கட்டிப் பெருங்காயத்தை ஊறவைக்கவும். அது லேகியம் போல் ஆனபின் தினமும் அந்தப் பசையை மருவின் மீது தடவினால் காலப்போக்கில் மரு மறைந்து விடும். மஞ்சள் பொடி கலந்த விளக்கெண்ணெயை தினமும் இரண்டு மூன்று முறை மருவின் மீது தடவி வந்தாலும், மரு, மறுவார்த்தை பேசாமல் மறைந்து போகும்.

- கே.டி. ரத்னம்மா, பெங்களூர் - 28.

தெய்விக அமைதி கிடைக்க...

நாம் மன அழுத்தத்தில் இருக்கும் பொழுது நம் உடலில், இந்த கார்ட்டிசால் (Cortisol) சுரக்கிறது. நவீன வாழ்க்கையில் இது அடிக்கடி சுரப்பதால், நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

இந்த ஹார்மோனைக் கட்டுப்படுத்த, ஆழ்நிலைத் தியானம் உதவுகிறது என்று கண்டுபிடித்துள்ளார்கள். R. Keith Wallace என்ற உடலியல் வல்லுனர், தியானத்தால் மன அமைதி, சுவாசித்தல், இதயத் துடிப்பு மற்றும் ரத்த அழுத்தத்தில் மாற்றங்கள் ஏற்படுகிறது என்று ஆராய்ந்து கூறியுள்ளார். ஆறு மணி நேரத் தூக்கத்தில் கிடைக்கும் அமைதி 10 நிமிட தியானத்தில் கிடைக்கும் என்கிறார்.

டாக்டர் ஜேய் கிளேசர் என்பவர் அட்ரினல் கார்டெக்ஸ் DHEA என்ற ஹார்மோனைச் சுரக்கிறது என்றும், அது நம் உடலில் ஏற்படுத்தும் மாறுதல்களையும் ஆராய்ந்துள்ளார். இந்த ஹார்மோனை எலிகளுக்கு செலுத்தியுள்ளார்கள். வயதான எலி இளமையாயிற்றாம். கேன்சர் கட்டிகள் மறைந்ததாம். குண்டான எலி மெலிந்ததாம். சர்க்கரை நோய் குணமாயிற்றாம்.



'இந்த DHEA, இளமையில் அதிகமாக இருக்கிறது. முதுமையில் குறைகிறது. DHEA குறைந்தால் நோய்களும், முதுமையும் தாக்கும். மன அழுத்தம் இருந்தால் DHEA குறைகிறது' என்று ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளார்.

நோய் வராமலும், முதுமையைத்



"வெல்கம் சார்"

"ஹலோ ஹோட்டல் 'சில்வர்மூன்'. உங்களுக்கு டபுள் ரூம் புக் பண்ணியாச்சு சார். யூ ஆர் வெல்கம்"

"ரூம் நம்பர் பத்தா? டிபன் இன்னும் வரவில்லையா? உடனே கவனிக்கிறேன். உங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்காக மன்னிப்புக் கேட்கிறேன் சார்."

"ரூம் சர்வீஸ்? உடனே 303க்குப் போய் சுத்தம் பண்ணுங்க. அவங்க எந்தக் குறையும் சொல்லக் கூடாது."

"ஹலோ சில்வர்மூன்! என்னங்க இந்தச் சமயத்திலே போன் பண்ணறீங்க?"

"................"

"என்னது! உங்கம்மா வராங்களா? இங்க பாருங்க! இது சீஸன் டைம். வேலை ஜாஸ்தி! இப்ப உங்கம்மா வந்தாங்கன்னா என்னால் கவனிக்க முடியாது. பேசாமல் அவங்களை உங்க தம்பி வீட்டிலேயே இருக்கச் சொல்லுங்க!"

"ஹலோ.. யூ ஆர் வெல்கம் சார். ஹோட்டல் சில்வர்மூன் உங்களை உபசரிக்கக் காத்திருக்குது சார்."

- வேதவல்லி சாரி, அண்ணா நகர்.

தள்ளிப் போடவும் DHEA அளவை அதிகப் படுத்த வேண்டும். அதற்கு என்ன செய்வது? தியானம்தான்!

கிளேசர், 328 தியானம் செய்கின்ற அனுபவசாலிகளையும், 1462 தியானம் செய்யாத நபர்களையும் தன் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டார். தியானம் செய் கின்றவர்களுக்கு DHEA அளவு அதிகமாக இருந்ததாம். தியானம் செய்கின்ற ஆண் களைவிட பெண்களுக்கு இதன் அளவு அதிகமாம். ஒரு 40 வயது தியானம் செய்கிறவரின் DHEA அளவும் 30 வயது இளைஞரின் DHEA அளவும் சமமாக உள்ளது என்கிறார் கிளேசர்.

தியான முறைகள் நம் நாட்டில்தான் தோன்றின. அதன் அருமை பெருமை களை ஆராய்ச்சி செய்து உணர்ந்துள்ளார் கள் மேல்நாட்டினர். மனமும் உடலும் ஒன்றுவதுதான் தியானம். 'தியானம் செய்ய நேரமில்லை; தனிமை இல்லை என்பர்.'

ரமண மகரிஷியிடம், "தியானிக்கத் தனிமை தேவையா?" என்று கேட்டார் ஒருவர். அதற்கு அவர், "எதற்கு தனிமை வேண்டும்? எண்ணங்களைக் கட்டுப் படுத்த பயிற்சிதான் தேவை. அதைக் கூட்டத்திலும் செய்யலாம்" என்றார். கோலம் போடுவதுகூட ஒரு தியானம் தான். மனம் குவிகின்றது. கண்ணைத் திறந்துகொண்டே தியானிக்கலாம். மூச்சு உள்ளே போவது வருவது கவனித்தால் போதும், சுவாசம் தன்னால் நிதானிக்கும். சீனத் தத்துவஞானி கூறுவது: "உன் உடலையும் மூச்சையும் கவனி; மனதைத் தெளிவாக்கு... தெய்விக அமைதி உன் னுள் நுழையும்"

எப்படி தியானிப்பது? தேடுங்கள்; கிடைக்கும். உள்ளமும் உடலும் ஆரோக் கியமடையும்.

- டி.பிரபாவதி, கோவை- 6.

வாதவலி மற்றும் பிற வலிகளிலிருந்து உங்கள் வாழ்க்கையை மீட்டுப் பெறுங்கள்!!!

ரிஷி™

பெயின் கில்லர்-H

Hrishi PAIN KILLER-H™







100ml, 50ml, மற்றும் 20ml, அளவுகளில் கிடைக்கிறது

- மூட்டு வலி
- முதுகு வலி
- தசை வலி
- கழுத்து வலி
- சுளுக்கு
- மாதவிடாய் வலி
- வாதநோய்

முதலிய வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்

For external use only



இதுவரை கண்டுபிடிக்கப்படாத மிகவும் சக்திவாய்ந்த ஆயுர்வேத மருந்து

மனி பேக் சலுகை* (Money Back Offer*)

எங்கள் மருந்தில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால் அதற்கான பணத்தை திரும்ப பெறலாம். *விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும். மேலும் விவரங்களுக்கு வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்ளவும்: 044-26241190

ரிஷி பெயின் கில்லர்-H™

இது ஒப்பற்றமூலிகைகளின் தனித்துவம் நிறைந்த சேர்க்கை. இது அனைத்து வலிகளிலிருந்தும் உடனடி நிவாரணம் தரவல்லது. பாரம்பரியமிக்க ஆயுர்வேத வல்லுனர்களால், சகல வலிகளிலிருந்தும் நிவாரணம் பெறபுதுப்பொழிவுடன் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புராதன அரிய மருந்து.

ரிஷி பெயின் கில்லர்-H-ல் உள்ள அரிய மூலிகை எண்ணைகள், முதுகு வலி, மூட்டு வலி, தலை வலி, தசைப்பிடிப்பு, மாதவிடாய்க்காலத்தில் வரக்கூடிய வலிகள், கழுத்து வலி, சுளுக்கு, வாதம் சம்பந்தப்பட்ட வலிகள் மற்றும் வீக்கம் ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணம் தரவல்லது. மிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட இந்த மருந்தானது 100% பாதுகாப்பும் உங்கள் பணத்திற்கு முழுப்பலனும் தரவல்லது.

வாதம் (Arthritis)

இன்றைய நாட்களில், நடுத்தர வயதைத் தாண்டிய மூன்றில் ஒருவருக்கு வாத நோய் வந்து அவதிப்படுகின்றனர். வாத நோய் (Arthritis) ஒரு வியாதிமட்டுமல்ல, எந்த வயதிலும் தாக்கக்கூடிய சிக்கலான உடல் கோளாறு.

ரிஷி பெயின் கில்லர்-H மருந்தை பாதிக்கப்பட்ட மூட்டுகளில் தடவினால், அந்த இடங்களில் ரத்த ஓட்டம் சீராகி, மூட்டுகளின் தசைகள் வலிமை பெற்று விறைப்புத்தன்மை நீங்கி, உடனடியாக வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது.

மாதவிடாய் கால வலி (DYSMENORRHEA)

உங்களுக்குத் தெரியுமா? பத்தில் ஐந்து பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் வலி மிகவும் கடுமையாக ஏற்படுவதால் அந்நாட்களில் அன்றாட வேலைகளைக்கூட செய்ய முடியாமல் சோர்வும், பலவீனமும் ஏற்படுகிறது.

அப்படிப்பட்ட நாட்களில் அடிவயிற்றில் ஏற்படும் வலிகளுக்கு ரிஷி பெயின் கில்லர்-H மருந்தை மாதவிடாய்க்கு ஒரு நாள் முன்பும், மாதவிடாய்க் காலத்திலும் தொப்புழ் சுற்றிலும், அடிவயிற்றிலும், கீழ் முதுகு பகுதியிலும் தடவினால் வலியிலிருந்து முழுமையான பாதுகாப்பான நிவாரணம் தரக்கூடியது.

அடிவயிற்றிலும், கீழ் முதுகு பகுதியிலும் தாங்கமுடியாத வலி ஏற்படுவதே மாதவிடாய் வருவதற்கு அறிகுறியாகும். அப்பெண்ணுக்கு அந்நேரங்களில் கடுமையான வலியோ அல்லது மிதமான வலியோ ஏற்படலாம். அந்நேரங்களில் கர்ப்பப்பை தசைகள் அதிக அளவில் சுருங்கி, தற்காலிகமாக ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு அடிவயிற்றில் வலியை ஏற்படுத்துகின்றன. ரிஷி பெயின் கில்லர்-H மருந்தை அடிவயிற்றில் தடவினால், ரத்த ஓட்டத்தை சீர் செய்து, கர்ப்பபை தசைகள் சுருக்கங்களிலிருந்து குறைத்து வலியை கட்டுப்படுத்துகிறது.

ரிஷி பெயின் கில்லர்-H

இதுவரை கண்டுபிடிக்கப்படாத மிகவும் சக்திவாய்ந்த ஆயுர்வேத மருந்தாகும். இதன் சக்தியானது உங்களது தசை மற்றும் மூட்டுகளின் அசைவுகளுக்கு ஆறுதலாக இருந்து, மூட்டு அசைவுகளின் கடினத்தன்மையை குறைத்து வலியிருந்து முழுமையான நிவாரணம் கொடுக்கிறது.

தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்.


பெங்களூர்: அப்போலோ பார்மஸி (Bangalore: Apollo Pharmacy)

Formulation & Manufactured by:

Indo Asian Herbs & Homoeo Research Laboratories

48A, North Phase, SIDCO Ambattur Industrial Estate, Chennai - 600 098. Phone: 044-26254180.
Cell:9444587488, E-mail: indoasianhhrl@sify.com.

நசுங்கும் நட்புகள்!



மீனாட்சி சூர்யநாராயணன்

அரக்கப் பரக்க ஓடும்
அலுவலக வாழ்விலும்
அடுக்குமாடிக் குடியிருப்பிலும்
எங்கள்
அன்றாட வாழ்க்கை
ரொம்பத்தான் மாறிவிட்டது!
என்
அடுத்தவீட்டில் இருப்பவனின்
பெயர் மட்டும் எனக்குத் தெரியும்;
பண்டிகை நாட்களில் தட்டுமாறும்
பட்சண நேரங்களில் மறக்காமல்
சில வார்த்தைகளையும்
பரிமாறிக் கொள்வோம்!
மற்ற வீட்டிலிருப்பவர்களை
மாடிப்படி வளைவுகளில்
எதிர்பாராமல் எதிர்கொள்கையில்
இதழ் பிரியாமல் சிரிப்பதோடு
எங்கள் சிநேகம் முடிந்து
விடுகிறது!
மற்றபடி மழலைகள் தான்
டியூஷன் இல்லா அபூர்வ நாட்களில்
நட்பை வளர்க்கிறார்கள்!

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

அடிக்கடி தலைவலித் தொந்திரவா? கவலையை விடுங்கள். பால் சேர்க்காத கடுங்காப்பி சூடாக ஒரு தம்ளர், அதில் அரை எலுமிச்சைச் சாறு பிழிந்து உடனே அருந்துங்கள். தலைவலி என்றால் என்னவென்று கேட்கத் தோன்றும். இது அனுபவத்தில் கண்ட உண்மை!

- போ. வெங்கடலட்சுமி,
இளாம்மணியாச்சி.

மாதம் ஒருநாள் பட்டினி இருப்பது உடலுக்கு நல்லது. வாரம் ஒருநாள் மாங்கொட்டை குழம்பு, மிளகு ரசம், வேப்பம்பூ பொடி செய்து சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்லது.

- ஆர்த்தி யோகேஷ், நங்கநல்லூர்.

கட்டும் எல்லாப் புடவைகளிலும், வயிற்றுப்புறமாகச் செருகும் முதல் உட்புறத் தலைப்பில், சிறிய முடிச் சொன்றை நிரந்தரமாகப் போட்டு வைத்துக் கொண்டோமானால், அவசர நேரங்களிலும் சரி, அரையிருட்டில் உடுத்தும் போதும் சரி, குப்புற, நிமிர்த்தி என்று சரிபார்க்கும் நேரம் மிச்சமாகும்.

- இந்திரா ராமதுரை,
பெங்களூரு - 3.

வெளியூர் செல்லும்போது ஒரு பாக்கெட் கெட்டி அவல் வெல்லத்தூள் எடுத்துச் சென்றால் சுவையான 'வெல்ல அவல்' செய்து சாப்பிடலாம். எதிர்பாராத விபத்தின் காரணமாக தாமதம் ஆகும் போது இது கைகொடுக்கும்.

- என். வித்யா, சென்னை - 78.

உளுந்து வடை செய்யும்போது சேமியாத் தூள் போடவும். வடை மொறு மொறு என இருக்கும்.

- ஆர். உஷா, வத்தலக்குண்டு.



இடையாளமே தெரியலையே

சிலர் ஃபோட்டோ எடுத்துக் கொள்ளும் போது மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டு [வழக்கமாக மூக்குக் கண்ணாடி அணிபவர்கள்] அதிக ஒப்பனையுடன், வித்தியாசமான தலை அலங்காரத்துடன் எடுப்பார்கள். வங்கிக் கணக்கு துவங்க மற்றும் முக்கிய அடையாளத்துக்காக பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ வேண்டுமானால் அப்படிச் செய்யாதீர்கள். சாதாரணமாக எப்படித் தோற்றம் அளிப்பீர்களோ அப்படியே எடுங்க. அப்போதுதான் எளிதாக அடையாளம் தெரியும்.

- ரா. க்ருபா, சென்னை - 90.



"அமிர்த்தாவிற்கு நிகர்
அமிர்த்தா மட்டுமே"
சூடாகாத,
சுவையான மாவு
பதினைந்தே
நிமிடத்தில் ரெடி.
அமிர்த்தா SLX
UNI-PRESSURE
3 STONE-SYSTEM
பிரத்யேக யுனி-பிரஷர் 3 ஸ்டோன் சிஸ்டம் கொண்ட
இந்தியாவின் முதலாவது மற்றும் ஒரே கிரைண்டர்.
இதர மாடல்கள்
Sleek
ALS
TLT
Ace
2 YEAR WARRANTY ON GRINDER
5 YEAR WARRANTY ON MOTOR
Optional attachments
Atta kneader and Coconut scraper.
அமிர்த்தா™
டேபிள் டாப் வெட் கிரைண்டர்
Let it assist you
Only for ALS 1 year warranty on grinder & 3 year warranty on motor.
• அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளுக்கு 110V வோல்டேஜுடன் கிடைக்கிறது.
Available at all leading out lets
For more details: Chennai, Chengalpet, N.Arcot & S. Arcot- Ph: 044-26481013, Pondicherry- Ph:0413-2234342, Thanjavur-Ph: 0436-2239561, Trichy- Ph:0431-2700728, 94434 78065, Madurai-Ph:0452-4351636, 9344753718,Tirunelveli, Tuticorin & K.K.Dist.- Ph:04652-245475, Salem- Ph:96427 66377, Coimbatore-Ph:0422-3297309, Tirupur-Ph:0421-4320033,4320066,Udumalpet-Ph: 04252-225388.Bangalore-Ph: 080-22224723. Calicut-Ph: 0495-2367333, Trivandrum- Ph:0471-2454626, Mumbai-Ph:9819133810.
Mfd. by: Minit Engineers (I) P. Ltd., Erode - 638 004, Tamil Nadu. Ph : 0424 - 2227050, 2214259 E-mail : minit@amirthaa.com



ஸ்ரீ அன்னை

திருப்பூர் கிருஷ்ணன்

சூரியகாந்தி

இறைவனின் அருளை நோக்கி மனத்தைத் திருப்பும் ஆற்றல் சூரியகாந்திக்கு உண்டு. மஞ்சள் மற்றும் ஆரஞ்சு வண்ண மலர். இந்த மலரை அன்னைக்குச் சமர்ப்பித்தால் மன இருள் விலகும். வாழ்வில் ஒளி பிறக்கும்.

மீர்ராவின் கணவர் பால் ரிச்சர்ட், அரசாங்கப் பணி நிமித்தம் இந்தியா வந்தார். புதுச்சேரியில் தன் பணிகளை முடித்துக் கொண்டார். அவரது மனைவி மீர்ரா யாரேனும் ஓர் ஆன்மிகச் சான்றோரிடம் கேட்கச் சொன்ன அந்தக் கேள்வி பத்திரமாய் அவரது நினைவுப் பெட்டகத்தில் தங்கியிருந்தது.

யூதர்களின் இலச்சினைதான் சாலமோன் முத்திரை, தாவீதின் சிம்பல் என்று அழைக்கப்படுவதும் அதுதான். அது சித்து விளையாட்டுகளில் பிரதான பங்குவகிக்கிறது. தியோன் தம்பதியிடம் மீர்ரா சித்து விளையாடல்களைக் கற்றுக் கொண்டாரே? அப்போது இந்த முத்திரைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அந்த இலச்சினையின் மறைபொருள்தான் என்ன?

இந்தக் கேள்வியே மீர்ராவின் கேள்வி. ஆனால் இதற்கு என்ன விளக்கம் என்றறிய ரிச்சர்டும் பேராவல் கொண்டிருந்தார். அவரும் மிகுந்த ஆன்மிக நாட்டம் கொண்டவர் அல்லவா?

புதுச்சேரியில் யாரேனும் ஆன்மிகச் சான்றோர் இருக்கிறாரா என்று நண்பர்களை ஆர்வத்தோடு விசாரித்தார். ஸ்ரீ அரவிந்தரைப் போய்ப் பாருங்களேன் என்றார் வீர்நாயுடு என்ற நண்பர். தெய்வத்தின் திட்டப்படிதானே எல்லாச் செயல்களும் நடக்கின்றன? ஒரு வழிகாட்டியிடம் செல்லக்கூட யாராவது வழிகாட்ட வேண்டியிருக்கிறதே? ரிச்சர்ட் உலகின் ஆன்மிக வழிகாட்டியான ஸ்ரீ அரவிந்தரைச் சந்திக்க முடிவு செய்தார்.

சந்திரநாகூரிலிருந்து அரவிந்தர் புதுச்சேரி வந்து நிரந்தரமாய்த் தங்கியிருந்த காலம் அது. அவர் பெயர் தேசமெங்கும் பேசப்பட்டுக்கொண்டிருந்தது. சுதந்திரப் போரில் சிறைசென்ற அரவிந்தர் விடுதலையான பின் உத்தர்பாரா என்ற இடத்தில் சொற்பொழிவாற்றினாரே? ஸ்ரீகிருஷ்ணரை நேரில் கண்டேன் என்று உரையாற்றினாரே? அவையெல்லாம் பத்திரிகைகளில் செய்திகளாக வந்திருந்தன.

மகாகவி பாரதி தம் 'இந்தியா' பத்திரிகை நிருபர் ஒருவரை கல்கத்தா அனுப்பி,

அரவிந்தரிடம் கேள்வி கேட்கச் செய்து, அவர் கடவுளை நேரில் தரிசித்த சித்த புருஷரே என சந்தேகமறக் கண்டறிந்தார். அதைத் தம் பத்திரிகை மூலம் அறிவித்திருந் தார். அரவிந்தர் பின்னர் கல்கத்தாவிலிருந்து சந்திரநாகூர் சென்று, பிறகு புதுச்சேரி வந்த போது, அவர் தங்குவதற்கு முதலில் வீடு பார்த்துத் தந்தவரும் பாரதியார்தான்.

வ.வே.சு.ஐயர், பாரதி போன்றோரெல் லாம் அரவிந்தரால் கவரப்பட்டு அவருடன் இணைந்து ஆன்மிக ஆய்வுகளை மேற் கொண்டிருந்த காலம் அது. ஸ்ரீஅரவிந்தரின் ஆன்மிக ஒளி, புதுச்சேரியிலிருந்து புறப்



■ ஸ்ரீ அரவிந்தர் ஆஸ்ரமம்- புதுவை

பட்டு மெல்ல மெல்ல பாரத மெங்கும், ஏன் உலகெங்கும் தன் வெளிச்சத்தைக் காட்டத் தொடங்கியிருந்த காலம்.

லட்சுமி, நா. பார்த்தசாரதி போன்றோரது முதல் சிறுகதை களை வெளியிட்டவரும் 'பிரசண்ட விகடன்' இதழின் ஆசிரியருமான நாரண துரைக் கண்ணன், பின்னாளில் ஸ்ரீ அரவிந்தரை நேரில் போய்ப் பார்த்து வியப்படைந்தார். 'ஸ்ரீஅரவிந்தர் அனுஷ்டித்து வரும் யோகம் இதுவரை யாரும் அனுஷ்டிக் காத புத்தம் புது முறையில் அமைந்தது. அரவிந்தர் தமது தேகத்தைப் பொன்மய மாக்கி அமிர்த கலசம் போல் விளங்கு கிறார். அவரது பாதத்தில் தான் இன்னும் சிறிது கருமை நிறம் இருக்கிறதாம். அதுவும் பொன்மயமாகிவிட்டால் அரவிந்தர் அருள் ஞானம் பெற்றவராய் விடுவாராம்' என்று அவர் எழுதினார்.

தமிழ் இலக்கியவாதிகளில் மிக முக்கிய மானவரான கு.ப. ராஜகோபாலனும் ஸ்ரீ அரவிந்தரால் கவரப்பட்டார். 'ஸ்ரீ அரவிந் தரின் கீதாபாஷ்யம் உண்மை யில் அவருடைய யோகத்தின் விளக்கம். நமது நாட்டின் வேதாந்தக் களஞ்சியத்தை ஆராய்ந்து, அதன் பல மணி களைச் சேர்த்து ஒரு பூரண யோகத்தைக் கற்பித்திருக்கிறார் அவர். அதன் தத்துவத்துக்கு மேனாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவு பூரண ஆதரவு கொடுக்கிறது. ஸ்ரீஅரவிந்தரே ஒரு



நிகரற்ற இதா பாஷ்யம்!' என்று எழுதினார் கு.ப.ரா.

ஸ்ரீ அரவிந்தருடன் சிறையில் இருந்த உபேந்திரநாத் பந்தியோபாத்தியாய் என்ற கைதி, தன் வரலாற்றை எழுதினான். அரவிந்தர் சிறையில் இருந்த காலங்களில், தைலம் தேய்க்காமலே அவரது முடி மினுமினுப்போடு இருந்தது என்றும், அது குறித்துத் தான் கேட்டதற்கு, யோக சாதனையில் முன்னேறுவதால், முடி உடலிலிருந்து தனக்குத் தேவையான கொழுப்பை எடுத்துக் கொள்வதாக அவர் சொன்னதாகவும் அவன் வியந்து குறிப்பிட்டிருந்தான். நோபல் பரிசு பெற்ற வங்கக் கவி தாகூர், அரவிந்தர் தத்துவங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

இப்படி ரிச்சர்ட் புதுச்சேரிக்கு வருவதற்கு முன்னும் பின்னுமாக ஸ்ரீஅரவிந்தரைப் பற்றிய பல செய்திகள் ஆச்சரியத்துடன் பேசப்பட்டுக் கொண்டிருந்தன. புராணங்களை நம்புகிறவர்கள் நம்பலாம். நம்பாதவர்கள் விட்டுவிடலாம். ஆனால் கடவுளை நேரில் கண்டேன் என்று ஸ்ரீஅரவிந்தர் அறிவித்து மெய்ஞ்ஞானியான பாரதியார் ஆராய்ந்து ஒப்புக்கொண்ட வரலாற்றுச் செய்தியை நம்பாமல் என்ன செய்வது?

அப்படிப்பட்ட பகவான் ஸ்ரீஅரவிந்தர் முன் பணிவோடு போய் அமர்ந்தார் ரிச்சர்ட். அவர் மனத்தில் இனந்தெரியாத சாந்தியும் இனிமையான பரவசமும் எழுந்தன. துர்ச் சக்திகளிடமிருந்து பூமியைக் காக்க வந்திருக்கும் அவதார புருஷர் இதோ இதோ என அவர் உள்ளம் அறைகூவியது. ஸ்ரீஅரவிந்தரைப் பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்போல் தோன்றியது. பத்தி மேலோங்க சாலமோன் முத்திரையின் பொருள் என்ன என்று பணிவோடு வினவினார் ரிச்சர்ட்.

ரிச்சர்டையே கனிவுபொங்கப் பார்த்துக் கொண்டிருந்தார் அரவிந்தர். ரிச்சர்டின் மனைவி மிர்ரா, தன்னோடு இணைந்து ஆன்மிக ஆராய்ச்சிகளில் ஈடுபடப் போகிறார் என்பதும் கடும் தவம் நிகழ்த்தி தெய்வமாகவே உயரப் போகிறார் என்பதுமான பூட்டப்பட்ட எதிர்காலம் அப்போதே அரவிந்தர் மனக்கண்ணில் தெரிந்திருக்க வேண்டும்.

'குழந்தாய், மேல்நோக்கி மலரும் நிலையில் உள்ள தாமரை மலர் அல்லவா அது? ஆன்மிக ஒளி வந்தவுடன் மனம் என்னும் தாமரை மொட்டு தானே விரிவடையும் என்பதைக் குறிக்கும் சின்னம் அது!' எனப் பரிவோடு அவர் விடையளித்தார்.

இந்தக் கேள்வியைக் கேட்கச் சொல்லி அனுப்பியது தன் மனைவி மிர்ரா தான் என்பதைச் சொன்ன ரிச்சர்ட், தாங்கள் செய்து வரும் ஆன்மிக ஆய்வுகள் பற்றியும் விவரித்தார். மிர்ராவின் சாதனைகள் குறித்து விளக்கமாகத் தெரிவித்தார். கப்பலில் பயணம் செய்தபோது புயலை ஏவிய தீய சக்திகளை, கூடுவிட்டு வெளியே தன் உயிரைப் பிரித்துச் சென்று அகட்டினாரே மிர்ரா? அந்தச் செய்தி உள்பட ஒன்றைக் கூட அவர் சொல்லாமல் விடவில்லை.

உணர்வுள்ள கைகள்!

அன்னை விளையாட்டரங்கிற்கு வரத் தொடங்கியபோது, எங்களில் சிலருடன் விளையாடுவார். என்னிடம் தாம் மிக நல்ல ஆட்டக்காரர் என்று சொன்னார். அவர் தம் கைகளைக் காட்டி 'ஏற்கெனவே என் கைகள் உணர்வுடையவையாக இருந்தன!' என்றார்.

'அன்னையே! நீங்கள் சொல்வது ஏதோ கதை போல் இருக்கிறது!' என்று கூறினேன். அவர் சிரித்தார். பிறகு, 'ஆம். நீ அப்படி உணரக் காரணம் அது சாத்தியம் என்று இதுவரை யாரும் உனக்குச் சொல்லவில்லை!' என்று சொன்னார். பொதுவாக, பியானோ வாசிப்பவர்களுக்கு மிகவும் உணர்வுள்ள கைகள் இருக்கும். சில சமயங்களில் இந்தக் கைகள் அந்த ஆள் இறந்த பிறகும் அழிவதில்லை! ஒரு சமயம் அன்னை ஒரு பியானோ

அரவிந்தரின் தாமரை இதழ் போன்ற உதடுகளில் மிர்ராவின் சாதனைகளை ஆமோதிக்கும் வகையில் பாலேடு போன்ற மெல்லிய முறுவல் எழுந்தது. ஆன்மிக ஆராய்ச்சி என்பது ஒன்றேதான் என்பதையும் தாம் இங்கே செய்துவரும் ஆய்வின் ஒரு பகுதியைத்தான் மிர்ரா அங்கே செய்து வருகிறார் என்பதையும் இவ்விரு ஆய்வுகளும் கூட்டாக நிகழ்த்தப்படும் காலம் கனிந்து கொண்டிருக்கிறது என்பதையும் அவர் உள் மனம் உணர்ந்திருக்க வேண்டும்.

ஸ்ரீஅரவிந்தரின் கருணை பொழியும் அந்தக் கண்கள்! அவற்றிலிருந்து புறப்பட்டு உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்தக் காந்த சக்தி! உலகின் ஒட்டுமொத்தத் தூய்மையையும் ஒன்றுதிரட்டிச் செய்தது போல் தென்பட்ட அவரது புனித வடிவம்! கண்ணில் தித்திக்கும் அந்தத் திருவுருவைப் பார்த்துப் பார்த்து உள்ளத்திலும் பதித்துக் கொண்டார் ரிச்சர்ட். தன் கேள்விக்கு விடை தந்த அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார். பிரான்ஸ் செல்லும் வரையிலும் ஏன் சென்ற பின்னரும்கூட அவர் மனமெல்லாம் நீக்கமற நிறைந்திருந்தவர் அரவிந்தர்தான். அரவிந்தரைத் தான் சந்திக்க வேண்டும் என்ற முன்திட்டப்படிதான் இயற்கை தம்மை அவரிடம் அனுப்பியது என்பதை அவர் புரிந்துகொண்டார். அரவிந்தரை நினைக்கும் போதெல்லாம் அவரது நெஞ்சு குளிர்ந்தது.

மிர்ராவிடம் தாம் சந்தித்த அந்த அவதார புருஷரைப் பற்றிச் சொல்லிச் சொல்லி வியந்தார். மிர்ராவின் கேள்விக்கான அவரது விடையையும் தெரிவித்தார். ஸ்ரீஅரவிந்தர் என்னும் ஆச்சரியத்தைப் பற்றி மிர்ராவிடம் மட்டுமல்ல, தாம் பேசிய கூட்டங்களிலும் அவர் பேசிப் பரவசப்பட்டார்.


ரிச்சர்ட் பேசிய பேச்சுகளைப் பலர் கண்ணிமைக்காது கேட்டனர். உலகில் இப்படியும் ஒருவர் தெய்வ சிந்தனையில் மட்டுமே தோய்ந்து வாழ முடியுமா என திகைப்பில் ஆழ்ந்தனர். ஆன்மிகம் என்பது மெய்ஞ்ஞானம் மட்டுமல்ல, அது பல ஆய்வுகளை உள்ளடக்கிய உளவியல் சார்ந்த விஞ்ஞானமும்கூட என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தனர். உலகின் ஒரு மூலையில் புதுச்சேரி என்னும் புண்ணிய பூமியில், ஆன்மிக விஞ்ஞானியாக ஒருவர் வாழ்ந்து வருகிறார் என்பதை அவர்கள் பிரமிப்பு கலந்த மரியாதையோடு ஒப்புக் கொண்டனர்.

மிர்ரா, ரிச்சர்ட் இருவருக்கும் ஸ்ரீஅரவிந்தருடன் கடிதத் தொடர்புகள் நிகழலாயின. தங்கள் காஸ்மிக் குழுவின் ஆன்மிக சந்தேகங்கள் பற்றி அவர்கள் ஸ்ரீ அரவிந்தரிடம் விளக்கம் கேட்டுக் கடிதங்கள் எழுதினர். அரவிந்தர் நீண்ட பதில்கள் எழுதி வந்தார்.

ஸ்ரீஅரவிந்தரை நேரில் சந்திக்க வேண்டும் என்ற மிர்ராவின் வேட்கை நாளுக்கு நாள் அதிகமாகியது.


ஸ்ரீ அரவிந்தரை மிர்ரா சந்திக்கும் அந்த நாளும் வந்தது. அந்த நாள் உலகின் பல நூற்றாண்டு கால ஆன்மிக வரலாற்றில் ஒரு புனிதப் பொன்னாள்....

(அருள் பெருகும்)



வித்துவான் வாசித்துக் கொண்டிருக்கும் போது அப்படிப்பட்ட ஒரு ஜோடிக் கைகள் அந்த வித்வான் கைகளுள் நுழைவதைப் பார்த்தாராம். அப்பொழுது அவருடைய வழக்கமான திறமையை மிஞ்சி அற்புதமாக வாசித்தாராம். உணர்வுள்ள ஒரு கை என்ன செய்ய முடியும் என்பதை விளக்க இதைச் சொல்கிறேன்.

('அன்னையை நன்றியுடன் நினைவு கூர்தல்' என்ற நூலில் சித்ராசென்)





தரம்மிகு பொருட்கள்



Discount
upto

For purchase of Rs.2
2 gram G
For purchase of Rs.5
5 gram G









Dealers: Kur

Sree Gayath

தரம் என்றும் நிரந்தரப்

We make all kinds

#29, Royapettah High Road, Chennai - 60















இசையே, உன்னை ஆராதிக்கிறேன்!

கொஞ்சம் கவனியுங்க! இவர் ஒரு சாமியாரோ, நடிகரோ அல்லது கல்லூரி ப்ராடிகலோ அல்ல. 24 வயது இளைஞர். அதுவும் எம்.சி.ஏ. மாணவர்!

இவர் வயதில் உள்ள பெரும்பான்மையான இளைஞர்கள், நண்பர் / நண்பிகளுடன் ஊர் சுற்றிக் கொண்டு, டிஸ்கொத்தே போய்க் கொண்டு, இந்த 'பப்'ளூரில், ஸாரி பங்களூரில், இரவு நேரத்தில், மஜா செய்து கொண்டு இருக்கும்போது விவேக் வித்யாசமானவர். தமது வீட்டில் ஓர் அறையையே இசைக்கூடமாக்கி அர்ப்பணித்து வைத்திருக்கிறார்.



"1983-ல் பெங்களூரு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் பிறந்தேன். எப்போதும் இசை முழங்கும் இல்லம். வஸந்த கோகிலத்தில் இருந்து, வஸந்தகுமாரி வரை, சங்கீதம் ஒலித்துக் கொண்டே இருக்கும். ஆனால், எம்.எஸ். அம்மாவின் குரல் கேட்கும்போது மட்டும், நான் மிகவும் உன்னிப்பாக கவனிப்பேனாம்!'' என்றார் விவேக்.



''இவன் தளிர்நடை நடந்து, அந்த இசைத்தட்டின் எதிரில், ஆவலோடு அமர்ந்து கேட்பதைப் பார்க்கும்போது, எச்.எம்.வி. லோகோவில், க்ராமபோன் எதிரில் ஒரு நாய் அமர்ந்திருக்குமே அது போல் இருக்கும். எம்.எஸ். அம்மா பாட்டு என்றால், இவனிடம் ஒரு தனி ரியாக்ஷன் தெரியும்'' என்றார் விவேக்கின் தாயார்.

''வார்த்தைகள் புரியாது. அர்த்தம் தெரியாது. ஆனாலும், அதில் ஏதோ ஒரு ஈர்ப்பு; லயிப்பு. எம்.எஸ். அம்மா, ஒரு மேதை என்பதோ, இசைக்கு என்றே பிறந்தவர் என்பதோ எனக்குப் புரியாத வயது. அவரை என்னுடைய குடும்பத்தில் ஒருவர் என்றே கருதினேன்.

ஏழெட்டு வயசுல எம்.எஸ். அம்மாவின் இசைத் தட்டுகளை மட்டுமே எடுத்து வைத்துக்கொண்டு கேட்க ஆரம்பித்தேன். இப்போதுள்ள குழந்தைகள், கார்ட்டூன் சேனல் போட்டால்தான் சாப்பாடு சாப்பிடுவதைப் போல, அப்போது எனக்கு அம்மா பாட்டுத்தான் சாப்பாட்டுக்கு.

பத்து வயதில் இருந்து, ஒரு வெறியுடன், அவர் படங்கள் எதில் வந்தாலும், சிறியது, பெரியது என்று சேகரிக்க ஆரம்பித்தேன். படிக்கத் தெரிந்தவுடன், (இதற்கென்றே தமிழ் படிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்) அவரது பாடல்களின் பாவம் புரிய ஆரம்பித்தது. எம்.எஸ்ஸின் அன்னமாச்சார்யாவின் பக்தி இசையில் மயங்கி, தெலுங்கு மொழியையும் கற்றுக் கொண்டேன்!

பள்ளியில் இருந்து வந்தவுடன், முதல் வேலையாக எம்.எஸ். அம்மாவின், படங்கள், தகவல்கள், அனைத்தையும் ஒரு சார்ட் பேப்பரில் ஒட்டி, சேகரித்து வைக்கத் தொடங்கியதில் இதுவரை, 2 பெரிய, பெரிய ஆல்பங்கள் செய்தாகி விட்டது'' என்கிறார் விவேக்.

'காரணப் பிறவி' என்று புத்தகமே செய்து அதில் சத்ராவளி ரிலீஸிலிருந்து பிரத்யேகமாக எம்.எஸ். அம்மா தகவல்களை மட்டுமே எடுத்துத் தொகுத்துள்ளார். இதற்காக இவர் பட்ட சிரமங்களை எல்லாம் மிகவும் சந்தோஷமாகவே சொல்கிறார்.



* எம்.எஸ். - இசை அறையில்...



* விவேக்

எம்.எஸ். அம்மா அறை என்று அமைத்து, எங்கும் அவர் படங்கள், சி.டி., டி.வி.டி., ஆல்பங்கள், புத்தகங்கள் என்று அங்கு எம்.எஸ். அம்மாவையே ஆவாஹனம் செய்து வைத்துள்ளார் விவேக். தினமும் எம்.எஸ். அம்மா படத்துக்கு ஊதுவத்தி ஏற்றிவைத்து, அவரது சுப்ரபாதம் கேட்பதில் தொடங்குகிறது. மாலை, அவரது பக்திப் பாடல்கள்; இரவு எம்.எஸ். அம்மாவின் குரலில், அன்னமாச்சார்யாரின், சயனோத்தஸ பாடல்களுடன் விவேக்கின் அன்றைய தினம் முடிகிறது, 'ஜோ அச்சுதானந்தா ஜோ, ஜோ முகுந்தா...' என்று.

"**எ**ன் மகன் படிப்பில் அபவ் ஆவரேஜ். பாக்கெட் மணியில், தனக்கு வேண்டியதைச் செய்து கொள்கிறான். எந்த கெட்டப் பழக்கமும் இல்லை. எம்.எஸ். அம்மாவால், அவன் தமிழ், தெலுங்கு என்று புது மொழிகள் கற்றுக் கொண்டான். ஆக்கபூர்வமான எதையும் ஆதரிப்பதில் நான் தயங்குவதே இல்லை'' என்கிறார் விவேக்கின் தந்தை.

''எம்.எஸ். அம்மா பாடும்போது, ஓர் அபூர்வமான உணர்வு ஏற்படுகிறது. அதில் உள்ள பக்தி, பாவம், பரவஸம் எல்லாம் எனக்கும் தொற்றி, பகவானையே பார்க்கும் எண்ணத்தை ஏற்படுத்துகின்றது''- என்று, எங்கு, எதை ஆரம்பித்தாலும் எம்.எஸ். அம்மாவில் ஆரம்பித்து, எம்.எஸ். அம்மாவிலேயே முடிக்கிறார் இந்த அபூர்வ ரசிகர்!

- சந்திப்பு, படங்கள் : சகுந்தலா ஐயங்கார், பங்களூரு

ருசியோ ருசி - 12

கொங்கு நாட்டுச் சமையல்!

காட்டுக் கம்பு அல்வா
ஆஹா!

சோளப் பால் சாதம்
ஓஹோ!

வெண்டைக்காய் அப்பளப் பொரியல்
டேஸ்டி!

களாக்காய் சட்னி
ம்...ம்!



நளபாக சக்கரவர்த்தி
ஜேக்கப்



காங்கேயத்தில் மிகப் பிரபலமான தங்க நகை மாளிகையின் உரிமையாளரான நிர்மலா, தானியங்களை வைத்து அல்வா செய்வதில் கைதேர்ந்தவர். இவர் கைவண்ணத்தில் உருவான காட்டுக் கம்பு அல்வா இதோ, உங்களுக்காக!

காட்டுக் கம்பு அல்வா

- நிர்மலா

தேவையான பொருள்கள் :

கம்பு - ½ கிலோ, சர்க்கரை - 300 கிராம், நெய் - 300 கிராம், ஏலக்காய் - 4, அரிசி மாவு - 50 கிராம், சோள மாவு - 50 கிராம், முந்திரி - 25 கிராம்.

செய்முறை :

★ கம்பை ஊறவைத்துக் களையவும். நன்றாக அலசி, கிரைண்டரில் இட்டு மைய அரைக்கவும். பிறகு மெல்லிய

திருச்சியில் வசிக்கும் எனது நண்பரின் துணைவியான அங்குலக்ஷ்மி, புதுமையான உணவு வகைகளைச் சமைப்பதில் திறமைவாய்ந்தவர். எங்களது உணவு ஆராய்ச்சியில் இவர் செய்து காட்டிய பலவிதமான உணவு வகைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. இதோ இவரது கைவண்ணத்தில் உருவான சோள பால் சாதம்.

சோளப் பால் சாதம்

- அங்குலக்ஷ்மி



தேவையான பொருள்கள் :

பிரியாணி அரிசி - 250 கிராம், சோளம் - 100 கிராம்,

துணியில் வடிகட்டி பால் எடுக்கவும். அந்தப் பாலை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, நன்றாகக் கொதிக்க விடவும்.

★ பச்சை வாடை போனவுடன் அதில் சர்க்கரையைச் சேர்த்து நன்றாகக் கிளறவும்.





★ ஏலக்காயை, தோல்நீக்கிப் பொடித்துச் சேர்க்கவும். நன்றாகச் சுண்டும் வரை கைவிடாமல் கிளறவும்.

★ பின்னர் அதில் தண்ணீரில் கரைத்த சோள மாவு மற்றும் அரிசி மாவு சேர்த்து நன்றாகக் கிளறவும்.


★ தேவையான அளவு நெய் ஊற்றி நன்றாகக் கிளறவும். அல்வா பதத்துக்கு வந்தவுடன், நெய்யில் வறுத்த முந்திரியைச் சேர்த்து இறக்கினால் காட்டுக் கம்பு அல்வா ரெடி!



சோளப் பால் - 1 கப்,
வெங்காயம் (பெரியது) - 50 கிராம்,
தக்காளி - 50 கிராம்,
இஞ்சி பூண்டு விழுது - 30 கிராம்,
தேங்காய்ப் பால் - 1 கப்,
பட்டை - 2,
கிராம்பு - சிறிது,
பிரியாணி இலை - 1,
உப்பு - தேவையான அளவு,
பச்சை மிளகாய் - 2,
நெய் - 50 மில்லி,
எண்ணெய் - 25 மில்லி.

என் மாணவனின் உறவினரான சங்கீதா, திருப்பூரைச் சேர்ந்தவர். இவர் புதுவகையான பொரியல்களைச் செய்வதில் வல்லவர். பொதுவாக அப்பளத்தை தனியாகச் சாப்பிட்டுத்தான் பார்த்திருப்போம். இதோ இவர் தேங்காய் துருவலுக்குப் பதிலாக, அப்பளத்தை உபயோகித்து பொரியல் செய்யும் புதுமையைக் காண்போம்.





வெண்டைக்காய் அப்பளப் பொரியல் - சங்கீதா

தேவையான பொருள்கள் :

எண்ணெய் - 100 மில்லி,
கடுகு, உளுந்து - சிறிது, வெங்காயம் நறுக்கியது - 2,
கறிவேப்பிலை - சிறிது, மஞ்சள் தூள் - 5 கிராம்,
மிளகாய்த் தூள் - 10 கிராம், இஞ்சி பூண்டு விழுது - 5 கிராம்,
வெண்டைக்காய் (நறுக்கியது) - 1 கப்,
உப்பு - தேவையான அளவு,
அப்பளம் (நொறுக்கியது) - 3.

செய்முறை :

★ ஒரு பாத்திரத்தில் எண்ணெயை விட்டு, அது காய்ந்ததும் பட்டை, கிராம்பு, ஏலக்காய், பிரியாணி இலை சேர்த்து வதக்கவும்.

★ பின்னர் அதில் வெட்டிய வெங்காயம் மற்றும் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து வதக்கவும்.

★ அதனுடன் நறுக்கிய தக்காளி சேர்த்து தேவையான அளவு உப்பு சேர்த்து வதக்கவும்.

★ அதில் தேவையான அளவு சோளம் சேர்த்து நன்றாகக் கிளறவும்.

★ தேங்காய்ப் பால் மற்றும் சோளப் பால் சேர்த்து நன்றாகக் கொதிக்க விடவும்.

★ தேவையான அளவு தண்ணீர் ஊற்றவும். தண்ணீர் கொதித்தவுடன் ஊறவைத்த அரிசியைச் சேர்த்து வேக வைக்கவும்.

★ அரிசி நன்றாக வெந்தவுடன் இறக்கவும். ருசியான சோளப் பால் சாதம் தயார்.



செய்முறை :

★ வாணலியில் எண்ணெய் விடவும். எண்ணெய் நன்றாகக் காய்ந்ததும் அதில் கடுகு, உளுந்து போட்டுத் தாளிக்கவும்.

★ அதில் நறுக்கிய வெங்காயம், கறிவேப்பிலை சேர்த்து நன்றாக வதக்கவும்.



★ பின்னர் அதில், இஞ்சி பூண்டு விழுது, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

★ பிறகு நறுக்கிய வெண்டைக்காயை எண்ணெயில் பொரித்து எடுத்து அதனுடன் சேர்த்துக் கலக்கவும்.

★ அப்பளத்தைப் பொரித்து, கைகளால் நொறுக்கி அதனுடன் சேர்த்து நன்றாகக் கலக்கினால், வெண்டைக்காய் அப்பளப் பொரியல் ரெடி!

காங்கேயத்தில் வசிக்கும் எனது குடும்ப நண்பரின் மனைவி மும்தாஜ் பேகம், புதுவகையான சட்னி செய்வதில் திறமை வாய்ந்தவர். இவர் செய்யும் பிரியாணிக்கு இந்தச் சட்னியை சேர்த்துப் பரிமாறும்போது சூப்பர் டேஸ்ட்டாக இருக்கும். இப்போது சட்னி செய்யும் முறையைக் காண்போம்.



களாக்காய்ச் சட்னி

- மும்தாஜ் பேகம்

தேவையான பொருள்கள் :

களாக்காய் - 15,
சின்ன வெங்காயம் (நறுக்கியது) - ½ கப்,
தேங்காய்த் துருவல்- ½ கப்,

நளபாகப் போட்டி - 11 (முடிவு)

நவம்பர் 2007ல் இடம்பெற்ற போட்டியின் விடை :

ச	வி	ன்	க	ங்	ளா	ய்	பொ
ன்	கு	ரு	ங்	கை	ஞ்	நி	ன்
ண	செ	ட	கு	ர்	ரு	ள	ம
ப	ட்	டி	க	யு	வி	ளை	ல்
ரா	ஒ	ல	ரு	க	தா	க	ள
நா	பா	க்	சா	மே	ந்	த	வ
த	மா	ம	அ	த	வி	தா	ம்
வா	ரெ	நா	யு	கு	வி	ல்	ன்

வந்து குவிந்த கூப்பன்களில் ரூ. 150/- பரிசு பெறும் 20 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்!

1. ஆர். சித்ரா, பெங்களூரு - 78, 2. கே. சுஜனா, சிதம்பரம், 3. பி. பத்மினி, சென்னை - 33, 4. கே. செண்பகலெட்சுமி, புதுச்சேரி, 5. எம். வள்ளியம்மாள், தென்காசி, 6. ஆர். உமா சங்கரி, பாண்டி - 4, 7. பூங்கோதை இராஜா, சென்னை - 20, 8. து. உமாதேவி, கோவை - 12, 9. மைதிலி, திருச்சி - 6, 10. எஸ். சந்திரகலா, தர்மபுரி - 5, 11. கே. சரஸ்வதி, பெங்களூர் - 32, 12. சி. கீதா, புதுக்கோட்டை, 13. எஸ். அம்புஜம், கிருஷ்ணகிரி, 14. ஆர். சரஸ்வதி, சென்னை - 94, 15. சுபஸ்ரீ பரத்வாஜ், 16. ஆர். அமுதா, நெய்வேலி - 1, 17. பி. ருக்மணி, சேலம் -5, 18. ஸ்ரீமதி லலிதா சங்கர், பெங்களூரு - 76, 19. ராதாதேவி, காரைக்குடி - 2, 20. ஜி. வித்யா, ஊரப்பாக்கம்.

காய்ந்த மிளகாய் - 5, கடலைப் பருப்பு - 10 கிராம்,
உளுந்து - 10 கிராம், எண்ணெய் - 20 மில்லி,
கறிவேப்பிலை - சிறிது, தனியா - 10 கிராம்,
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

★ களாக்காயின் விதைகளை நீக்கி இரண்டாக நறுக்கி வைக்கவும்.

★ கடலைப் பருப்பு, உளுந்து, தனியா, காய்ந்த மிளகாய், அனைத்தையும் நன்றாக வறுத்துக் கொள்ளவும்.

★ வாணலியில் எண்ணெய் காய்ந்ததும், கறிவேப்பிலை, சின்ன வெங்காயம் சேர்த்து பொன்னிறமாக வதக்கவும்.

★ பின்னர் அதில் வெட்டிய களாக்காய் மற்றும் துருவிய தேங்காய் சேர்த்து வதக்கவும்.

★ பின்பு வறுத்த அனைத்தையும் சிறிது தண்ணீர் ஊற்றி, உப்பு சேர்த்து அரைத்து இறக்கினால் சட்னி தயார்.

★ இட்லி, தோசை, கடு சாதம், தயிர் சாதம் என எல்லாவற்றுடனும் ஜோடி சேர்ந்து அசத்திவிடும்.



சமையல் செய்முறைப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட வாக்கியங்கள் இவை. ஒவ்வொன்றும் எந்தக் காயைக் குறிக்கிறது என்று கண்டுபிடியுங்கள். உங்களுக்கு உதவ விடைப் பட்டியல் உள்ளது. அதிலிருந்து விடைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

1. காம்பு, நரம்பில்லாமல் ஆய்ந்து பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும்.
2. தோலைச் சீவி சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
3. வில்லை போடும்போது நாரை எடுத்து விடவும்.
4. உள்நரம்பை எறிந்து விடுங்கள்.
5. கடையிலிருந்து மூன்று மீடியம் அளவு பத்தைகளை வாங்கிக் கொள்ளுங்கள்.
6. முனை சட்டென ஒடியும் இளசான காய்களாகத் தேர்ந்தெடுங்கள்.
7. 'குல்லா'வை நீக்கிவிட்டு நறுக்க வேண்டும். (உங்கள் குல்லாவை அல்ல, காய்களின் குல்லாவை).
8. சாம்பாருக்கு, பெரியதைவிட சின்னதே அதிக ருசி.

விடைப் பட்டியல் :
வாழைக்காய், பலாக்காய், பூசணிக்காய், வாழைத்தண்டு, கத்தரிக்காய், வெங்காயம், வெண்டைக்காய், அவரைக்காய்.

- ஜி.எஸ்.எஸ்.

இங்குள்ள புதிரைச் சரியாக நிரப்பி வெட்டி மங்கையர் மலருக்கு அனுப்புங்க. குலுக்கல் முறையில் 20 பேருக்கு 150 ரூபாய் பரிசு! ஜெராக்ஸ் அனுப்பக் கூடாது!
கடைசித் தேதி : 15.12.2007

உறையின் மீது நளபாகப் போட்டி - 12 என்று குறிப்பிடவும்.
ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....

பாரதியா? ஔவையா?

-அனுஷா நடராஜன்

எம். பர்வதவர்த்தினி, வயலூர்.

மறைந்த எழுத்தாளர் லா.ச.ரா. பற்றி...

''லா.ச.ரா. கதை எழுத உட்காருவதில்லை. கதை, அவர் மனதில் உட்கார ஆரம்பிக்கும்போது, இவரும் கதை எழுத உட்காருகிறார்'' என்பார்கள். அது நிஜம்தான்! பேனாவை, மனசின் கையில் கொடுத்து எழுத வைத்தவர் என்பதால் பெரும்பான்மையான கதைகள் உணர்ச்சிக் குவியலாகத்தான் இருக்கும். அவருடைய 'சிந்தாநதி'யில் தனது இளமைக்கால அனுபவங்களைக் கொட்டியிருப்பார். சத்தியத்தின் உக்கிரம் அது!



டென்ஷனுடன் ரம்யா ஷான், பெங்களூர்.

அனுஷா மேடம், நவம்பர் மாத மங்கையர் மலரை, பக்கத்துக்குப் பக்கம், பத்து முறை புரட்டி விட்டேன். பெட்டிக் கதையும் இம்மாத இல்லத்தரசியும் பூதக் கண்ணாடியில் கூடக் காணவில்லையே?

இடப்பற்றாக்குறை காரணமாக விடுபட்டுப் போய்விட்டன. இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. [இதுக்கெல்லாம் டென்ஷனாகலாமா? ஒருவேளை உங்க ஊரில் நடக்கும் தடாபுடால் பாலிடிக்ஸின் பாதிப்போ?]

எல். உஷாகுமாரி, சூளைமேடு.

பழைய திரைப்படப் பாடல்கள் ரீ-மிக்ஸ் என்ற பெயரில் இசைக் கொலை செய்யப்பட்டு வருகின்றனவே!

பாட்டாவது பரவாயில்லை! பழைய படத்தை அதே பெயரில் பெருமையுடன் ரீமேக் செய்கிறார்களே! எதற்கு? 'சரக்கு அம்புடுதேன்' என்று க்ளியராகக் காட்டிக் கொள்ளவா?



வி. ஜானகி, சென்னை - 4.

பயணம் செய்யும் போது ஏதாவது தொலைத்த அனுபவம் உண்டா?

எப்போதாவதா...? எப்போதுமே தொலைப்பதுண்டு! மேல்பர்த்திலோ, எதிர் பர்த்திலோ படுத்துக் கொண்டு, இரவு பூரா உச்சஸ்தாயியில், கர...கரா... கொர்... ஹுர்ர் என விதவிதமாகக் குறட்டை விடுபவர்களால்... என் அழகான தூக்கத்தை!

எஸ். வெங்கடேசன், மேலூர்.

அனுஷா, நீங்க எழுதி பிரசுரமான முதல் கவிதை ஞாபகமிருக்கா...?

உதட்டால் மழலை பேசலாம்
குழல் வாசிக்கலாம்
மாம்பழம் சாப்பிடலாம்
முறுவல் பூக்கலாம்
சீட்டி அடிக்கலாம்
சிரித்துப் பேசலாம்
அழகு
காண்பிக்கலாம்



பாட்டுப் பாடலாம்
வம்பு பேசலாம்
முத்தம் தரலாம்
எல்லாவற்றுக்கும்
மேலாக
மௌனமாய்
இருக்கலாம்.

இதுதான் நான் கவிதை என நினைத்துக் கொண்டு எழுதியது.. அது கவிதையே இல்லை என இப்போது புரிகிறது. உம்... காலம் கடந்த ஞானம்!

கே.எஸ். கிருஷ்ண வேணி, கும்பகோணம் - 1.

மனிதர்களைப் போல மிருகங்களுக்கும் பி.பி. ஷுகர் வருமா?

பையனை எம்.பி.ஏ. படிக்க ஆஸ்திரேலியா அனுப்பணுமே என்ற கவலையுள்ள எலியைப் பார்த்திருக்கீங்களா?

வேளச்சேரியில் டூப்ளெக்ஸ் வீடு ஒன்று வாங்கி விட்டு இ.எம்.ஐ. கட்ட முடியாமல் திணறும் தவளையைத் தெரியுமா?

பெண்ணுக்கு தம் இனத்திலேயே எம்.எஸ். படித்த, ஜாதகப் பொருத்தமுள்ள வெல்செட்டில்ட் - டிடோடலர் மாப்பிள்ளைக்காக அலைந்து திரியும் காக்காய் இருக்குமா?

பி.பி., ஷுகர், ஸ்ட்ரெஸ் எல்லாம் நமக்குத்தான்!


சுஜிதாராம், திருப்பத்தூர் - 2.

அனுஷா ரசித்துப் பார்ப்பது பழைய திரைப் படப்பாடல்களா, புதிய திரைப்படப் பாடல்களா?

நிச்சயம் பழைய திரைப் படப்பாடல்கள் தான்! அதிலும் பி. சுசீலாவின் பாடல்கள் என்றால் தனி மயக்கமே உண்டு... 'மலர்கள் நனைந்தது பனியாலே', 'பார்த்த ஞாபகம் இல்லையோ?' 'கங்கைக் கரை' 'சிட்டுக்குருவி', 'காதல் காதல் என்று பேச', 'இயற்கை என்னும்' 'நாளை இந்த நேரம் பார்த்து', அடடா... கேட்டுக்கிட்டே இருக்கலாம். பாத்துக்கிட்டே இருக்கலாம்.

இன்னொரு விஷயம் கவனிச்சிருக்கீங்களா? அந்தக் காலத்து டூயட் பாடல்களில் ஹீரோ மட்டும் காலில் ஷூ அணிந்திருப்பார். கதாநாயகிகள் படுஸ்டைலாக சுரிதார் போட்டிருப்பார்கள். ஆனால் காலில் செருப்பிருக்காது. [சந்தேகமிருந்தால் 'தேடினேன் வந்தது', 'அம்மம்மா காற்று வந்து' 'காதலிக்க நேரமில்லை... காதலிப்பார் யாருமில்லை' பாடல்களைப் பாருங்க..]

அது ஏன் என்று இன்றுவரை விடை தெரியவில்லை!


லா.ச.ரா.



ராம வள்ளியப்பன், கோவை.

'ஆறுவது சினம்' என்கிறார் ஔவையார். 'ரௌத்ரம் பழகு' என்கிறார் பாரதி... யார் சரி?

கோபத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று Cool anger. காந்தியடிகள், வெள்ளையர்களிடம் காட்டியது! அது தார்மிகமான அன்புக் கோபம்.



ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை

பயப்படவா?

"மனைவிக்குப் பயப்படுற கணவன்கள்தான் அதிகமாமே! ஆனால், நீங்க எனக்குப் பயப்படுறதாவே தெரியலையே?" என்று சுந்தரிடம் அலுத்துக் கொண்டாள் சுவாதி.

"ஆமாம். கதை, ஜோக்ஸ்லகூட அப்படித்தான் வருது. என்ன காரணமாக இருக்கும்?"

சுந்தர் யோசித்தான். தன் நண்பர்களில் பலரும் மனைவிக்குப் பயப்படுகிறார்கள். வினோத்துக்கு, தன் லேட்நைட் பார்ட்டியைத் தடைசெய்து விடக்கூடாது என்று பயம். கார்த்திக்கு, தான் ரேஸாடுவது தெரியக்கூடாது. பிரேமுக்கு, சக ஸ்டெனோவிடம் பழக்கம். ஆக, ஏதோ ஒரு காரணத்துக்கு எல்லோரும் வீட்டில் பொய் சொல்லி நடிக்கிறார்கள்.

"பொய்... நாடகம்... இதுதான் பயத்துக்குக் காரணம். இப்ப சொல்லு... நானும் உனக்கு பயப்படவா?"

"வேண்டாம்" என்று கூறி அவன் மார்பில் முகம் புதைத்தாள் சுவாதி.

– ஸ்ரீதேவி, தூத்துக்குடி – 1.

இன்னொன்று Pressure Cooker anger. அது சராசரியானவர்கள் காட்டுவது. வெறுப்பை வளர்க்கும் வெடிக்கும் கோபம்!

பிரஷர் குக்கர் கோபத்தைக் குறைத்துக் கொண்டு, குளுமையான கோபத்தை மிகச் சரியான நேரத்தில், மிகச் சரியான அளவில், மிகச் சரியான நபரிடம் பயன்படுத்த ஒரு பயிற்சி வேண்டும். அதைத்தான் பழகச் சொல்கிறார் பாரதியார்.

அப்படிப் பயன்படுத்திய பிறகு, சட்டென்று ஆறி, மனத்தை 'தண்' என்று வைத்துக் கொள்ளுங்க என்கிறார் ஔவையார்!

தமிழ்ப் பாட்டியும் சரிதான்! முண்டாசு கவிஞரும் சரிதான்!

சுமதி வேணுகோபால், கள்ளக்குறிச்சி.
சமீபத்தில் உங்களை வியக்க வைத்த செய்தி?


நமது பெங்களூர் வாசகி, ராதா நரசிம்மன் அனுப்பியுள்ள துணுக்குச் செய்திதான்!

இந்திய கோடீஸ்வரர், முகேஷ் அம்பானிக்கு அவரது மனைவி நீதா அம்பானி, 60 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஏர் பஸ்ஸைப் பரிசளித்துள்ளார். பிறந்த நாள் பரிசாம்.

அந்த மிக நவீனமான ஏர் பஸ்ஸில்... 'மூட் லைட்டிங்' என்று சமாசாரம் உள்ளது. பயணிகளின் 'மூடு'க்கு ஏற்ப விளக்குகள் எரியுமாம்! ஸ்நூக்கர், டேபிள் டென்னிஸ் என விதவிதமாக விளையாடலாமாம்! ஒரே நிமிடத்தில் சுடச்சுட சுவையான இட்லி, சாம்பார் தயாரிக்கும் சூப்பர் இயந்திரம் இருக்கிறதாம்.

ஹூம்! அவங்க வாழ்க்கையோட சிலபஸை கடவுள் நல்ல மூடுல இருந்தப்போ எழுதிட்டாரு போல.. ஏர்பஸ்... அது இதுன்னு கலக்குறாங்க... நமக்கு சைக்கிள்ல டபுள்ஸ்தான்!

அறுவை சிகிச்சை மற்றும் Bye-pass-க்கு மாற்று சிகிச்சை



இவற்றுல் ஏதேனும் உங்களுக்கு உண்டா?

- மார்பு வலி, தோள்வலி, முதுகு வலி
- மூச்சு விடுவதில் சிரமம்,
- மார்பு அல்லது வயிற்றில் எரிச்சல்
- படபடப்பு மற்றும் ஒழுங்கற்ற இதயத் துடிப்பு
- தலைவலி, தலைசுற்றல், சோர்வு மற்றும் வியர்வை
- உங்கள் இரத்த அழுத்த அளவு 140 / 90க்கு மேல்
- இரத்தத்தில் மொத்த கொழுப்பு சத்து அளவு 200 மி.கி.க்கு மேல்
- இரத்தத்தில் டிரைகிளைசரைட் (ஒரு வித கெட்ட கொழுப்புச் சத்து) அளவு 150 மி.கி.க்கு மேல்
- இடுப்பு சுற்றளவுக்கு (இயல்பான அளவு) ஆண் என்றால் 90 செ.மீ. பெண் என்றால் 85 செ.மீ. மேல்
- உடல் பருமன் பிரச்சினை உள்ளவரா?

மேற் சொன்ன பிரச்சினைகள் இருந்தால் உடனே நீங்கள் **ஆக்ஸிமெட்** மருத்துவமனையை தொடர்புக் கொள்ளவும்.

நவீன தொழில்நுட்ப முறையில் சிகிச்சைகள்

அட்வான்ஸ்டு இ.இ.சி.பி.
அமினோ ஆஞ்சியோ ப்ளாஸ்டி
ஓஸோன்
கிலேஷன் (ACT)
ஹைட்ரஜன் பெராக்ஸைடு
ப்ளேக் - X
க்ளுகோஷி யான் தெரபி

70 முதல் 100%வரை இதய அடைப்புகளுக்கு சிகிச்சை அளிக்கப் படுகிறது. (as out-patients)

Dr. B. Ayaz Akber, Chairman
MD AM (Italy), DAC, MACCG, C.O.T. (Canada)
Consultant - Chelation & Bio Oxidative Therapy

With prior appointment only

Timing Weekdays 9.00 am to 7.00 pm
Sundays 10.00 am to 5.00 pm

OXYMED HOSPITAL
PRIVATE LIMITED
CLOSE TO YOUR HEART

Annexed to *HIMA*
786, Anna Salai, Nandanam, Chennai-35.
Phone : 4213 1010/42131014
Fax : 044-4213 1020
Adayar Branch:
Phone : : 24454869/24452753

Email : oxymedhospitals@yahoo.com Website : www. oxymedhospital.in

ட்ரியம்பாவா!

முன்பெல்லாம் மார்கழி மாத உற்சவம் கோயில்களில் பத்து நாட்கள் அல்லது இருபது நாட்கள் நடக்கும். அப்பொழுது தேவாரம் ஓதுவார் அக்கோயிலில் வந்து பாடுவார். அந்தச் சமயத்தில் பகவானை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து, 'திருவெம்பாவை'யைப் பாடுவார்கள்.

இந்த வழக்கமானது, நம் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டுக்கும் சென்றிருப்பது பற்றி யாத்திரீகர் ஒருவர் தமது புத்தகத்தில் குறிப்பிட்டிருந்ததை, ஸ்ரீ ஸ்ரீ மகாபெரியவர் படித்ததாகவும் தமது உபந்நியாசத்தில் கூறியிருக்கிறார்.

அயல்நாட்டுக்காரர் ஒருவர் சயாமி நாட்டுக்குச் சென்றிருந்தாராம். டிசம்பர் மாதத்தில் அங்கு பற்பல நகரங்களில் ஒரு பிரம்மாண்டமான உற்சவம் நடந்ததாம். நகரின் முக்கிய பகுதியில் பெரிய கொட்டகையை அமைத்து, அதில் பெரிய ஊஞ்சலைத் தொங்கவிடுவார்களாம். அந்த ஊஞ்சலில் ஒருவன் அமர்ந்து ஆட வேண்டுமாம். ஆடும்பொழுது மிக உயரமாகச் சென்ற பிறகுதான் கீழே வரவேண்டுமாம். (அதாவது ஊஞ்சலாடுபவன் ஈஸ்வரனைக் கண்டு வருவதாக ஐதிகம்) ஆடும்பொழுது அவன் கால் பூமியில் பட்டால் அவன் சொத்துக்கள் முழுவதும் அரசாங்கத்தைச் சேர்ந்து விடுமாம். அப்படி நடக்கும் அந்த ஊஞ்சல் ஆட்டத்தைப் பார்க்க, அந்த ஊர் ராஜாவே தன் சேனைகளுடன் வருவாராம்.





இந்த மாதிரி நடக்கும் உற்சவத்தில் ஆடுபவனை தட்சிணாமூர்த்தியாகப் பாவித்து ஒரு மந்திரத்தைச் சொல்கிறார்களாம். அது 'ட்ரியெம்பாவா' என்று முடிவதாக அந்த யாத்திரீகர் எழுதியிருக்கிறாராம்.

இதைக் கூறிய ஸ்ரீ ஸ்ரீ மகாபெரியவா இன்னொன்றையும் கூறியிருக்கிறார். அதாவது அவர் ஆராய்ந்து பார்த்ததில் '' 'ட்ரியெம்பாவா' என்று முடிப்பதிலிருந்து அவர்கள் திருவெம்பாவையைத்தான் பாடியிருக்கிறார்கள் என்று புரிந்தது. ஏனென்றால், உற்சவம் ஆரம்பித்து மார்கழி பௌர்ணமியுடன் முடிகிறது. நாம் பின்பற்றி வந்த ஆன்மிகப் பழக்கங்கள் வெளிநாட்டுக்கும் பயணித்துப் போயிருக்கிறது மிகவும் பெருமையாக இருக்கிறது'' என்று கூறியிருக்கிறார்.

ஆகமொத்தம் 'திரைகடலோடிய ட்ரியெம்பா'வாகி விட்டது திருவெம்பாவை!


தொகுப்பு : மாலதி சந்திரசேகரன்

ஜொலிக்கும் ஃபேஷன் ஜுவல்ஸ்

30-11-2007 முதல்
30-12-2007 வரை

ஸ்ரீ பல்சானி ஜுவல்லர்ஸ்

தங்க முலாம் பூசப்பட்ட தகதகவென மின்னும் எண்ணற்ற புதிய டிசைன்கள்,
எண்ணிலடங்கா மாடல்கள். சொர்ணங்களின் சொர்க்கம்.



உங்களின் கண்களை கவரும் **Temple Jewels** பல வண்ணங்களில், பல வித டிசைன்களில் உங்கள் பல்சானி ஜீவல்லர்ஸ்-ல் இப்பொழுது மிக மிக குறைந்த விலை அறிமுகமாகி உள்ளது



இளைய தலைமுறைகளை கண்டிழுக்கும். வெள்ளியில் பதித்த அமெரிக்கன் டயமண்ட் நகைகள், அழகான டிசைன்களில்... குறைந்த விலையில்... பாலீஷ் போய்விடுமே என்ற கவலை வேண்டாம். மீண்டும் பாலீஷ் செய்து கொள்ளலாம். இதன் விலை ரூ.1000/- முதல் ஆரம்பம்.



ஒரு வித ஸ்பெஷல் உலோகத்தின்மேல் ½ கிராம் அல்லது 1 கிராம் தங்கம் 'கோட்' செய்யப்பட்டு உருவாக்கும் தங்க நகைகள்தான் இன்றைய பேஷன் உலகின் நவநாகரிக மங்கைகளின் உள்ளத்தில் நம்பர் ஒன் இடத்தை பிடித்திருப்பது.

நீங்கள் வாங்கிச் செல்லும் ½ கிராம் தங்க நகையை உபயோகப் படுத்திய பின் ஆறு மாதத்துக்குள்ளும், ஒரு கிராம் தங்க நகையை உபயோகப்படுத்திய பின் ஒரு வருடத்திற்குள்ளும் எங்களிடம் திருப்பித் தந்தால் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்து வேறு புதிய நகையை எங்களிடம் பெற்று மீண்டும் நீங்கள் ஜொலிக்கலாம்.

உங்கள் வாழ்க்கையில் வளம் பெற, வியாபாரத்தில் செழிக்க, கண்களை கவரும் விலை உயர்ந்த ஒரிஜினல் ராசிக்கற்களை வெள்ளியில் பதித்து 350 ரூபாய்க்கு குறைந்த விலைக்கு விற்பது நாங்கள் மட்டும்தான் இது தவிர 22 கேரட் ராசிக்கல் மோதிரமும் உண்டு. அதுவும் 100 சதவிகிதம் உத்திர வாதத்துடன்.

சிறப்புச் சலுகைகள்:

(1gm மற்றும் American Diamond நகை வாங்குபவர்களுக்கு மட்டும்)
உங்கள் நகைகளுக்கு 100% உத்திரவாதம் உண்டு
ரூ. 100 முதல் ரூ.1000 வரை மாத சீட்டும் உண்டு
ரூ. 500 முதல் 1,500 வரை வாங்குபவர்களுக்கு ஒரு ஜோடி American Diamond கம்மல் இலவசம்.
ரூ. 1,500/- முதல் ரூ. 2,500/- வரை வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Dollar இலவசம்.
ரூ. 2,500/- க்கு மேல் வாங்குபவர்களுக்கு ஒரு American Diamond Necklace Set இலவசம்.

இந்த விளம்பரத்தை கத்தரித்து வருபவர்களுக்கு **5%** கூடுதல் கழிவு

நீங்கள் வாங்கிச்செல்லும் மூக்குத்தி ஜோடியை தோடுகள் மேல் தோடாகவும், அல்லது குழந்தைகளுக்கும் தோடாக அணிவித்து அழகுபடுத்தலாம். பரவசப் படுத்தும் எண்ணற்ற வண்ணங்களில் 22 கேரட் தங்கத்தினால் தயாரிக்கப்பட்ட விலை ரூ.100/- முதல்...


பல்சானி ஜுவல்ஸ் நகைகளை ஆன்லைன் மூலமாகவே வாங்கலாம்!
எங்களுடைய புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையதளம் **www.sripalsanijewels.com**
மூலம் நகை வாங்குபவர்களுக்கு டெலிவரிசார்ஜில் 50% சிறப்புத் தள்ளுபடி
வழங்கப்படும். இச்சலுகை நவம்பர் 30 முதல் டிசம்பர் 30 வரை மட்டும்.

SRI PALSANI JEWELS

110, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, (ஏவி.எம்.ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் அருகில்),
மைலாப்பூர், சென்னை - 600 004. ☎: 28111737, 28117036. www.sripalsanijewels.com

அம்மா-பொண்ணு

ஜாலி பட்டாசு!



என் அம்மா பெயர் ஆதிரை வேணுகோபால். என் கையெழுத்தை அனைவரும் பாராட்டுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் என் அம்மா தான். விடுமுறை நாட்களில் தினமும் ஒரு பக்கம் ஆங்கிலம், ஒரு பக்கம் தமிழ் எழுதச் சொல்வார். +2வில் 96% எடுத்ததற்குக் காரணம், என் அம்மா வின் அன்பான அணுகுமுறைதான்!

- சந்தியா வேணுகோபால்,
அண்ணா பல்கலைக்கழகம்.





என் அம்மா உஷாவின் குரலும், என் குரலும் ஒரே மாதிரி இருக்கும். ஒருநாள் என் கல்லூரித் தோழி, என் வீட்டுக்கு ஃபோன் செய்தாள். ஃபோனை எடுத்தது நான்தான் என்று நினைத்துக் கொண்டு, "நாளைக்கு சத்யம் தியேட்டருக்கு 'சிவாஜி' படம் பார்க்கப் போகிறோம்" என்று சொல்லிவிட்டு வைத்து விட்டாள். காலேஜில் இருந்து நாங்கள் எல்லோரும் தியேட்டருக்குச் சென்றால், எங்களுக்கு முன்னால், என் அம்மா ஆஜராகி இருந்தார்கள். எங்களுக்குச் சரிசமமாக கலாட்டா பண்ணியதில் யார் அம்மா, யார் பெண் என்று தெரிய வில்லை. என் அம்மா, அவ்வளவு ஜாலி பட்டாசாக இருப்பார்கள்!

அம்மாவுக்காக நான் 'பொன்னியின் செல்வன்' படிப்பேன். எனக்காக அம்மா 'ஹாரி பாட்டர்' படிப்பார்கள்.

- க. சரண்யா, சென்னை - 34.

டீன் ஏஜ் வாசகிகள் தங்கள் அம்மா சம்பந்தப்பட்ட சுவையான நிகழ்ச்சிகளை புகைப்படத்துடன் எழுதி அனுப்பினால் பிரசுரித்து, பரிசும் தருகிறோம் - ஆர்.

Singapore & Malaysia Tour

(8 Days - 7 Nights)



2 NIGHTS GENTING HIGHLAND / 2 NIGHTS KUALA LUMPUR
3 NIGHTS SINGAPORE

Rs. 35,300/-
Ex.Chennai



Cost Inclusive

- Airfare with Airport tax in Jet Airways
- Singapore & Malaysia Visa
- Twin Sharing Accommodation with Breakfast
- Half-day city tour in Singapore & Kuala Lumpur
- Out door Theme Park in Genting Highland
- All transfers & Kuala Lumpur to Singapore by A/C Coach
- Jurong Bird Park with Monorail.
- Sentosa Entry + One Way Cable Car + Carlsberg Sky Tower
- +Under Water World + Dolphin Lagoon
- ONE TOUR ESCORT FROM CHENNAI TO CHENNAI

METRO TRAVELS
67, Basha Street, Choolaimedu, Chennai - 600 094.
Tel : 91 44 2374 2882, 2994 Fax : 91 44 2374 2466, 2996
Cell : 98415 77616, 98415 77614 E-mail : metrotravelsindia@yahoo.co.in
Website : www.metrotravelsindia.com

ரத்னா சித்த மருத்துவமனை மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையம்

பரவும்படை



"சோரியாஸிஸ்! தோலில் பரவி வரும் இந்தப் படையானது நகரங்களில் நாகரிக வாழ்வு வாழும் மக்களிடம்தான் அதிகமாகப் பரவி வருகிறது" என்று தமது மருத்துவமனைக்கு வரும் விசிட்டர்களைக் கணக்கிட்டுக் கருத்துச் சொல்கிறார் டாக்டர் கே. திருத்தணிகாசலம். இவர் ரத்னா சித்தா மருத்துவமனை மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர்.



''சோரியாஸிஸ் எனப்படும் இந்தப்படை தமிழகத்தில் இருபத்தைந்து ஆண்டுகளாகத்தான் வியாபித்துள்ளது. அதற்கு முன்பு ஏற்பட்ட பசுமைப் புரட்சித் திட்டத்தின்போது, வயல்களிலும் தோப்புகளிலும் இடப்பட்ட இரசாயன உரத்தால் இது தோன்றியிருக்கக்கூடும். அது சமீப காலமாக அதிகமாகி வருகிறது. இது முதலில் தலையில் 0.2 தடிமனில் வட்ட வடிவல் தோன்றும். பிறகு கை, கால்களில் தோன்றி, இறுதியில் முகத்தில் தோன்றும்" என்றார் டாக்டர் திருத்தணிகாசலம்.

சோரியாஸிஸ் பரம்பரை வழியே பரவுமா, தொற்றுநோயா?"

"இது பரம்பரையாக வராது; பரவக்கூடியதுமல்ல. உடலில் இரசாயனப் பொருட்கள் கூடுதலாகிப் போனதன் வெளிப்பாடுதான் சோரியாஸிஸ். இது தோலுடன் நிற்பதில்லை. சிலருக்கு நகம் அரித்துக் கொண்டே போய் சிதைத்துவிடும். எலும்பையும் தாக்கிவிடும். அப்படிப் பாதிக்கப்பட்டவருக்கு எலும்புகள் சந்திக்கும் இடங்களில் தோள் இணைப்பு, கை, கால் மூட்டுகளின் புறத்தோலில் வட்டமாகப் படை தெரியும். இது சோரியாடிக் ஆர்த்ரைடிஸ் எனப்படும். இத்தகைய பிரச்னைகள் எந்த வயதினருக்கும் வரலாம்."

சோரியாஸிஸ், சோரியாடிக் ஆர்த்ரைடிஸ் இரண்டு கோளாறுகளுக்கும் எங்கள் மருத்துவ மனையில் வெள்ளருகு, அருகம் புல், ஆவாரம்பூ, வில்வம் கலந்த மூலிகை உள்ளுக்குக் கொடுத்து, முதலில் இரத்தத்தைச் சுத்தம் செய்வோம். பிறகு ஆடுதீண்டா பாளை, கார்போகி கலந்து தயாரிக்கப்பட்ட தைலத்தை மேல் பூசக்குக் கொடுக்கிறோம். சோரியாஸிஸ் முற்றிய நிலையில் இருந்தால், எங்கள் மருத்துவமனையில் அட்மிட் செய்து பத்திய முறையில் சிகிச்சை கொடுத்து இரண்டு, மூன்று வாரங்களில் முற்றிலும் குணப்படுத்துகிறோம். உடலுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் சில மூலிகை மருந்துகளை உள்ளுக்குச் சாப்பிட்டால், சோரியாஸிஸ் வராதது மட்டுமல்ல; நோய் எதிர்ப்புச் சக்தியும் பெருகும். அப்படிப் பெருகும் போது, தோல் சம்பந்தப்பட்ட எந்த நோயும் உங்களை அணுகாது." என்கிறார் சித்தா மற்றும் மூலிகை மருத்துவரான கே.திருத்தணிகாசலம்.

மேலும் விபரங்களுக்கு: டாக்டர் க.திருத்தணிகாசலம், டாக்டர் தி.வேணி

ரத்னா சித்த மருத்துவமனை மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையம் 750, பெரியார் நெடுஞ்சாலை, N.S.K நகர், அரும்பாக்கம், சென்னை - 106.

போன் : 2622 3828, 2622 4688, 94433 74341, 94445 34444. Email : thiruthani12@yahoo.co.in www.rathnasiddha.com

பாவம் அப்பா!

ஆர். குமுதினி

என் மனதிலே நுரைத்துத் ததும்பியது ஆனந்தம்.

தட்டாமாலை சுற்றி... ஓடிப் போய்ச் சொகுசு கட்டிலில்... மலராய்ச் சரிந்து.. துள்ளிப் புரண்டு... ஊஹூம்! முடியாது! தனியறை, கட்டில் ஃபோம் மெத்தை எதுவுமே இல்லாத போது எப்படி முடியும்?

இன்றைய நாள், என் வாழ்நாளில் மறக்க முடியாத இனிய பொன்னாள்... எனக்கும் ஒரு வேலை கிடைத்து விட்டதே!

வெறும் 'பிளஸ் டூ' படிப்புக்கு யார் வேலையைத் தட் டில் ஏந்தித் தருவார்கள்?

எனக்கு மேலே படிக்க ஆசைதான்... ஆனால் பொருளாதார நிலை இடந்தரவில்லையே!

ஒருவேளை அக்காவும் அண்ணாவும் எங்களைத் தவிக்க விட்டுப் போகாமல் இருந்திருந்தால், என் ஆசையும் நிறைவேறியிருக்கலாம்.

கூனிக்குறுகி, வளைந்த முதுகோடும், தளர்ந்த மனசோடும், குடும்பத்தைச் சுமக்கிறாரே... என் அப்பா... அவரது தோள் வலியைக் குறைக்க வேண்டியே நான் மும்முரமாக வேலை தேடியலைந்தேன். இதோ... இன்று கடவுள் கருணை காட்டி விட்டான்!

பக்கத்து வீட்டு லலிதா மாமி, ரமா அக்கா, எதிர் வீட்டுச் சீனு தாத்தா, எல்லோரிடமும் போய் உரக்கக் கூவ வேண்டும் போல என்னுள் உற்சாகம்! உத்வேகம்!

'மாமி! எனக்கு வேலை கெடைச்சிடுச்சு. இனிமே லீவு நள்லேதான் உங்களுக்கு ஒத்தாசை செய்ய வருவேன். ரமா அக்கா! நாளைக்குக் காத்தாலே நானும் உங்க மாதிரியே அரக்கப் பரக்க... பஸ்ஸைப் புடிக்க ஓடுவேன்! சீனு தாத்தா, இனிமே முன்னே மாதிரி, உங்களுக்கு பேப்பரையும், கதைகளையும் படிச்சுக் காட்ட வர முடியாது!'




''ப்பூ ரொம்பத்தான் அலட்டிக் காதே.. போடி... அப்படியென்ன பெரிய ஆபீஸர் வேலையா கெடைச்சிருக்கு?'' என்று அவர்கள் கேலி செய்வார்களோ?

உம்... வேலை என்னவோ சாதாரண மானதுதான். காந்திபுரத்தில் புதிதாக ஆரம் பிக்கப்படவிருக்கும் ஒரு துணிக் கடையில் எனக்கு விற்பனையாளர் வேலை. சம்பளம், தொடக்கத்தில் அறுநூறு ரூபாய். கோயம்புத் தூரில் ஆடம்பர பங்களா வேலைக்காரிகள் வாங்கும் சம்பளத்தில், பாதி கூட இல்லை!

விஷயத்தைக் கேட்டதும், முகம் விகசிக்க, ''எல்லாம் பெருமாள் சித்தம்!'' என்கிறாள் அம்மா கண்ணீர் மல்க.

அப்பா வந்ததும் சொல்வேன். உற்சாகம் நிறைந்த பழைய அப்பாவாக மாறி, இப்போதைய சிடுசிடுப்பு, கோபத்தை ஓரங்கட்டிவிட்டு... கண்கள் விரியச் சிரிப்பார். ஆசையோடு ஆசீர்வாதம் செய்வார்.

''என் முதல் சம்பளத்திலே அம்மாவுக்கு ஒரு நல்ல ஸ்வெட்டர் வாங்கணும். உங்க உடம்பையும் ஒரு நல்ல டாக்டர்கிட்டே காட்டணும். அப்பா!'' என்று நினைத்துக்



கொள்கிறேன்.

நம்பிக்கை, நாணயத்துக்குப் பெயர் பெற்ற ஒரு பெரிய நகைக்கடையில் அப்பாவுக்கு வேலை. எழுத்தர், கணக்கர், முதலாளி இல்லாதபோது தராசின் முன்னே உட்காரும் தற்காலிக உரிமையாளர்... இப்படி எல்லாமே அவர்தான்! காரணம் அவரது விசுவாசமான உழைப்பு, நேர்மை! கண் பார்வையின் நிதானத்திலேயே ஒரு நகையின் எடையைத் துல்லியமாகச் சொல்லிவிடக்கூடிய திறமைசாலியான அவருக்கு, பாவம் குடும்பப் பாரத்தின் எடையைக் கணக்குப் போடத் தெரியவில்லை. விளைவு! நாங்கள் ஐந்து பேர் பிறந்தோம். முதலில் அண்ணா சங்கரன், இரண்டாவதாக அக்கா குணவதி அதற்கடுத்து நான், எனக்குப் பின்னால் தம்பி தனகரன். அவனை அடுத்து கடைக்குட்டி சுமதி...

வேறு நிலம், நீச்சு, சொத்து என்று எதுவுமே இல்லாத போது, சம்பளமாக் கிடைக்கும் சில சொர்ண புஷ்பங்களால் அப்பாவால், எங்களுக்கு.. ரோஜாப் படுக்கை விரிக்க முடியுமா என்ன? ஏதோ சொந்த வீடு என்பதாக ஒரு குச்சு வீடு இருப்பதே பெரிய பாக்கியம்!

அப்பா சுமக்கும் சிலுவையில்.. முதல் ஆணியை என் அண்ணா சங்கரன் அறைந்தான். 'மூத்த மகன் கெட்டுப் போனால் முழுக் குட்டியும் கெட்டுப் போகும்' என்ற முதுமொழியை மெய்ப்பித்தான்.

சங்கர் அண்ணா, திடீரென்று மாலையும் கழுத்துமாக வீடு திரும்பினான். கூடவே நிழலாக அவனது புது மனைவி. எளிய முறையில் பதிவுத் திருமணம். நண்பர்களின் முன்னிலையில். பெற்றவர்களின் விருப்பம்... ஆசிகள்? உம்! யாருக்கு வேண்டும்? வேற்று மதத்தவள். அதனால் வேண்டாம் என்பார்களாம். உண்மைதான்.

அந்தப் பெண்ணுக்கு மிக மிகச் சாதாரணமான தோற்றம். நிறமோ மாநிறத்துக்கும் கீழே. ஒல்லியாகப் பூஞ்சை உடம்போடு. இவளையா! இவளை எப்படி அண்ணா காதலித்தான்?

அண்ணா, அப்பாவைப் போலவே நல்ல சிவப்பு. 'நெடுநெடு' என உயர்ந்த நல்ல ஆகிருதியோடு, கம்பீரமாக இருப்பான்.

ஜோடிப் பொருத்தமில்லாவிட்டால் என்ன? வசதியில் எங்களால் எட்டிப் பிடிக்க முடியாத நிலா அவள். ஒரே பெண். எக்கச்சக்கமான சொத்துக்கு ஏகபோக வாரிசு. போதாதா? வீட்டோடு மாப்பிள்ளையாகிவிட்ட அண்ணா, தன் மாமனாரின் புதுத் தொழிற்சாலையைப் பார்த்துக் கொள்ளும் சாக்கில் வடக்கே போய்விட்டான். உள்ளூரில் இருந்தால்தானே வம்பு? நட்டபாத்தியில் கதிர் விடும் நெல் பயிருக்கு, பழைய பாத்தியை நினைத்து ஏக்கம் இருக்குமா?? எப்போதாவது, பண்டிகைக் காலங்களில், உள்ளே கிறுக்கிய இரண்டு வரிகளோடு,



கடற்கரைக்கு மக்கள் காற்று வாங்கவும் பொழுதுபோக்கவும் செல்கிறார்கள். அது மட்டுமல்ல. கடற்காற்றில் அயோடின் சத்து இருக்கிறது. இது பல வியாதிகளைக் குணப்படுத்த வல்லது. பிள்ளைகளுக்கு வரும் ஆறாத சிரங்குகள் கூட கடல் தண்ணீர் பட்டால் ஆறிவிடுகிறதே!

- ஆனந்தவல்லி, சாலிகிராமம்.

பெண்களுக்கு ஒரு யோசனை. வெளியில் எங்காவது செல்லும் போது (அ) கல்யாண வீடுகளுக்குச் செல்லும் போது எப்போதும் ஒரு ஹேர்பின்னை தலையில் குத்திக் கொள்ளவும். கல்யாண வீட்டிலோ, கோயிலிலோ யாராவது பூ கொடுத்தால் உபயோகமாக இருக்கும்.

- ராதா வெங்கடேஷ்,
(முகவரி தேவை)



வாழ்த்து அட்டை அவனிடமிருந்து வருவதுண்டு. மற்றபடி அண்ணா சங்கரனின் உறவு அவ்வளவுதான் என்றானது. இங்கேயும், அவனைப் பற்றிய பேச்சையே யாரும் எடுப்பதில்லை. அம்மா மட்டும்.. மறைவில், இரவுகளில், அழுவாள்.

அடுத்த ஆணியை அறைந்தவள் என் அக்கா குணவதி. முதலில் பிறந்த பெண் என்பதால், தங்கள் சக்திக்கும் மீறி, அவள் கேட்டதையெல்லாம் வாங்கித் தந்து பாசத்தோடு வளர்த்தார்கள். என் அப்பாவும், அம்மாவும்... நன்றிக்கடனாக அவள் தேடித் தந்தது அவமானம். தலைக்குனிவு.

ஒரே நாளில் எங்களை அவமானப் படுகுழியில் அமுக்கி விட்டுப் போய் விட்டாள் அவள். அந்த நான்கு இரவுகள்... யுகமாய் நீண்ட நான்கு இரவுகள். கல்லூரிக்குப் போனவள் வீடு திரும்பாமல் இருக்கவே... நாங்கள் தவித்த தவிப்பு. இன்று நினைத்தாலும் நெஞ்சு பதறுகிறது. போலீசுக்குப் போகவும் மனசில்லாமல், தேடாமல் இருக்கவும் முடியாமல்.. அப்பா கூடத்தில் உட்கார்ந்து விட்டத்தை வெறிக்க, வாயில் ஈரம்படாமல், வெறுந்தரையில் சுருண்டு கிடந்தாள் அம்மா.

பெயருக்குக் கொஞ்சமும் பொருந்தாத குணம் அக்காவுக்கு. மிகவும் பிடிவாதக்காரி. தான் அழகி என்ற கர்வம் நிறையவே உண்டு. எங்களுக்குள் சண்டை வந்தால் என்னைக் 'குதிரை மூஞ்சிக்காரி' என்று திட்டுவாள். ''ஏய்! காட்பரீஸ் சாக்லேட்... வாடி... இங்கே'' என்று சுமதியின் கறுப்பு நிறத்தைக் கேலி செய்து அவள் வயிற்றெரிச்சலைக் கிளப்புவாள். ஆனாலும் அவள் இவ்வளவு கேவலமாகப் படி தாண்டிப் போவாள் என்று யாருமே நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. தான் மாயமான மர்மத்தை அவளேதான் ஃபோன் மூலம் விடுவித்தாள். நான்கு நாட்களுக்குப் பின் கோடம்பாக்கம்வாசியாகி விட்ட தன்னைத் திரையுலகத் தாரகையாகக் கூடிய சீக்கிரமே பார்க்கலாமாம். அதற்கு, கூட்டிச் சென்ற காதலன் ரவி உதவுவானாம்!

எங்கள் எதிர் வீட்டில் வாடகைக்குத் தங்கியிருந்த ரவி ஏதோ ஒரு நிறுவனத்தில் வேலையில் இருந்தான். பார்த்தால் சாது போல் தெரிந்தான்... எப்போது, எப்படி... அக்காவுடன் பழக்கம் ஏற்பட்டதோ? சில நாட்களில், விரிவாக ஒரு கடிதமும் எழுதினாள். அதைச் சுக்குநூறாகக் கிழித்துத் தீயிட்ட கையோடு அப்பா அவளைப் பற்றிய நினைவுகளையும் சுட்டுப் பொசுக்கி விட்டார். ஆயிற்று... அக்கா சுதந்திரக் கிளியாய்ப் பறந்து போய், இப்போது கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கு மேலேயே ஆயிற்று. முதலில் துணை நடிகையாகத் தலைகாட்டிய

வள், கவர்ச்சி நடிகை குணஸ்ரீயாக உரு மாறிப் பிரபலமானாள். அதிர்ஷ்டம், அவளது பங்கில் இருந்திருக்க வேண்டும். அவளது 'பின் அப்' கவர்ச்சிப் படங்களைப் பார்த்து, இன்னும் குழந்தை மனம் மாறாத சுமதி, ''ஹை! பெரியக்கா படம் வந்திருக்கு... எவ்வளவு அழகா இருக்கா... இல்லே...'' என்று வியந்து ரசிக்கும் போது, அம்மா அவளைத் திட்டுவாள். அப்பா கண்ணில் பட்டுவிடப் போகிறது என்று ஒளித்து வைப்பாள். கிழித்துப் போட மனசு வராதோ என்னவோ!

சுமார் ஒரு வருஷம் முன்னே...

அக்கா திடுதிப்பென்று ஒருநாள் வந்தாள். அப்பா கடைக்குப் போயிருந்த சமயம் அது.

ஆதங்கமும் ஆத்திரமுமாக.. அடிக்காத குறையாக... திசைமாறிய பறவையாகி விட்ட, மகளைத் திட்டித் தீர்த்தாள் அம்மா.

அவள் கொடுக்க வந்த பணத்தைக் கையால் கூட தொட மறுத்தாள்.

''நீ மொதல்லே வந்த சுவடு தெரியாமே போய்ச் சேரு. உன் அப்பா வந்தார்னா... 'அவளை இந்த வீட்டு வாசற்படியை ஏண்டி மிதிக்க விட்டேன்னு' என்னை அடிச்சுத் துரத்தினாலும் ஆச்சரியம் இல்லே! அதனாலே ஏதோ... வந்தேன், பாத்தேன்னு இப்பவே போய்ச் சேரு...'' என்று அக்காவை விரட்டினாள் அம்மா.. பாவம்! அவள் மனசு உள்ளுக்குள் எப்படியெல்லாம் துடித்ததோ. திரும்பத் திரும்ப என்னையும் சுமதியையும் எச்சரித்து வைத்தாள்.

''அவள் வந்து போனது பற்றி யாரும் மூச்சுவிடக் கூடாது. நல்லவேளை! தினகரன் விளையாடப் போயிட்டான்.''

ஆனாலும் அன்றிரவு சுமதி தற்செயலாக உளறி விட்டாள்.

(தொடரும்)

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : வெல்லம்

கடைசி தேதி : 20.12.2007

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

''பணம் தரும் டாக்ஸியா?'' என்று நீங்கள் வியப்பது எனக்குப் புரிகிறது. வழக்கமாக இறங்கும் இடம் வந்ததும், நாம்தானே பணம் கொடுப்போம்? அமெரிக்காவில் நியூயார்க் நகரில் டாக்ஸி உங்களுக்குப் பணம் தரும். நீங்கள் சரியான பதில் சொல்லி போட்டியில் ஜெயிக்க வேண்டும்.



பணம் தரும் டாக்ஸி!

நான் கலிஃபோர்னியாவில் என் மகள், மருமகன், பேரனுடன் வசிக்கிறேன். மதியம் ஒய்வாக இருக்கும்போது தொலைக்காட்சி பார்ப்பது என் வழக்கம். ஒருநாள் கையில் ரிமோட்டை எடுத்துக் கொண்டு ஒரு சேனலைப் போட்டேன். அப்போது ஆரம்பமானது நான் மேலே சொன்ன கேம் ஷோ!

நூற்றுக்கணக்கான டாக்ஸிகள் ஓடிக்கொண்டு இருக்கும் நகரில் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கான பிரத்யேக டாக்ஸியும் ஓடிக்கொண்டு இருந்தது. தெருவில் சென்று கொண்டிருந்த சிலர், அந்த டாக்ஸியை நிறுத்தி ஏறிக்கொண்டார்கள். உள்ளே இருந்த டாக்ஸி டிரைவர் விவரம் கூறி, ''என்னுடன் ஒரு சவாலுக்கு வருகிறீர்களா? நீங்கள் சரியான பதில் கூறினால் உங்களுக்குப் பணம் தருவேன்'' என்றார். அவர்களும் மகிழ்ச்சியில் ஆரவாரித்தார்கள். மேலும் அவர், ''நான் நீங்கள் இறங்கும் இடம் வரும் வரை உங்களைச் சில கேள்விகள் கேட்பேன். நீங்கள் சொல்லும் ஒவ்வொரு சரியான பதிலுக்கும் உங்கள் பரிசுத் தொகை அதிகமாகும். உங்களுக்குச் சில



ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை

அலங்காரம்!

இது எட்டாவது பெண் பார்க்கும் நிகழ்ச்சி.

ரேகாவுக்குச் சலிப்பாய் இருந்தது. எப்போதும் ரேகா பட்டுப் புடவையும், நகையும் நட்டுமாய் 'பளிச்' என மேக்கப் போட்டுக்கொண்டு நிற்பாள். ஆனால் இன்று எதுவும் பிடிக்கவில்லை. ''இது மட்டும் அமையவா போகுது? அதுக்கெதுக்கு அலங்காரமும், நகை நட்டும்?'' என்று சாதா புடவையில், வந்து நமஸ்கரித்தாள்.

''அம்மா! ரொம்ப எளிமையா இருக்கா. புடவை, நகைக்கு ஆசைப்பட மாட்டா போலிருக்கு. எனக்குப் பிடிச்சிருக்கும்மா!'' சுதாகர் உடனே சம்மதம் கூற, ரேகா இன்ப அதிர்ச்சியில் திகைத்தாள்.

– எஸ். லதா சேகர், பண்ருட்டி.

சலுகைகளும் தருவேன். விடைகள் தெரியா விட்டால் செல்ஃபோனில் உங்கள் நண்பரைக் கேட்டுச் சொல்லலாம். தெருவில் செல்லும் நபரிடம் கேட்டுச் சொல்லலாம். இந்தச் சலுகை மூன்று முறைதான். இறங்கும் இடம் வந்ததும் அதுவரை நீங்கள் பெற்ற பணத்தைத் தருவேன்'' என்றார். அவர்களும் பதில் கூறிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் இறங்கும் இடம் வந்ததும், ''பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு இதை வாங்கிக் கொண்டு இறங்கிப் போகிறீர்களா அல்லது இரு மடங்கு பணம் வேண்டுமா?'' என்றார். அவர்கள் விழித்தார்கள். அவர் மேலும் தொடர்ந்து, ''எனக்கு முன் உள்ள வீடியோவில், ஒரு படம் போடுவேன். அது தொடர்பாக நான் கேட்கும் கேள்விக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் சரியான பதிலை நீங்கள் கூறிவிட்டால், இந்தத் தொகை இரு மடங்காக உங்களுக்குக் கிடைக்கும். தவறான பதில் சொன்னால் இதுவரை ஜெயித்த பணமும் போய்விடும்'' என்றார்.

சிலர் என்ன ஆனாலும் பரவாயில்லை. ஒரு கை பார்க்கலாம் என்று போட்டியைத் தொடர்ந்தார்கள். சிலர் 'கிடைத்தவரை லாபம்' என்று பணத்தை வாங்கிக்கொண்டு சந்தோஷமாக நடையைக் கட்டினார்கள். பணம் முழுவதையும் தொலைத்தவர்களும் இதில் கலந்து கொண்ட மனநிறைவுடன் சென்றார்கள். இப்பொழுதெல்லாம் மதியம் நான் தொலைக்காட்சிப் பெட்டிமுன் அமர்ந்து இதை ரசிப்பது வாடிக்கையாகி விட்டது.

எனக்கு ஒரு சந்தேகம்! இந்த நிகழ்ச்சி இன்னும் நமது தமிழ் தனியார் தொலைக் காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் கண்ணில் படவில்லையோ? சீக்கிரமே அவர்கள் கண்ணில் பட்டு, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று நீங்களும் பார்த்து மகிழும் நாளை எதிர்பார்க்கிறேன்!

– வர்த்தினி நாராயணன்,
கலிஃபோர்னியா.

'யுவஸ்ரீ கலா பாரதி' விருது



மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு UC MAS, ABACUS ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **'யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **'சுவாமி விவேகானந்தர்'** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெறும். LKG முதல் +2 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பிற துறைகளில் பரிசு பெற்றவர்கள் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 10ஆம் வகுப்பு மற்றும் ப்ளஸ் 2 பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களும் தங்களின் மதிப்பெண் சான்றிதழின் ஜெராக்ஸ் பிரதியுடன் **நெல்லை பாலு, நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா, G-28, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை-16. செல் 94439-30815, 94426-30815.** என்ற முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற 'வித்யா சேவா ரத்னா' விருதுக்கு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த (Matric & State board, CBSE) முதல்வர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் அவர்களைப்பற்றிய தன் விபரக்குறிப்பினை (Bio-Data) எங்கள் முகவரிக்கு அனுப்பிட அன்புடன் வேண்டுகிறோம். நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெறும்.

அமாவாசை நிலவு

ஏறத்தாழ நலங்கு வைக்கும் சடங்கு முடிந்துவிட்ட வேளையில், நண்பர்களின் தூண்டுதலால், கோகுல் மேடையை நெருங்கிவிட்டான்.

தேவகி கலக்கத்துடன் பார்க்க, திலகம், ஈஸ்வர் முகத்தில் பதற்றம் ஒட்டிக் கொண்டது.

பல பேர் கூடியிருக்கும் இடத்தில் என்ன அசிங்கப்படுத்தப் போகிறானோ என அனைவரும் கலங்க,

அவளையே உற்றுப் பார்த்த கோகுல், ''ஸாரி மைத்ரேயி! உங்கிட்ட நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன். எங்கப்பா உயிரைக் காப்பாற்றின பெண் நீ. உனக்கு எங்கக் குடும்பமே கடமைப்பட்டிருக்கு! உனக்காக எதையும் செய்ய நாங்க தயார். என்னை, உன் நண்பனா ஏத்துப்பியா?''

கைகளை நீட்டிவிட்டான்.

மைத்ரேயி அவனையே உற்றுப் பார்த்தாள்.

சட்டென கைநீட்டி, அவனது கைகளைப் பற்றிக் குலுக்க, கோகுல் முகத்தில் உற்சாகம் வழிந்தது.

ஈஸ்வர், திலகம், தேவகி சந்தோஷப்பட,

''அவ்ளோதான்! உனக்கு வாழ்த்துக்கள்! உனக்கு ஏதாவது பரிசு நான் தந்திருக்கணும். ஒண்ணு ஆச்சர்யமான கிஃப்ட் வச்சிருக்கேன். அது என்னன்னு இப்ப நான் சொல்ல மாட்டேன். சாயங்காலம் சொல்றேன்!''

கீழே வந்துவிட்டான்.

விருந்து ஒருவழியாக முடிந்துவிட, பங்களா கெஸ்ட்ஹவுசுக்கு மைத்ரேயி, தேவகியை, திலகம் கொண்டு வந்து விட்டாள்.

பரிசுப் பொருட்கள் ஏராளமாக வந்திருந்தன.

தேவகி வந்து திலகம் கைகளைப் பிடித்தாள்.

''தெருவுக்கு வந்துட்ட எங்களை, கோபுரத்துல தூக்கி வச்சிட்டீங்களே! இந்த நன்றிக்கடனை எந்த வழில நாங்க செலுத்தப் போறோம்?''

''பிரிச்சே பார்க்காதீங்க. மைத்ரேயி எங்க வீட்டுக் குழந்தை! புரியுதா? அவளுக்குத் திருஷ்டி சுத்திப் போடுங்க. எல்லாக் கண்களும் அவ மேலதான் இருக்கும்!''

திலகம் புறப்பட்டுப் போக, அம்மா உடனடியாக உப்பு, மிளகு எல்லாம் எடுத்து வந்து மைத்ரேயிக்கு திருஷ்டி கழித்தாள்.

''ரெண்டு நல்லது நடந்திருக்குடி மைத்ரேயி!''

''என்னதும்மா?''

''அந்தப் பையன் கோகுல் வந்து உங்கிட்ட மன்னிப்பு கேட்டது, அடுத்தபடியா உங்கண்ணன் வந்து பரிசு தந்து மனசு வருந்திட்டுப் போனது!''

''அதாம்மா எனக்குக் கவலை!''

''என்ன?''

''செயினைக் கழற்றிக் குடுத்துட்டுப் போயிருக்கு அண்ணன். தெரிஞ்சா அம்மா விடுவாளா அண்ணி?''

''ஏன்? என்ன செய்வா?''

அம்மா கேட்ட நேரம் அங்கே கோபால்.

தேவிபாலா

உமா எதிரே நின்று கொண்டிருந்தாள்.

"அந்த விழாவுக்கு நீங்க போனதே தப்பு. அதுல யாரைக் கேட்டு உங்க கழுத்து செயினைக் கழற்றிப் போட்டீங்க?"

கோபால் பேசவில்லை.

உமா அருகில் வந்து, "நான் கேக்கறது காதுல விழலையா?"

இப்போதும் பதில் இல்லை.

உமா ஆத்திரத்தின் உச்சிக்கு வந்து விட்டாள்.

"நான் பைத்தியக்காரியா? என்ன பேசினாலும் பதில் சொல்லமாட்டீங்களா? என்னைக் கேவலப்படுத்தத்தான் அங்கே போனீங்களா? நீங்க ஒரு ஆம்பிளைதானா?"

கேட்டுவிட்டுச் சட்டையைப்



பிடித்து வெறிபிடித்தவள் போல அவள் குலுக்க,

கோபால் பளாரென அறைந்தான்.

அந்த அறையின் வேகத்தில் சுருண்டு, உமா தூரப் போய் விழுந்தாள்.

அவளுக்குப் பலத்த அதிர்ச்சி!

அவளை எதிர்த்துக்கூட இதுவரை பேசாத கோபால், முதன்முறையாக பலமாக அறைந்துவிட்டான்.

உமா தடுமாறி எழ, கோபால் அருகில் வந்தான்.

''யாரைக் கேள்வி கேக்கறே? என் தங்கச்சிக்கு என் செயினைக் கழற்றிக் குடுக்க நான் யாரைக் கேக்கணும்? நான் நடத்த வேண்டிய மஞ்சள் நீராட்டு விழாவை யாரோ நடத்தறாங்க. நான் கூனிக்குறுகிப் போய் நிக்கறேன். தெரியுமா உனக்கு?''

உமா பேசவில்லை.

''என்னைக் குலதெய்வம் கோயிலுக்கு நீ அனுப்பினதே என் அம்மா, தங்கச்சியை வீட்டை விட்டு விரட்டத்தான். பாவி, எத்தனை பெரிய பாவத்தை என் தலைல சுமத்திட்டே?''

உமா பேச முயற்சிக்க,

''பேசாதே! நீ உத்தியோகம் பாக்கலை. நான் சம்பாதிக்கத்தான் இந்தக் குடும்பம் நடக்குது. உன் அனுமதி எனக்கு அவசியம் இல்லை.''

உமா அவமானத்தின் உச்சியில் இருந்தாள். வேகமாக உள்ளே போனாள். மண்ணெண்ணெய் டின்னைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டாள்.

''இனி நான் வாழறதுல அர்த்தமில்லை! என் கதை முடியட்டும். 'புருஷனால கொடுமைப்படுத்தப்பட்டு செத்த உமா'ன்னு ஊர் சொல்லட்டும்!''

'கடகட' என மண்ணெண்ணெயை உடம்பில் ஊற்றிக் கொண்டாள் உமா. அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

கோபால் உள்ளே போனான்.

தீப்பெட்டியை எடுத்து வந்தான்.

''நீ பத்த வச்சுக்கறியா? இல்லை நான் பத்த வைக்கட்டுமா?'' நெருங்கினான்.

''உன் கைல ஈரம் இருக்கும். நெஞ்சுல தான் அது இல்லையே? நானே பத்த வைக்கிறேன். ஒரு ராட்சஸப் பொண்டாட்டிக்கு நல்ல தீர்ப்பை வழங்கின புருஷன்னு உலகம் தெரிஞ்சுக்கட்டும். இனியாவது ஆண்கள் சமூகம் கோழைகளா வாழாம இருக்கட்டும்!''

'சரக்' என தீக்குச்சியைக் கிழித்து விட, உமா அலறிக் கொண்டே உள்ளே ஓடி கதவைச் சாத்திக் கொண்டாள்.

''ஏமாந்த புருஷனை மிரட்டி மிரட்டியே எத்தனை காலம்டி குடும்பம் நடத்துவீங்க?''

தீப்பெட்டியைத் தூக்கி வீசிவிட்டு, வெறுப்புடன் வீட்டை விட்டு வெளியேறினான்.

அவன் வெளியே போகும்போது உமாவின் அக்கா எதிரே வந்தாள்.

''நில்லு!''

அதிர்ந்து போய், ''உமா இல்லையா?''



வெங்காயத்தைப் பச்சையாகச் சாப்பிட்டு வந்தால் முகப்பருக்கள் மறையும். நீரை அதிகம் பருக வேண்டும். முகப் பருக்கள் வந்த இடத்தில் பள்ளம் இருந்தால் அந்த இடத்தில் சர்க்கரை கோதுமை மாவைக் கலந்து தேய்த்து வர நாளடைவில் பள்ளம் மறையும்.

- என். தஞ்சியம்மாள் நடராஜன்,
வாணியம்பாடி.

ஆப்பம் பட்டு போல் மிருதுவாக இருக்க வேண்டுமா? கிரைண்டர் கழுவிய நீரை ஸ்டவ்வில் வைத்து கஞ்சி போல் காய்ச்சி, ஆறியதும் மாவில் கலந்து விடுங்கள்.

— வி. விஜயராணி, திருப்பூர்.



''உமா செத்துட்டா. அவளைக் கொன்னுட்டு நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போறேன். கூட வர்றியா? அவளை நாசமாக்கினவளே நீதான். இப்ப என்ன சொல்ல வந்திருக்கே?''

''என்ன பேசறீங்க?''

''போடி!''

''போடியா? மரியாதை இல்லாமப் பேசறீங்க?''

''உனக்கென்னடி மரியாதை? பொண்ணுங்களை புருஷன் வீட்ல நிம்மதியா வாழ விடாம செய்யறதே உன்னை மாதிரி உறவுங்கதான். இந்தப் பக்கம் நீ வந்தே, காலை உடைப்பேன்.''

அவன் முகத்தில் இருந்த வெறி கண்டு, அந்த அக்கா மிரண்டு வெளியேறினாள்.

இங்கே... இரவு நேரம். உணவு மேஜையில் ஈஸ்வரும், திலகமும் உட்கார்ந்திருந்தார்கள்.

''மைத்ரேயி ப்ளஸ்டூ முடிச்சாச்சு. மாலை நேரக் கல்லூரியில் சேர்த்து விடலாம். பகல் நேரத்துல நம்ம கம்பெனி நிர்வாகத்துல ஒரு பொறுப்பைக் கொடுத்திடலாம்!''

''இந்தச் சின்ன வயசுல முடியுமா?''

''நல்ல பள்ளிக்கூடத்துல படிச்ச புத்திசாலிப் பொண்ணு. சொல்லிக் கொடுத்தா, கற்பூரம் மாதிரி புடிச்சுப்பா. தன் சொந்தக் கால்ல நிக்கணும்னு விரும்பறா. செய்யட்டுமே!''

''சரிங்க. நாளைக்கே பேசிடுங்க.''

இருவரும் சாப்பிடத் தொடங்க, கோகுல் உள்ளே நுழைந்தான்.

''நானும் சாப்பிட வரலாமா?''

எந்த நேரமும் குடிபோதையில் இருக்கும் கோகுல், இந்த மாதிரியெல்லாம் வந்ததே இல்லை.

இருவரும் பார்க்க, ''நான் குடிக்கலைப்பா. இனிமே குடிக்கவும் மாட்டேன். நான் திருந்தக் காரணம் மைத்ரேயி!''

இருவரும் ஆச்சர்யமாகப் பார்க்க, அம்மா அருகில் வந்து உட்கார்ந்தான்.

''ஏழைக் குடும்பத்துல பிறந்த மைத்ரேயி, அண்ணியால விரட்டப்பட்டும், தன்னம்பிக்கையை விடலை. காரணம் அவகிட்ட உள்ள நேர்மை! நான் வெக்கப்படறேன், என்னை நெனைச்சு. ரெண்டு பேரும் என்னை மன்னிச்சிடுங்க. அப்பா, நாளை முதல் கம்பெனிக்கு நான் வர்றேன். நிர்வாகத்துல என்னையும் ஒரு ஊழியனாச் சேர்த்துக்கிட்டு எனக்கு எல்லாம் கத்துக் குடுங்க!''

ஈஸ்வரால் நம்ப முடியவில்லை.

எழுந்து வந்தார்.

''இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்டா கோகுல். மைத்ரேயியைப் பார்த்தா நீ திருந்தினே? அந்தப் பெண்ணால இன்னும் என்னல்லாம் நல்லது நடக்கப் போகுதோ?''

அவர் கண்கள் கலங்கிவிட்டன. திலகம் பெருமிதத்துடன் மகனைப் பார்த்தாள்.

''கோகுல்! உங்கிட்டே இப்படி ஒரு மாற்றமா?''

''அம்மா! இந்த மாற்றத்துக்குப் பரிசா எனக்கு நீ என்ன தருவே?''

''நீ என்ன கேட்டாலும் தர்றேன்டா ராஜா!''

''எனக்கு மைத்ரேயி வேணும்!''

(தொடரும்)

முதல் பரிசு டேபிள் டாப் வெட்கிரைண்டர் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
ஜி.வி.சாந்தி, பவானி.

தலைப்பு : ஸ்பெஷல் காரம்

சாபுதானா

தேவையான பொருள்கள் :
ஜவ்வரிசி - ½ கிலோ,
அவல் - 100 கிராம்,
தட்டைப் பயிறு - 100 கிராம்,
பாசிப் பருப்பு - 100 கிராம்,
நிலக்கடலை - 100 கிராம்,
முந்திரி - 100 கிராம்,
கிஸ்மிஸ் - 50 கிராம்,
ஓமப்பொடி - 2 தம்ளர்,
ஃபுட்கலர் - மஞ்சள், பச்சை,



இம்மாத இல்லத்தரசி

சிவப்பு,
ஆம்சூர் பொடி - 4 ஸ்பூன்,
மிளகாய்ப் பொடி - ½ கரண்டி,
கறிவேப்பிலை - ஒரு கொத்து,
ரீபைண்ட் ஆயில் - 1 லிட்டர்,
உப்பு - தேவையான அளவு,
நெய் - 2 ஸ்பூன்.

செய்முறை:

ஜவ்வரிசியை நான்கு பாகமாகப் பிரித்து வைக்கவும். ஃபுட் கலரை தனித்தனியாகத் தண்ணீரில் கரைத்து, ஜவ்வரிசியை ஊற விடவும். 1 பாகத்தை வெறும் தண்ணீரில் ஊற விடவும். சிறிது நேரத்திலேயே நிறம் இறங்கிவிடும். நன்றாக வடிகட்டி காய விடவும்.

தட்டைப் பயிறு, பாசிப் பருப்பைத் தண்ணீரில் ஊறவைத்து, வடிகட்டி காயவிடவும். எல்லாம் நன்றாகக் காய வேண்டும்.

அரிசி மாவு 1 பங்கு, கடலை மாவு 3 பங்கு என்ற கணக்கில் எடுத்து ஓமப்பொடி பிழிந்து பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

அவலைப் பொரிக்கவும். அவலை பூந்திக் கரண்டி அல்லது குழிவான புளி வடிகட்டியில் போட்டு காய்ந்த எண்ணெ

யில் கரண்டியை வைத்தால் அவல் பொரிந்துவிடும். பரவாது. எடுக்க எளிது.

நன்றாகக் காய்ந்த ஜவ்வரிசியை எண்ணெயில் பொரித்து எடுக்கவும். தட்டைப் பயிறு, பாசிப் பருப்பை எண்ணெயில் பொரித்து எடுக்கவும். முந்திரி, கிஸ்மிஸ்ஸை நெய்யில் பொரிக்கவும்.

செய்தித்தாளை விரித்து பொரித்த ஜவ்வரிசி, அவல், ஓமப்பொடி, பருப்பு அனைத்தையும் கொட்டி நிலக்கடலை சேர்க்கவும். சிறிது சூடான எண்ணெயில் உப்பு, மிளகாய்த் தூள், கறிவேப்பிலை போட்டுப் பொரித்து, கொட்டிக் கலக்கவும். அதிகமாக உள்ள எண்ணெயை பேப்பர் ஈர்த்துக் கொண்டு விடும். பிறகு, ஆம்சூர் பொடி, வறுத்த முந்திரி, கிஸ்மிஸ் சேர்த்து நன்கு கலக்கி டப்பாவில் போட்டு மூடவும்.

இரண்டாம் பரிசு ரூ.300/-

வெள்ளை பூசணிக்காய் முறுக்கு

தேவையான பொருள்கள்:

வெள்ளை பூசணிக்காய் - ½ கிலோ,
அரிசி மாவு - 1 கப், க.மாவு - 1 கப்,
எள் - 2 ஸ்பூன்,
எண்ணெய் - 2 தேக்கரண்டி,
உப்பு - தேவையான அளவு,
தேங்காய்ப் பால் - 1 கப்,
மிளகு (அ) மிளகாய்ப் பொடி தேவையான அளவு,
எண்ணெய் - பொரிக்க.

செய்முறை:

பூசணிக்காயைத் துருவி, அதனுடன் க.மாவு, அரிசி மாவு, எள், வெண்ணெய், உப்பு, மிளகாய்ப் பொடி, தேங்காய்ப்பால் கலக்கவும். (தண்ணீர் விட வேண்டாம்) நன்றாகப் பிசைந்தவுடன் முறுக்கு பிழியும் அச்சில் போட்டு, கடாயில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் பரவலாகப் பிழிந்து பொரித்து எடுக்கவும். 'வெள்ளை வெளேர்' என்று சுவையாக இருக்கும். உடம்புக்கும் நல்லது.

- கே.வத்சலா, புனே.

மூன்றாம் பரிசு ரூ.200/-

முந்திரிப் பருப்பு முள்முறுக்கு

தேவையான பொருள்கள் :

முந்திரிப் பருப்பு மாவாக அரைத்தது - 2 கப்,
அரிசி மாவு - 1 கப்,
வெண்ணெய் - 50 கிராம்,
தேங்காய்ப் பால் - ¼ கப்,
வெள்ளை எள் அல்லது சீரகம் பொடித்தது - 2 ஸ்பூன்,
உப்பு - தேவைக்கேற்ப
பெருங்காயத்தூள் - ½ ஸ்பூன்

காரம்: இதற்கு பச்சை மிளகாய் அரைத்து, நீரை வடிகட்டி 3 ஸ்பூன் அல்லது வெள்ளை மிளகுப் பொடி 3 ஸ்பூன் அல்லது மிளகாய் பொடி 2 ஸ்பூன் என்று விருப்பத்துக்கேற்ப சேர்த்துக் கொள்ளவும்,

எண்ணெய் - ரீஃபைண்டு ஆயில்.

செய்முறை : முதலில் முந்திரிப்



இட்லிப் பானையில் நீரில் ஒரு தகடைப் போட்டு விட்டால் நீரளவு குறையும் போது கட கடத்து அது எச்சரித்து விடும்.

- பிரேமா சாந்தாராம், சென்னை - 110.

பருப்பை மிக்ஸியிலிட்டு மாவாக அரைத்துக் கொள்ளவும். அந்த மாவுடன் உப்பு சேர்த்து சல்லடையிட்டு நன்கு சலித்துக் கொள்ளவும். வாயகன்ற பாத்திரத்தில் மாவைப் போட்டு அத்துடன் எள் அல்லது சீரகத்தூள், பெருங்காயத் தூள், தேவையான காரம் சேர்த்து நன்றாகக் கலக்கவும். வெண்ணெயை வாணலியில் போட்டு, கரையும் வரை காய்ச்சவும். அதை மாவில் சுற்றி ஊற்றி, அத்துடன் தேங்காய்ப் பால் சேர்த்து மிருதுவாகப் பிசையவும். தேவையான நீர் சேர்க்கவும்.

அடுப்பில் வாணலி வைத்து எண்ணெய் காய்ந்தவுடன் முறுக்கு அச்சில் முள்ளு முறுக்குத் தட்டு போட்டு, மாவைப் பிழியவும். மிதமான தீயில் பொரித்தெடுக்கவும். ருசிகரமான முந்திரி முறுக்கு ரெடி.

- ஏ.ஊர்மிளா பிரசாத்,நெல்லூர் - 4.

ஆறுதல் பரிசு ரூ.100/-

க்ரீன்பீஸ் ட்விஸ்ட் [பச்சைப் பட்டாணி முறுக்கு]

தேவையான பொருள்கள்:

முளைவிட்ட பச்சைப் பட்டாணி - 1 கப்,
அரிசி மாவு - 2 கப்,
பச்சை மிளகாய் - 6,
உளுந்து மாவு, எள் - தலா 1 டேபிள் ஸ்பூன்,
பெருங்காயப் பொடி - சிறிதளவு,
உப்பு - தேவைக்கேற்ப,
எண்ணெய் - தேவையான அளவு.

செய்முறை: பச்சைப் பட்டாணியை சிறிதளவு நீரில் அரைமணி நேரம் ஊற வைத்து சிறிது நீர் தெளித்து பச்சை மிளகாய் சேர்த்து நைசாக, கெட்டியாக அரைக்கவும்.

எண்ணெய் தவிர மற்ற அனைத்துப் பொருட்களுடன் பட்டாணி மாவுக் கலவையைக் கலந்து நன்கு பிசையவும்.

எண்ணெய் தடவிய வாழையிலையில் முறுக்குகளைப் பிழிந்து வேண்டிய எண்ணிக்கையில் பொரித்தெடுக்கவும்.

- எஸ்.வசந்தகுமாரி, கோவை.

ஆறுதல் பரிசு ரூ.100/-

அவல் முறுக்கு


தேவையான பொருள்கள்:

அவல் - 2 கப்,
உளுந்து மாவு - அரை கப்,
அரிசி மாவு - 1 டீஸ்பூன்.
பொட்டுக் கடலை மாவு, கடலை மாவு - தலா 1 டேபிள் ஸ்பூன்,
பெருங்காயம் - அரை டீஸ்பூன்,
வெண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்,
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

செய்முறை: அவலை சுத்தம் செய்து மிக்ஸியில் நைஸாக அரைக்கவும். அதனுடன் எண்ணெயைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்து தேவையான நீர் தெளித்துப் பிசையுங்கள்.

பிசைந்த மாவு மென்மையாக இருக்க வேண்டும். தேன்குழல் அச்சில் இந்த மாவைப் போட்டு, காய்ந்த எண்ணெயில் பொரித்தெடுங்கள். அவல் முறுக்கு கொறிக்க, ருசிக்க ரெடி!

- திலகவதி அறிஞன், நாமக்கல் - 1.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- காலை சிற்றுண்டி (200 பேருக்கு) — ரூ. 1,000/-
- மதிய உணவு — ரூ. 2,000/-
- இரவு சிற்றுண்டி — ரூ. 1,000/-
- இனிப்பு மற்றும் பால் வழங்குதல் — ரூ. 1,000/-
- ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை — ரூ. 1,000/-
- ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி) — ரூ. 12,000/-
- குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு — ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

வயசுக் கோளாறு!?

"விளையாட்டு விளையாட்டு, எப்பப் பாரு அதுதான் முக்கியம். சாப்பிட அவன் செய்யும் அடம் தாங்க முடியல்லை" தன்னுடைய மூன்று வயதுப் பையனைப் பற்றி சுனிதா, அம்மாவிடம் கூறினாள்.

''சின்னக் குழந்தைதானே! எனர்ஜி பொங்கி வழியுது. சில குழந்தைகள் இந்த வயதில் இப்படித்தான் இருக்கும். போகப் போகச் சரியாயிடும். இது வயசுக் கோளாறு தான்'' என்றாள் அம்மா.

* * *

''படிப்பிலே கவனமே இல்லை. வீட்டிலேயும் சதா டீ.வி. பார்க்கிறான். மீதி நேரத்தில் கம்ப்யூட்டர் விளையாட்டு, வெளியிலே கிரிக்கெட் விளையாட்டு! ஹோம் வொர்க் சரியா செய்யறதில்லே. அவனை எப்படித் திருத்தறதுன்னு தெரியல்லே'' என்று மாலதி தன் கணவனிடம் தங்களுடைய பன்னிரண்டு வயதுப் பையனைப் பற்றிப் புலம்பினாள்.

''இது ஒரு வயசுக் கோளாறுதான். ஓடியாடி விளையாடும் வயசு. மனசும் அலைபாயும். நாமதான் பொறுமையா டீல் பண்ணணும். அவனுடைய எனர்ஜியை சரியான முறையிலே கொண்டு போகணும்'' என்றான் மாலதியின் கணவன்.

* * *

''வகுப்பிலே எல்லார்கிட்டேயும் ஸ்கூட்டி இருக்காம். சில பேர் ஐ-பாட் கூட வச்சிருக்காங்களாம். தனக்கும் வேணும்னு தினம் அடம்பிடிக்கறான். அப்பாகிட்டே சொல்லுன்னு என்னை கேக்கறான். அவனை எப்படிச் சமாளிக்கிறதுன்னு தெரியல்லே'' என்று தன்னுடைய பதினேழு வயதுப் பையனைப் பற்றி அலுத்துக்கொண்டாள் பவானி.

பவானியின் சிநேகிதி லதாவோ, ''இது ஒரு டீன்-ஏஜ் பிரச்னை. தான் ஒரு வளர்ந்த மனிதனாக மதிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிற வயசு. இன்னும் மூன்று, நான்கு வருஷம் போனா சரியாய்ப் போயிடும். நாமதான் கோபப்படாம எடுத்துச் சொல்லி புரியவைக்கணும். நண்பன்கிட்டே பேசற மாதிரிப் பேசணும்'' என்றாள்.

* * *

''இப்போ கல்யாணம் பற்றிப் பேசவே கூடாதாம். ஆர்கிடெக்சர்ல பெரிய டிகிரி வாங்கி, வேலையில் ஏதாவது புதுசா சாதிச்சுட்டுத்தான் யோசிப்பாளாம். அவளுக்கு இன்னும் பல லட்சியங்கள் இருக்காம். மேலும் அவ வாழ்க்கையை அவளே நிர்ணயம் பண்ணுவாளாம். தீர்மானமாச் சொல்லிட்டா, நீங்களே அவகிட்ட பேசுங்கோ'' என்று ஆற்றாமையாகப் பேசினாள் ஜானகி.

''இது வயசு படுத்தற பாடு. புரட்சிகரமா ஏதாவது செய்யணும்னு துடிப்பா இருக்கற வயசு. நாமும் அந்த வயசைக் கடந்து தானே வந்திருக்கோம்? அதனால நாமதான் விட்டுக்கொடுத்து நடந்துக்கணும். போகப் போகச் சரியாயிடும்'' என்றார் ராஜு.

* * *

'' 'என்னை எதுக்கும் எதிர்பார்க்காதே. நீயாவே சமாளி. ஆஃபீஸ் பிரஷர் அதிகமா இருக்கு'ன்னு சொல்லிட்டு ஓடிடறார். ஏதாவது கேட்டா, 'நான் உங்களுக்காகத் தானே உழைச்சுச் சம்பாதிக்கறேன்'னு எரிஞ்சு விழறார். எனக்கு வெறுத்துப் போச்சு'' என்று கண்ணீர் விட்டபடி கணவனைப் பற்றி குற்றம்சாட்டினாள் நாற்பது வயது விமலா.

அவள் அம்மா, ''வீணா கவலைப் படாதே. மாப்பிள்ளைக்கும் ஏக டென்ஷன். நாற்பது வயசானாலே நாய் குணம்னு சொல்லுவா. இது பயம் வரும் வயசு. அதனால் எல்லாத்திலேருந்தும் தப்பிக்கணும்னு நினைக்கிறாரு! நாமதான்

பொறுமையா அனுசரிச்சு நடந்துக் கணும்'' என்று ஆறுதலாக கூறினாள்.

* * *


''உங்க அப்பாவுக்கு எவ்வளவு பிடிவாதம் தெரியுமோ? தன்னோட வயசை மறந்து தண்ணிக் குடத்தைத் தூக்கி வச்சுட்டு இப்போ இடுப்பைப் பிடிச்சுக்கிட்டு படுத்திருக்காரு. சொன்னாலும் கேக்கறது இல்லை. தானாவும் தெரியல்லே. வெளியிலே எதையாவது சாப்பிட்டுடறார்'' என்று கணவன் ராமனாதன் பற்றி மகளிடம் சொன்ன கையோடு ஸரோஜா, மாமனார் மாமியாரைப் பற்றியும் குறைப்பட்டாள்.

''என்னை யாரும் மதிக்கறது இல்லை. நாங்கள்லாம் இப்படியா இருந்தோம்''னு எப்போப் பார்த்தாலும் நிஷ்டூரம். இரண்டு பேரும் பொறுமையைச் சோதிக்கிறாங்க!'' என்று கணவனிடம் பொரிந்தாள்.

''இதெல்லாம் சொல்லிப் பிரயோஜனமில்லை. இது வயசான கோளாறு. ரெண்டு பேருக்கும் பொழுதுபோகலை. தன்னை ஒதுக்கி வச்சுடுவாளோன்னு பயம். தனக்கு ஒண்ணும் செய்ய முடியாமப் போயிடுமோன்னு பயம். அதனாலேதான் அப்படி நடந்துக்கறாங்க. நாமதான் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்'' என்று ராமநாதன் சமாதானமாகக் கூறினார்.

எல்லா வயசுமே கோளாறாகத்தான் இருக்கிறது. கோளாறு இல்லாத நேரம் இருக்கிறதா? அனுசரிக்கணும் என்றால் யார் அனுசரிக்க வேண்டும், அது ஒருவரே ஒருவர்தானா, என்றெல்லாம் கேள்விகள் கேட்கக்கூடாது. கேட்டால் தலை சுற்றும். (ஒருவேளை இதுவும் வயசுக் கோளாறுதானோ!)

- லக்ஷ்மிசுப்ரமணியன், சென்னை - 40.



ஆலய அதிசயங்கள்

தஞ்சாவூர் அருகிலுள்ள மருத்துவக்குடியில் உள்ள ஐராவதேஸ்வரர் சுவாமி கோயிலில் விசித்திரமான விருச்சிக விநாயகர் காட்சி தருகிறார். விக்கிரகத்தின் உடல் முழுவதும் விருச்சிகங்கள் (தேள்) வடிவமைக்கப்பட்டுள்ளது.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி-13.

மேல்மலையனூர் ஸ்ரீ அங்காளம்மன் கோயில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையானது. தன்னைப் பிடித்த பிரம்மஹத்தி தோஷம் போக அமாவாசையன்று சிவபெருமானே வழிபட்ட கோயில் இது! மூன்று அமாவாசைகள் இங்கு வழிபட்டால் சகல தோஷங்களும் நீங்கும்.

- எம். கிதாராணி,
திருவல்லிக்கேணி.

கும்பகோணம் திருநாகேஸ்வரத்துக்கு அருகில் உள்ள கோனேரி ராஜபுரம் பூமீஸ்வரர் ஆலயத்தில் மிகப் பெரிய நடராஜர் சிலை உள்ளது. இச்சிலையின் மார்பில் மனிதர்களின் உடலில் இருப்பது போல மரு ஒன்று உள்ளது. அந்த மருவில் ஓர் உரோமமும் உள்ளது.

- ஜெயலெட்சுமி கோபாலன்,
சிட்லபாக்கம்.

கேரளாவில் உள்ள குருவாயூரப்பன் கோவிலில் உதயாஸ்தமன பூஜை பிரசித்தம். முந்தைய தின இரவில் தொடங்கி மூன்றாம் நாள் காலை வரை மொத்தம் 21 பூஜைகளை உள்ளடக்கியது. கேரளத்து அரசர்களின் பிறந்த நாட்களின்போதும் விசேஷ தினங்களிலும் மட்டுமே நடத்தப்பட்ட இந்தப் பூஜை, இப்போது வருடத்தில் 120 நாட்கள் நடைபெறுகின்றன. அதுவும் நினைத்த உடனே செய்ய முடியாது. 40 வருடம் முன்பே பதிவுசெய்ய வேண்டும். இப்பொழுது பதிவுசெய்தால் 2048ஆம் வருடத்தில்தான் பூஜை செய்ய முடியும். இந்தப் பூஜைக்கு அவ்வளவு டிமாண்ட். பதிவுக் கட்டணம் அதிகமில்லை, 50,000 ரூபாய் மட்டுமே!


- பத்மினி கிருஷ்ணன்,
ஜாம்ஷெட்பூர்.

நாகப்பட்டினம், நாகூர், காரைக்கால், திருமருகல் அருகில் 1 கி.மீ. தூரத்தில் சீயாத்த மங்கையில் தனி மண்டபத்தில் ஐந்தடி உய காலபைரவர் ஆட்சி புரிகிறார். இங்கு பிரதி மாதம் அஷ்டமி விழா, மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

- சிவ. எஸ். அமிர்தலிங்கம்,
சீயாத்தமங்கை

ரூ.50/- பரிசு பெறும் துணுக்குகள்!

விசா





ஹைதராபாத் சிலுக்கூரில் உள் பெருமாளுக்கு 'விசா பெருமாள்' என்றே பெயருண்டு.

வெளிநாட்டில் வேலை தேடிச் செல்ப வரும், படிக்கச் செல்லும் மாணவர்களும் தங்களுக்கு விசா கிடைப்பதற்காக முதலில்

11 முறை சுற்றி வேண்டிக்கொள்கின்றனர். விசா கிடைத்தவுடன் 108 முறை சுற்றி தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றுகின்றனர்.

மிகச் சிறிய கோயிலில் கல்யாணக் கோலத்தில் அருள்பாலிக்கிறார் பெருமாள். சனி, ஞாயிறு நாட்களில் குறைந்தது ஆயிரம் பேராவது வருகின்றனர். 108 சுற்றுகள் சுற்ற குறைந்தது 4 மணி நேரமாவது ஆகும். அவ்வளவு கூட்டம். இங்கு வரும் மக்களின் எண்ணிக்கையே பெருமாளின் சக்திக்கு எடுத்துக்காட்டு!

- விஜயா ரமேஷ், ஹைதராபாத்.

தேர்வு முடிந்ததும் பள்ளிகளுக்கு விடுமுறை விடுகிற மாதிரி, ஆண்டுதோறும் விழா முடிந்ததும் இந்தக் கோயிலுக்கு விடுமுறை விடப்படுகிறது.

வடபழநி, என்.ஜி.ஓ. காலனியில் உள்ள ஸ்ரீகாளிகாம்பாள் கோயிலில் ஆவணித் திருவிழாவில் பக்தர்களின் காணிக்கையாக ஆடுகள், கோழிகள் நிறைய அளவில் நடுநிசியில் பலியிடப்படுகின்றன. இதை ஏற்றுக் கொள்ளும் அம்மனின் உக்கிரம் தணிய, எட்டு நாட்களுக்குக் கோயிலின் எல்லாக் கதவுகளும் அடைக்கப்படுகின்றன.

இதே கோயிலின் வளாகத்தில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஒற்றைப் பனை மரம் பசுமையான ஓலைகளுடன் செழுமையாக வளர்கிறது. இம்மரத்தையே சக்தி வாய்ந்த மேற்கு வாசல் தர்மமுனீஸ்வரராக பக்தர்கள் வழிபடுகின்றனர்.

- ஆர்.கே. சுந்தரம், வடபழநி.

பெருமாள்!

காஞ்சிபுரத்தை அடுத்த சிங்கப் பெருமாள் கோயிலில் நரசிம்மர், அஹோபிலவல்லி தாயார், ஆண்டாள் சந்நதி, லக்ஷ்மிநரசிம்மர் சன்னதி, திருவடி ஆஞ்சநேயர் கோயில் சந்நதிகள் உள்ளன.

இங்கு வருடம் முழுவதும் பல விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறும். வைகாசி மாதத்தில் பத்து நாட்கள் பிரம்மோத்சவம் நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தீர்த்தவாரி வரை நடைபெறும். நரசிம்மருக்கு, பிரதோஷம் விசேஷமானது. சென்னையிலிருந்து தாம்பரம் வழியாக வந்து கூடுவாஞ்சேரி, காட்டாங்குளத்தூர், மறைமலைநகர் வழியாக சிங்கப்பெருமாள் கோயிலுக்குச் செல்லலாம்.

சிங்கப்பெருமாள் கோயிலின் விசேஷம் என்னவென்றால், யானை, அந்தக் கோயிலுக்கும், ஊருக்கும் வந்தால் இரவு தங்கக் கூடாது; கல்லாகிவிடும் என்று ஐதிகம். இதுவரை யாரும் யானையை அழைத்து வந்து இரவு தங்கியது கிடையாது. இது இந்தக் கோயிலின் சிறப்பு அம்சம். நரசிம்மர், இரண்யனை வதம் செய்து கை அலம்பிய குளமான சுத்த புஷ்கரணியும் இங்கு உண்டு.

தாயார் - படிதாண்டா பத்தினி - மலைப்பிரதட்சணம் மட்டுமே உண்டு தாயாருக்கு. நவராத்திரி உற்சவம், ஆடிப்பூரம், மார்கழி மாத உற்சவம் சிறப்பு அம்சம். மலையின் காற்று பட்டால் சகல நோய்களும் குணமாகும். கிரிவலம் மிகவும் விசேஷம்.

- எஸ். பானுசேஷாத்ரி, நங்கநல்லூர்.



வாழைக்காய் கோளா உருண்டை!



தெரிந்தவர்கள் வீட்டில் சாப்பிடும் போது ஒரு கோளா உருண்டை கொடுத்து, 'என்னன்னு சொல்லு?' என்றார்கள். எனக்குத் தெரியவில்லை. வித்தியாசமான சுவையுடன் மிக ஸாஃப்டாக இருந்தது. வாழைக்காய் என்றார்கள். செய்முறை கேட்டேன் மிகவும் சிம்பிள்!

நன்கு முற்றிய 2 வாழைக்காய்களை எடுத்துக்கொண்டு அடி, நுனி நறுக்கி, பச்சைத் தோலை நீக்கி விட்டு, நீளவாக்கில் நான்காக நறுக்கிக் கொதிக்கும் தண்ணீரில் போடவும். நகம் இறங்கும் பதத்தில் (கவனம், உடனே வெந்துவிடும்) எடுத்து வடியவிட்டு உதிர்க்கவும். மிக்ஸியில் 2 சுற்று சுற்றிக் கொள்ளவும். (கவனம், அதிகம் சுற்றினால் மொத்தையாகிவிடும்).

சோம்பு, உப்பு, 5-6 சிவப்பு மிளகாய், 1 ஸ்பூன் தேங்காய்த் துருவல், 1 ஸ்பூன் பொட்டுக்கடலை 4-5 பூண்டு எல்லாவற்றையும் அரைத்து (மிக நைஸாகி விடாமல், நீர் அதிகம் விடாமல்) எடுத்து வாழைக்காய்த் துருவலோடு சேர்த்துக் கலந்து, சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

எண்ணெய் காய்ந்ததும் அடுப்பை மிதமாக்கி நான்கு நான்கு உருண்டைகளாகப் போட்டு பொன்னிறமாக எடுக்கவும்.

மாவு பிசையும் போது 2 ஸ்பூன் எண்ணெய் சேர்த்துக் கொள்ளவும். அப்போது தான் எண்ணெய் குடிக்காமல் பதமாக வரும்.

- கே.எஸ்.லக்ஷ்மி, காரைக்குடி - 1.

அஹா 50!



ப்ளோரசன்ட் பெயிண்டை வாங்கி வீட்டிலுள்ள எலக்ட்ரிக் சுவிட்சுகளில் அழகாக வட்டமாகவோ, சதுரமாகவோ தடவி வைத்தால் வெளியே சென்று விட்டு வந்து இருட்டில் தடவிக் கொண்டிருக்காமல் 'டக்' என்று ஸ்விட்ச் போடலாம்.

- டி. ஆறுமுகம், ஈரோடு.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

திருமண மலர்

டிசம்பர் 2007



சென்னை - வேளச்சேரி - விஜயநகர் பேருந்து நிலையத்திலிருந்து மேடவாக்கம் வழியாக கிழக்குத் தாம்பரம் செல்லும் புறவழிச்சாலையில் மேடவாக்கத்திற்கு முன் உள்ளது பள்ளிக்கரணை பஸ் நிறுத்தம். அங்கிருந்து 10 நிமிட நடைப்பயணத்தில், பள்ளிக்கரணை ஊருக்குள் உள்ள ஆதி பராசக்தி ஆலயத்தை அடையலாம். 'ஓம் சக்தி கோயில்' என்று கேட்டால் உள்ளூர் மக்கள் வழிகாட்டுகிறார்கள். 1984ல்



* அருள்மிகு மந்திரப்பாவை அம்மன்

அம்பாள் பூஜகரான அடிகளார் ஒருவரால் சித்தர்களின் அருள்வாக்குக்கு இணங்க, அமைக்கப்பட்டது.

சுமார் ஐந்து கிரவுண்ட் பரப்பளவில், மூன்று சன்னதிகளும், மகாமண்டபங்களும், அன்னதானக் கூடமும், தியான மண்டபமும் கொண்ட ஆலயத்தின் நுழைவுவாயில் ஆடம்பரம் ஏதுமின்றி, சாதாரணமாகக் காட்சி அளிக்கிறது. அன்று பவுர்ணமி தினமானதாலோ என்னவோ, பக்தர்களின் கூட்டம் அதிகமாகவே இருந்தது. அதில் பெரும்பாலானோர் பெண்கள். செவ்வாடை அணிந்த பக்தர்களே அதிகம் காணப்பட்டனர்.

உள்ளே நுழைந்தவுடன், வீற்றிருக்கும் வினைதீர்த்த விநாயகரை வணங்கி, அவர் அனுமதியுடன் அன்னை பராசக்தியைத் தரிசிக்கச் செல்கிறோம். இங்கே பக்தர்கள் செவ்வாடை அணிந்து, சாதி, சமய பாகுபாடின்றி கலந்து கட்டிக் கொண்டு, தொண்டு செய்வது குறிப்பிடத்தக்கது.



ஆசி தரும்

பக்தர்கள் பரவசத்துடன் கையெடுத்துக் கும்பிடும் பராசக்தி சன்னதியின் முன் உள்ள முகப்பு மண்டபம், வண்ணம் தீட்டப்பட்ட சிற்பங்களாலும், வர்ணமயமான சித்திரங்களாலும், வண்ணக் களையுடன் திகழ்வது கண்ணுக்கு விருந்து. மண்டபத்தின் மேற்கூரையில் வரையப்பட்ட நவக்கிரஹங்கள்

சம்பந்தப்பட்ட கோலங்கள் மற்றும் பீஜாக்ஷர மந்திரங்கள் கருத்துக்கு விருந்து.

மண்டபத்தின் மேல் பக்கப் பகுதிகளில், நவக்ரஹ உருவங்கள், அந்தந்த கிரஹங்களுக்கு உண்டான வாகனங்களுடன் சிலை வடிவில் நிறுவப்பட்டுள்ளன. அவற்றின் கீழ் அந்தந்த கிரஹங்களுக்கு உண்டான ஊர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சிலைகளெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. நான்காவது புறத்தில் சப்தகன்னியர்களும், பக்தர்களுக்கு



● விளைதீர்த்த விநாயகர்

ஓம்சக்தி!

ஆசி வழங்குகிறார்கள். இந்த மண்டபத்தின் கீழிருந்தே அன்னை ஆதிபராசக்தியைத் தரிசிக்க முடிகிறது.

ஓம்கார ரூபிணியான பராசக்தி, புன்முறுவல் ததும்பும் முகத்துடனும், எட்டு கரங்களுடனும், அமர்ந்த கோலத்தில் தரிசனம் தருகிறார்.

ஆசி தரும் கரம் ஒன்று. அபயம் தரும் கரம் ஒன்று. உடுக்கை, மழு, மலர், கிளி, தீச்சுடர் ஆகியவற்றை மற்ற கரங்களில் ஏந்தி, ஒரு கரத்தால் தியானக் குறியைக் காட்டுகின்றாள்.

எல்லா சக்தியையும், தன்னுள் கொண்டுள்ள பராசக்தி, தன்னை நாடி வரும் பக்தர்களின் மனக்குறையை நீக்குகின்றாள் ஆதி



● அருள்மிகு ஆதிபராசக்தி

பராசக்தியாக. மூலவிக்ரஹத்தின் முன்பு மற்றொரு அம்பாளின் சிலை சிறிய வடிவில் வைக்கப்பட்டுள்ளது. பின்புறம் உள்ள பெரிய திருஉருவச் சிலையில் அம்பாள் எல்லா சக்திகளையும் இருத்திக் கொண்டவளாகவும், முன்புறம் உள்ள சிறிய சிலையில், தியான, யோக சக்தியை மட்டும் தன்னுள் இருத்திக்கொண்டவளாகவும், காட்சி தருகிறார்கள். இதிலிருந்தே இக் கோயிலில், தியானத்துக்கும், யோகத்துக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைத்

எப்படிச் செல்வது?

தாம்பரம், சைதை, பிராட்வே, தி.நகரிலிருந்து பேருந்துகள் உள்ளன.
இறங்குமிடம் : பள்ளிக்கரணை, பேருந்து எண்கள் :
A51, 5A, PP51, M 21, M 5, 51, 51H, D51, 51B
கோயில் தொடர்பு எண்: 044-2246 0820, 2246 2910.

தெரிந்து கொள்ளலாம்.

பராசக்தியின் பெருமையையும், புகழை யும் எடுத்துச் சொல்வது இயலாததாகை யால், பாரதியாரின் பொன் வரிகளில் இரண்டை மட்டும் நினைவுகூறலாம். 'சொல்லுக்கடங்காவே பராசக்தி சூரத்தனங்கள் எல்லாம். வல்லமை



பராசக்தியை பணியும் பக்தர் கூட்டம்

தந்திடுவாள் பராசக்தி வாழி யென்றே' துதித்துக் கொண்டு, மந்திரப் பாவை அம்மன் சன்னிதிக்குச் செல் கிறோம்.

மிகவும் விசாலமான முகப்பு மண்ட பத்துடன் கூடிய சிறிய கருவறையில், மந் திரப் பாவை அம்மன் தெற்கு நோக்கி தரிசனம் தருகிறாள். உலக நன்மைக்காக சித்தர்கள் ஒன்றுகூடி அடிக்கடி யோக நிலை கள் மேற்கொள்வதுண்டு. அது சமயம், தங் களைத் தீய சக்திகள் அண்டாமல் பாதுகாத் துக் கொள்ள, மந்திரக் கவசமாக ஒரு பாவையை உண்டாக்கினார்கள்.

அகஸ்தியரின் முதல் சீடரான தேரையர் தலைமையில், அனைத்துச் சித்தர்களும் தங் களுக்கு பாதுகாப்புதரவல்ல, மந்திர அதிர்வு கொண்ட யந்திரம் வடிவமைத்து அதற்குரிய பீஜமந்திரங்களையும் ஒலித்து, தங்களுடைய மனோசக்தியால், ஒரு பேரெழில் வாய்ந்த பாவையை உருவாக் கினார்கள்.


மூட்டுவலியை சமனப்படுத்த உள்ளுக்குள் மருந்துகள் கொடுப்பதோடு, தைலம், யோகா போன்ற உடற்பயிற்சி இவற்றுடன் தொக்கணம் எனப்படும் எண்ணெய் மசாஜும் அளிப்போம் ஒத்தட சிகிச்சையும் உண்டு.

மூட்டுத் தேய்மானத்துக்கு உரிய மருந்துகளை அளித்தால் அங்குள்ள திசுக்களை புதுப்பிக்கப்பட வாய்ப்பு உண்டு. வயதாகும் போது Degenerative Arthritis ஏற்படுவதுண்டு. ஆனால் இப்போதெல்லாம் முப்பது வயதிலேயே மூட்டு தேய்மானத்தோடு வருகிறார்கள்! உடற்பயிற்சியின்மை, அதிக எடை, பரம்பரை ஆகிய பல காரணங்கள் இதற்கு உண்டு. வாதகேசரி தைலம், பிண்ட தைலம், விஷமுஷ்டி தைலம் ஆகியவை இதற்குப் பயன்படும்.

மூட்டுப் பிரச்னையைப் பொருத்தவரை இரு விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். வழக்கமான வைத்திய முறையில் நோயின் அறிகுறி மட்டுமே தீர்க்கப்படுவதால் ஓரளவு உடனடிப் பலன் இருக்கும் தான். ஆனால் சித்த வைத்தியத்தில் நோய்க்கான காரணத்துக்கு சிகிச்சை அளிக்கப்படுவதால் குணமாக சற்று அதிககாலம் பிடிக்கும். ஆனால் அது நிரந்தரப் பலன் கொண்டதாக இருக்கும்" என்கிறார் டாக்டர் கோலப்ப பிள்ளை.

டாக்டர். M. கோலப்ப பிள்ளை, தாம்பரம், சென்னை.
போன்: 044-2239 4384, 2226 4384

naturals
UNISEX SALON & SPA



வீணா

ஹேர் கலரிங்!

இன்றைய இளம்பெண்ணைப் பார்த்து, ''பின்னல் போடத் தெரியுமா உனக்கு?'' என்று கேட்டால், 'பின்னலா?' என்று நம்மையே எதிர்க் கேள்வி கேட்டு மடக்குவார்கள்.

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அம்மாக்களும் ஹாயாக ஒரு போனிடெய்லோ அல்லது முடியை விரித்துவிட்டு சின்னக் கிளிப்போ போட்டுக் கொண்டு 'ஜம்' என்று கிளம்பி விடுகிறார்கள்.

'ஃபேஷனான ஹேர்ஸ்டைல் வேண்டுமா? சிம்பிளாக முடியை விரித்துப் போட்டுக் கொள்றாங்க' என்று சிரித்துக் கொண்டே 'டிப்ஸ்' கொடுக்கிறார் வீணா.

ஆனால் இப்பொழுது ஆண், பெண் இருபாலருக்கும் எதில் போட்டி இருக்கோ இல்லையோ முடி வளர்ப்பதில் மட்டும் தீவிரமான போட்டியாம்!

ஹேர்ஸ்டைல் பண்ண வருபவர்களின் முதல் கண்டிஷன் - முடி குறையக் கூடாது. ஆனால் புதுமையான ஹேர்ஸ்டைல் வேண்டும்.

நீளமான முடி உடையவர்கள், மேலிருந்து கீழ் வரை படிப்படியாக லேயர் கட் அல்லது ரேஸர் கட் செய்து கொண்டால் அழகாக இருக்கும். இவ்வகை முடி உள்ளவர்கள் கண்டிப்பாக ஹேர் ஸ்ட்ரைட்டனிங், ரீபாண்டிங் அல்லது ஸ்ட்ரைட் தெரபி எடுத்துக் கொண்டால், முடி பட்டுப் போல் வழவழப்பாக இருக்கும்.

முகம் பரந்து, நெற்றி பெரிதாக உள்ளவர்கள் முன்பக்க முடிகளில் பக்கவாட்டிலோ நேராகவோ நீளமாகவோ ஃப்ரின்ஜ் கட்ஸ் செய்துகொண்டால் முகம் எடுப்பாகத் தெரியும்.

குட்டை முடியுள்ளவர்கள் நடுவில் அடர்த்தியாகவும் கீழே அலை போல் சுருளாகவும் கட் செய்துகொள்வது ஸ்டைலாக இருக்கும்.

பொதுவாக, ஆண்கள் நீளமாக முடிவளர்த்து, பக்கவாட்டில் அல்லது பின்புறம் சிறு முடிகளை எடுத்து ஆங்காங்கே பின்னல் போட்டுக்கொள்கிறார்கள். குறைந்த முடி உள்ளவர்கள், ஃபங்க் ஸ்டைல் அதிகம் விரும்புகிறார்கள்.

தற்போதைய புதுமையான ஹேர் ஸ்டைல் - தலை உச்சியில் இருபக்கமும் முடியை கைகள் கோத்து இருப்பது போல் இணைத்து, குச்சிக் குச்சியாக நேராக



நிமிர்ந்து இருப்பது போல் செய்வது தான். இதில் முடி நுனியில் விதவிதமாக கலர் கொடுத்து இன்னும் புதுமையாக்கிக் கொள்ளலாம்.

ஹேர் கலரிங் செய்து கொள்வதை அனைத்துத் தரப்பினரும் அதிகம் விரும்பு கின்றனர். இதில் தற்காலிகமான ஹேர் கலரிங், நிரந்தரமான ஹேர் கலரிங் என இரு வகை உள்ளன.

பார்ட்டிகளுக்குச் செல்லும்போது விதவிதமான ஹேர் கலரிங் செய்யலாம். முடி நுனிகளில் மட்டும் பக்கவாட்டில் அல்லது வகிடு ஓரங்களில் உடைக்கு மேட்சாக டெம்ப்ரரி கலர் கொடுக்கலாம். புடைவை என்றால் முடியை நீளமாக ஸ்ட்ரைட்டனிங் செய்து அடியில் சுருள் சுருளாக விட்டுக் கொண்டு, நடுவில், கிளிப் போட்டுக் கொள்ளலாம். சல்வார், சுரிதார் என்றால் போனிடெய்ல் அல்லது லூசாக விட்டுக் கொள்வது அழகாக இருக்கும். ஜீன்ஸ் அல்லது வெஸ்டர்ன் டைப் என்றால் முகத்தில் முன்னால் முடிகளைச் சுருள் சுருளாக வருவது போல் ஸ்டைல் செய்து, பின்பக்கம் போனிடெய்ல் அல்லது ஸ்ட்ரைட் ஹேர் ஸ்டைல் செய்யலாம்.



முடி பார்ப்பதற்கு ஈரமான தோற்றத்தில் இருப்பது அதாவது 'வெட் லுக்'தான் தற்போதைய புதிய ஃபேஷன். ஆண்கள் முடியைச் சீப்பினால் வாராமல் கைகளால் கோதி விட்டு ஹேர்ஸ்டைல் செய்து கொள்ளலாம்.

எந்தவித ஹேர் ஸ்டைலாக இருந்தாலும் அதை நிரந்தரமாகப் பராமரிக்க வேண்டும். பார்லரில் 40லிருந்து 45 நாட்களுக்கு ஒரு முறை ட்ரிம் செய்துகொள்ள வேண்டும்.

பொடுகு பாதிப்புடையவர்கள், குறைந்தது ஒருநாள் விட்டு ஒருநாள் ஷாம்பு போட்டு முடியை அலசவேண்டும். ஷாம்புவோ சீயக்காய்த் தூளோ எதுவாக இருந்தாலும், தலையில் ஒருசில மணித் துளிகள் ஊறவைத்து, பின்பு நன்கு அலச வேண்டும். முடிவெடிப்புக்குத் தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் + சமையல் வினிகர், கிளிசரிங் + ஷாம்பு, தலா ஒரு ஸ்பூன் எடுத்துக் கலந்து, தலைமுடிகளில் உச்சி முதல் நுனி வரை தடவவும். 15 நிமிடம் ஊற விட்டு, மிதமான சுடுநீரில் அலச வேண்டும். வெயிலால், கூந்தலின் பளபளப்பை இழந்து வறண்டு காணப்படுபவர்களுக்கு நல்ல பலன் கொடுக்கும்.

பொதுவாக முடி பராமரிப்பு என்பது நாம் பயன்படுத்தும் சீப்பி லிருந்து ஆரம்பமாகிறது.

நீளமுடி உள்ளவர்கள் : நீள பற்களையுடைய நீண்ட சீப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.

சுருள்முடிக்கு : நடுத்தரமான பற்களையுடைய சீப்புகளின் முடி வில் ரப்பர் வைத்திருக்கும் சீப்புகளைப் பயன்படுத்தி வார வேண்டும்.

- சுநயனா

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

500 ரூபாய் நோட்டு, நிறத்திலும் அளவிலும் 100 ரூபாய் போன்றே இருப்பதால் அடிக்கடி ஏமாற நேர்கிறது. இதைத் தடுக்க 500 ரூபாயை, நிறம் அல்லது அளவை மாற்றி வெளியிட்டால், 'சட்' என அடையாளம் புரியும். ரிசர்வ் வங்கி கவனிக்குமா?

- ஞா. கலையரசி, புதுச்சேரி.

பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருக்கும் பேருந்தை ஒட்டினாற் போல் செல்லக் கூடாது. பேருந்தில் அமர்ந்து கொண்டிருக்கும் பயணிகள் தின்பண்டங்களைச் சாப்பிட்டு விட்டு வெற்றுக் காகிதம் மற்றும் பழத் தோல்களை விசிறி அடிப்பார்கள். வெற்றிலை எச்சில் துப்புவார்கள், ஜாக்கிரதை!

- ஆர். பிரேமா, சென்னை - 33.

மணம் வீசுமே!



கோதுமை, ஓட்ஸை விட பார்லி உடம்பிற்கு இன்னும் நல்லது. அதிலிருக்கும் பேடா க்ளூகான் நார்ச்சத்து இரத்தத்தி லுள்ள க்ளூகோஸ், இன்சுலின் லெவலைக் குறைக்கிறது. இனி மேல் உணவில் பார்லியையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

- பத்மினி கிருஷ்ணன், ஜம்ஷெட்பூர்.

துவையல்கள் அரைக்கும் போது பச்சை மிளகாய், சிவந்த மிளகாய்க்குப் பதிலாக மிளகைப் பயன்படுத்தினால் கொலஸ்ட்ரால் குறையும்.

- என். தஞ்சியம்மாள்,
வாணியம்பாடி.

பேருந்துகளில் நீண்ட நேரம் பயணம் செய்யும்போது, இருக்கையில், பருத்தித் துண்டு போட்டு உட்கார்ந்தால் பயணச் சூடு ஓரளவு தணியும்.

- எஸ்.பி. சுசீலாதேவி, பல்லாவரம்.

அடை மாவில் இட்லிகள் செய்து இடியாப்ப அச்சில் போட்டு சேவை களாகப் பிழிந்து தேங்காய்த் துருவல், கொத்துமல்லி தூவி சாப்பிட காரசேவை சுவையாக இருக்கும்.

- பத்மஜா ராமகோபால், பெங்களூர்.

சுபகாரியங்களுக்கும், வீட்டு விசேஷங்களுக்கும் அடிக்கும் பத்திரி கைகளில் சிறிது சென்ட்டைத் தடவிக் கொடுங்கள். பிரமாதமாய் மணம் வீசும்.

- வி. விஜயராணி, திருப்பூர்.

ஜிலேபி உளுந்து வாங்கி ஊறவைத்து மெதுவடை செய்தால் ஓட்டல் வடை போன்று மொறுமொறுப்பாக இருக்கும்.

- ப்ரவீணா அருண்,
பென்னாகரம்.

சிரிகதை

சட்டென்று நயன்தாராவாக இளைத்து விட்ட தன் பர்ஸைப் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த ஆனந்த ரவி, காப்பியைக் கொண்டுவந்த சர்மிளியை விமர்சனக் கண்களுடன் எடைபோட்டான்.

தங்கமுலாம் பூசின மாதிரி நிறம். உயரமும் இல்லை குள்ளமும் இல்லை. அருள்மிகு மூக்காம்பிகை என்று பெயர் சூட்டத் தகுதியான மூக்கு. இருபத்து நாலு மணி நேரமும் இயங்கும் பண்பலை நிலையத்துத் தொகுப்பாளினியின் பிசிறு இல்லாத வெண்கலக் குரல். மடமடப் பேச்சு. சிக்கென்று உடுத்திய புடைவை. வாழைத்தண்டு கால்களில் வெள்ளிக் கொலுசு. சங்கு கழுத்து. அப்புறம்...

'என்டா இதெல்லாம் போறாதா' என்ற குரல் ஆனந்த ரவிக்கு உள்ளிருந்து கேட்டது.

'போறவில்லையே' என்று முறையிடத்தான் மனோதத்துவ டாக்டர் சந்திரபோஸை அணுகி இருந்தான்.

''ஓகே. ரிலாக்ஸ். என்ன பிரச்னை, சொல்லுங்க.''

''பிரச்னை என் பெண்டாட்டிதான். பேரு சர்மிளி.''

சர்மிளிங்கிற பெயரால் என்ன பிரச்னை வரப்போகிறது என்று வியந்த டாக்டர், சிவப்பு சிக்னலைத் தாண்டிய வாகனத்தின் நம்பரை கிறுக்கிக் கொள்ளும் காவல் துறையின் துடிப்புடன் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார்.

❖ ஜே.எஸ்.ராகவன் ❖



''பிரச்னையே அவதான் டாக்டர். அழகா இருக்கா, ஒத்துக்கறேன். நல்லா சமைக்கிறா. ஏப்பத்துடன் ஆமோதிக்கிறேன். ஆ.பா மேல் மாடி காலி. பொது அறிவு கிடையாது. இங்கிதம், நில். அதாவது ஸைபர்.''

'ஹூஹூம்?' என்று சப்தம் எழுப்பி அவனை மேலும் தொடர ஊக்குவித்தார்.

''டாக்டர் ஸார், அவளுக்கு டோனி பிளேருக்கும் போர்ட் பிளேருக்கும் வித்தியாசம் தெரியாது. உத்தப்பா வேற ஊத்தப்பம் வேறன்னு புரியாது. ஹாக்கி வேற கூக்ளி வேறன்னும் தெரியாது. சென்ஸெக்ஸ்ங்கிறது கெட்ட வார்த்தைன்னு அவளுடைய கணிப்பு. கொடுமை டாக்டர்!''

டாக்டர் போஸின் கம்பளிப்பூச்சிப் புருவங்கள் வியப்பில் நர்த்தனமாடின.

''இதெல்லாம் தெரியாமப் போகட்டுமே... அதனாலென்ன?''

''அதனால என்னவா? நான் ஆசைப்படற இடங்களுக்கு அவளோட ஜோடியா போக முடியலியே டாக்டர். புக் கிளப், ஸ்காண்டிநேவியன் ஃபிலிம் பெஸ்டிவல், ஜுகல் பந்தி, காக்டெயில் பார்ட்டின்னு எவ்வளவு இருக்கு.''

''மிஸ்டர் ஆனந்த ரவி, நீங்க சொன்ன இடங்கள் எதுக்காவது கூட்டிட்டுப் போயிருக்கீங்களா?''



அவள் விழி தனி விழி!

''பின்னே? அனுபவிக்காமயா சொல்றேன்? ஒரு புக் ரீடிங் நிகழ்ச்சிக்குப் போனோம். கடமுடா இங்கிலீஷ்லே எழுதி இருந்த ஒரு நியோ ரியாலிஸ நாவலை, அதை எழுதின ஆசிரியர் ஏதோ தெவச மந்திரம் மாதிரி உரக்கப் படிக்கிற சடங்கு. படிப்பு முடிஞ்சு கைத்தட்டல், குலுக்கல் எல்லாம் ஆகி ஆரத்தி முடிஞ்ச சமயத்திலே எங்களை அந்த ஆசிரியருக்கு யாரோ அறிமுகப்படுத்தி வெச்சாங்க. சர்மிளி சும்மா இருந்தாளா? இல்லியே! அந்த நாவலாசிரியரைப் பார்த்து, 'நீங்க மத்தவங்க எழுதின நாவல்களைப் படிக்கிறதுண்டா'ன்னு கேட்டா.''

''அ! இது கேள்வி!''

''வேற யாராவது இருந்தா அவர் பாய்ச்சிய லேசர் பார்வையிலே பஸ்பமாகி காத்தோட கரைஞ்சிருப்பாங்க. ஆனா சர்மிளியா? கொக்கா? 'உங்களைப் பார்த்தாலே சீண்ட மாட்டீங்கன்னு தெரியறது'ன்னு கமெண்ட் அடிச்சுட்டு சைடிலே வெச்சிருந்த சமோஸா, கேரட் அல்வாவைச் சாப்பிடப் போயிட்டா.''

''வெரி இன்ட்ரஸ்டிங். அப்புறம்?''

''ஒரு கல்யாண ரிஸப்ஷனுக்குப் போயிருந்தோம். எல்லாம் பெரிய லெவல். மெகா மாடர்ன். நானும் சர்மிளியும் கிஃப்ட் பார்ஸலோட உள்ளே நுழைஞ்சோம். அப்போ அபிஷேக்பச்சன் மாதிரி உயரமா இருக்கிற ஒருத்தர் மணமகன் கையை அழுத்திக் குலுக்கிட்டு, ஹாலிவுட் நடிகர் கியர், ஷில்பா ஷெட்டியை முத்தமிட்டா மாதிரி கல்யாணப் பெண் குண்டு கன்னத்திலே ஒரு முத்திரையை பரம ஆனந்தத்தோடு பதிச்சுட்டார். கல்யாணப் பிள்ளையும் இதைப் பார்த்துப் பரவசமாகி ஷோலா பூரியாக பூரிக்கப் போனானா...? போச்சு! 'ச்சீ.. வெக்கங்கெட்ட ஜென்மங்கள்னு' சர்மிளி வெடிச்சுட்டா. இங்கே ஒரு நிமிஷம் கூட இருக்க மாட்டேன்னு எழுந்துட்டா. என் வயிறு இரைஞ்சது. 'சர்மிளி! சாப்பாடுன்னு கேட்டேன். புஃபேம்மா, கேடரர் யாரு தெரியுமா? சூப்பரா இருக்கும்'னேன். 'இங்கே பச்சத் தண்ணிகூட குடிக்க மாட்டேன்னு விர்ருனு கிளம்பிட்டா. என்னத்தைச் சொல்ல டாக்டர்? டிரெய்வர் பஸ்லோ பின்னாடியே ஓடினேன்.''

டாக்டர் போஸ், வழக்கமாகச் சிரிப்பதில்லை. ஆனால் இதைக் கேட்டு உடைத்த கோலி சோடாவாகப் பொங்கி வந்த சிரிப்பை நாகரிகத்துடன் உள்ளே தள்ளி விழுங்கிக் கொண்டார். நோட் புக்கை மடியிலிருந்து இறக்கி விட்டு விட்டு இரண்டு கை விரல்களையும் அரேபிய கூடாரமாகக் குவித்து சன்னமான குரலில் தன்னுடைய உரையை ஆரம்பித்தார்.

''மிஸ்டர் ஆனந்த ரவி. உங்களுடைய சங்கடம் புரிகிறது. உங்கள் மனைவி, அதாவது மிஸஸ் சர்மிளிக்கு நல்ல சென்ஸ் ஆஃப் ஹியூமர். ஆனால் நீங்கள் எதிர்பார்க்கிற

ஆஹா 50!



ஹார்ட் அட்டாக்கின் அறிகுறிகள் தெரிந்தால் பின்பற்ற வேண்டிய எளிமையான வழி. மூச்சை நன்றாக இழுத்து விடவும். இரண்டு மூன்று முறை பலமாக இருமவும். இப்படியே மருத்துவ உதவி கிடைக்கும்வரை செய்து கொண்டே இருக்கவும். இம்முறை இதயத் துடிப்பு சீராக மருத்துவக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டதாகும்.

- சித்ரா அனந்தேஸ்வரன்,
மும்பை.

தேநீர் அருந்தும்போது, தவறிப் போய் ஆடையில் தேநீர் கொட்டி கறையாகி விட்டால், உடனே சிறிதளவு தண்ணீர் கலந்த பாலை அந்தக் கறை மீது தேய்த்து விட்டால் கறை மறைந்து விடும்.

– எஸ். சந்திரமுகி, கோபி.



அளவிற்கு அவர்களிடம் நாகரிகம் இல்லை என்று சொல்ல வருகிறீர்கள். அவர்களுடைய ஆழ்மனத்தில் புகுந்து அங்கே மோதிக் கொண்டு இருக்கும் எண்ண அலைகளை இனம் கண்டுகொண்டு அவர்களை உங்கள் வழிக்குக் கொண்டு வர நீங்கள் ஏதேனும் முயற்சிகளை செயல்படுத்தினீர்களா?''

''படுத்தினேன் டாக்டர். மை ஃபேர் லேடி கதை உங்களுக்குத் தெரியும் இல்லே?''

''தெரியாமலா இருக்கும்? பெர்னார்ட்ஷாவோடது ஆச்சே! 'யோவ் இன்னாய்யா?'ன்னு போகற எலைஸாங்கிற லோக்கல் பூக்காரப் பெண்ணை ஒரு நளினமான சொஸைட்டி லேடியாக மாத்திக் காட்டறேங்கிற சவாலை எடுத்திண்டு புரொபஸர் ஹென்றி ஹிக்கின்ஸ் கடைசியிலே ஜெயிக்கிறாருங்கிறதுதான் கதையோட பிரதான முடிச்சு. சுபம்''

''கரெக்ட் டாக்டர். அந்தப் படத்தை டி.வி.டியிலே சர்மிளிக்குப் போட்டுக் காட்டினேன். படத்தின் கூடவே ஓடி, டயலாக்கை தமிழிலே டப் செஞ்சா மாதிரி முக்கியமான இடங்களிலே பேசிக் காட்டி அவளுக்கு அந்த உன்னத சரித்திரத்தின் சாராம்சத்தைப் புரியவைத்தேன். இதெல்லாம் ஏன் செஞ்சேன் தெரியுமா?''

''சிம்பிள். பூக்காரி எலைஸாவாக இருக்கும் மிஸஸ் சர்மிளியை நீங்கள் விரும்பும் ஒரு சொஸைட்டி லேடியாக மாத்தத்தானே?''

''எஸ், டாக்டர்.''

''அப்படி ஆக்கிட்டீங்களா?''

''இல்லியே டாக்டர்.''

''பின்னே?''

''கொளுத்திப் போட்ட வெடி அங்கே போய் வெடிக்கும்னு நினைச்சா என் மேலயே வெடிச்சுடுத்து?''

''எப்படி?''

''படத்தைப் பார்த்துட்டு, 'நான் சவாலை ஏத்துக்கறேன்னா.''

''என்னது? கதை உல்ட்டாவா மாறுது? அவங்க சவாலை ஏத்துக்கறாங்களா?''

''ஆமா டாக்டர். ஹிக்கின்ஸ் எலைஸாவை மாத்தறதுக்குப் பதில், எலைஸா ஹிக்கின்ஸை மாத்த ஆரம்பிச்சுட்டா, மாத்திண்டு இருக்கா?''

''எப்படி?''

''புக் கிளப், ஜுகல் பந்தி, வின்டேஜ் கார் ராலின்னு அலைஞ்சிண்டிருந்த என்னை சமைக்க, துவைக்க, உலர்த்த, கரப்பு அடிக்க, சிலிண்டர் மாத்த, காஸ்கெட் மாத்த, பெட்ஷீட் மாத்த, டயாபர் மாத்தன்னு பயிற்சி குடுக்க ஆரம்பிச்சுட்டா. படிப்படியா நான் ஒரு ஹோம் மேக்கரா மாறிண்டு வரேன். அவ மேற்பார்வை இல்லாம, நாளைக்கு மீனாட்சி மாமி, மெனுராணி செல்லம், மல்லிகா பத்ரிநாத் புத்தகங்களை கோனார் நோட்ஸா வெச்சிண்டு மைசூர்பாக் கிளறணும். நான்... அதுவும் மைசூர்பாக்கா வரக் கூடாதாம். 'க்' இல்லாத சாஃப்டான 'பா'வாக வரணுமாம். கிருஷ்ணா! கிருஷ்ணா! என் விதியைப் பார்த்தீங்களா?

டாக்டர், இந்த ஆனந்த ரவியோட பரந்த ராஜ்ஜியத்திலே பாதியை உங்களுக்கு எழுதி வெச்சுடறேன். ராஜகுமாரி யாரேனும் கிடைச்சா உங்களுக்கு அவளைக் கல்யாணமும் பண்ணி வெச்சுடறேன். இந்த சிச்சுவேஷன்லேந்து என்னை எப்படியாவது காப்பாத்துங்க டாக்டர்.'' ●

மனம் விட்டு...

அழகு நிலையங்களில் பணிபுரியும் சில பெண்கள், தங்கள் தொழில்சார்ந்த பிரச்னைகளை மனம் திறந்து பேசியபோது...

"பார்லர்ல நாங்க கொடுத்திருக்கிற அப்பாயின்ட் மென்ட் ஒரு நேரமா இருக்கும். கஸ்டமர் வந்து நிற்கிறது வேறொரு நேரமா இருக்கும். அப்ப, ரொம்பப் பொறுமையா அட்ஜஸ்ட் பண்ற வித்தை இருக்கே! அதுதாங்க கஷ்டம்!"

"ஆரம்பத்துல கொஞ்சம் தர்மசங்கடமான சர்வீஸ்களை செய்யும்போது, மனசு கூசும்தான்! காசுக்காக, சுயமரியாதையை இழக்கறோமேன்னு அழுகையா வரும்!"

"இரவு நேரங்கள்ல ரொம்ப லேட்டா யிடுச்சுன்னா, குழந்தைகளையும் குடும்பத் தையும் நினைச்சு, மனசு தவிச்சுப் போகும். குற்ற உணர்ச்சி குத்தி எடுக்கும். ஆனா என்ன பண்றது? பொறுத்தாதானே பிழைப்பு ஓடும்?"

"எல்லாத்தையும் தாண்டி, மத்தவங் களை அழகுபடுத்திப் பார்க்கும்போது, அதை அவங்க பாராட்டும்போது, கிடைக்கிற திருப்தியே அலாதிதாங்க!"

சில சமயம், "சே! என்னடா பிழைப்பு இது?"னு நொந்து போவோம். ஆனா மறு நிமிஷமே... 'டான்'னு வந்து நிற்கிற சம்பளக் கவர் கண்ணுல தெரியும்..."

"சில கஸ்டமருங்க, அவங்க ஆஃபீஸ் போறதுக்கு முன்னாடி வந்துட்டுப் போவாங்க... இன்னும் சிலர், அவங்களோட ஆஃபீஸ் வேலை எல்லாம், முடிஞ்ச பிறகு வருவாங்க! ஆனா எங்க சர்வீஸுக்குத்தான் நேரங்காலமே கிடையாது. எப்பவும் சேவை செய்யத் தயாராயிருக்கணும்!"

"ஒருநாள் என்னுடைய குழந் தைக்கு அப்ளிகேஷன் வாங்கு வதற்காக ஒரு பள்ளிக்கூடத்தில் காலையிலிருந்தே கால் கடுக்க வரிசை யில் நின்று கொண்டிருந்தேன். அப்போது என் செல்ஃபோன் ஒலித்தது. "உடனே மாற்றுச் சாவியை எடுத்துக்கிட்டு பார் லருக்கு வாங்க" என்றார் ஒரு சக ஊழியர். "இன்னும் அரை மணியில இங்கே வேலை முடிஞ்சிடும். வந்திட றேன்"ன்னு நான் சொன்னேன். ஆனால், அவரோ, அவசரப்படுத்தினார்.

பதற்றமாகப் புறப்பட்டு பார்லருக்கு வந்து சாவியைக் கொடுத்திட்டு, மறுபடி யும் ஸ்கூலுக்குப் போய் அப்ளிகேஷன் வாங்கி... எங்கத் தொழில்ல கடமையும், பொறுப்புணர்வும் ரொம்பவே தேவை!" என்கிறார் பிரபல அழகு நிலையம் ஒன்றில் பணிபுரியும் ப்ரீதி.

"அழகு நிலையத்தில் வேலை பார்க்கும் அனைவருக்கும் அத்தியாவசிய மான ஒன்று அசாத்திய பொறுமை. வரும் வாடிக்கையாளர்களுக்கு முகம் சுளிக்கா மல் செயற்கையாகவாவது ஒரு புன்ன கையை உதடுகளில் ஒட்டவைத்துக் கொள்ள வேண்டும். தப்பித் தவறி ஏதாவது சிறு தவறு



செய்துவிட்டால், எவ்வளவு தடவை 'சாரி' கேட்டாலும், ஹூம்!''

“பியூட்டிபார்லருக்கு, தீபாவளி தவிர வருஷம் முழுவதும் வேலை நாள்தான். ஷிஃப்ட் முறையில் வாரத்தில் ஒருநாள் லீவு கிடைக்கும். சில சமயங்களில் சில கஸ்டமர்கள், தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஊழியர்தான் ஃபேஷியல் பண்ணணும்; ப்ளீச்சிங் பண்ணணும் என்பார்கள்; நமக்கு லீவு நாளன்று அவர்கள் அப்படிச் சொல்லிவிட்டால், நம்ம லீவு அம்போதான்!'' என்று கமலா தேவி சொல்லும்போதே, இன்னொருவர், ''வாராந்திர லீவு ஒரு பக்கம் இருக்கட்டும்; தினசரியே, காலை ஒன்பது மணி முதல் இரவு எட்டு மணி வரை வேலை நேரம் என்று இருக்கும். ஆனால், ஒருநாளும் எட்டு மணிக்கு வீட்டுக்குப் புறப்பட முடியாது. சரியாக பார்லரை மூடுவதற்கு பத்து நிமிடம் முன்னால் வந்து, ''சாரி! நாளைக்கு ஒரு ஃபங்ஷன். ஐப்ரோஸ் ட்ரிம் பண்ணி விடுங்களேன்'' என்பார்கள். பஸ் பிடித்து வீட்டுக்குப் போக பத்து மணி ஆகிவிடும்'' என்று ஆதங்கத்துடன் கூறுகிறார் தேவிஸ்ரீ.

“என் கணவர் என்னை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார், குழந்தையை

இது புதுசு!

“எங்க வாழ்க்கை!”







அடுத்த மாதம் இந்தப் பகுதியில் நர்ஸிங் தொழிலில் இருப்பவர்கள் மனம் விட்டுப் பேசவிருக்கிறார்கள். நீங்க ஒரு நர்ஸா? நீங்கள் சந்திக்கும் சவால்களும், பிரச்னைகளும் என்ன? எங்களிடம் பகிர்ந்து கொள்ள விருப்பமா? உங்களைப் பற்றிய முழு விவரங்களுடன் உடனே எழுதி அனுப்புங்க. 'எங்க வாழ்க்கை'யை மேலும் உணர்ச்சிகரமா ஆக்குங்க.

- ஆசிரியர்.

அக்கறையுடன் கவனித்துக் கொள்வார். மாமியாரை உட்கார வைத்து சமைத்துப் போட வேண்டிய வயதில் அவரை வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறதே என்ற குற்றஉணர்வு எனக்கு இருக்கிறது. ஆனால், எங்கள் குடும்பத்தில் அனைவரும் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பதால் எங்கள் வீட்டில் பிரச்னை ஏதும் இல்லாமல் வாழ்க்கை ஓடுகிறது'' - இது ஒரு பெண்ணின் அனுபவம் என்றால், இன்னொருவரது சோகம் இதோ -

''என்னதான் ஒற்றுமை இருந்தாலும், ஏதாவது ஒரு நாள், சண்டை வருகிறது. அப்போது மனசுக்குள்ளே அழுவதைத் தவிர வேறு வழி இல்லை. சம்பளம் வந்தால் தானே வண்டி ஓடும்? அப்புறம் சோகத்தை மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, வேலையைப் பார்க்க வேண்டியதுதான்.''

"பதினைந்து வயதிலேயே புடைவை கட்ட ஆரம்பித்தவள் நான். இன்று பார்லரில் யூனிஃபார்மாக பேண்ட், சட்டை அணிகிறேன். தலையைப் பின்னி, பூ வைத்துக் கொள்வது எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால், இப்போது தலைமுடியைப் பின்னாமல், அப்படியே விட்டுக் கொள்கிறேன். நாம் நம்முடைய அழகுணர்வை சரியான முறையில் வெளிப்படுத்தினால்தானே, கஸ்டமர்களுக்கு நம்மீது நம்பிக்கை ஏற்படும்? வேலைக்குச் சேர்ந்த புதிதில் பெடிகியூர் செய்வதற்காக வாடிக்கையாளர்களின் காலைத் தொடவேண்டி இருந்தபோது, என்னுடைய தன்மானம் அதை முழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை. நாளடைவில் அது சரியாகி விட்டது'' என்று கூறுகிறார் புவனா.

"ஒரு குறிப்பிட்ட சினிமா நடிகையைப் போல தனக்கு ஹேர்ஸ்டைல் செய்ய வேண்டும் என்று சிலர் சொல்வார்கள். அதன்படியே நாங்கள் செய்வது உண்டு; ஆனால், சிலரிடம், ''இது உங்கள் தோற்றத்துக்கு அழகாக இருக்காது என்றால், ஒப்புக் கொள்ள மாட்டார்கள். வேறு வழி இல்லாமல், நாம் செய்து முடித்த பிறகு, ''நான் நினைச்சது மாதிரி உங்களுக்கு பண்ணத் தெரியலை'' என்று குறைசொல்வார்கள். சிலர், பார்லரின் உரிமையாளர்களிடம் புகார் செய்வார்கள். கஸ்டமர் மனம் நோகக் கூடாது என்பதற்காக, உரிமையாளர் திட்டுவதை நாம் பேசாமல் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்'' என்று ஆதங்கப்படுகிறார் யாஸ்மின்.

சிலர், ''என் செல்போனை இங்கேயே மறந்து விட்டுப் போயிட்டேன். என் மோதிரத்தைக் காணோம்'' என்றெல்லாம் சொல்வார்கள். இது எங்களை எவ்வளவு காயப்படுத்தும் என்று அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. அதையெல்லாம் நாங்கள் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல், ஒதுக்கித் தள்ளக் கற்றுக்கொண்டு விட்டோம்'' என்றார்கள் அனைவரும் ஒரே குரலில்.

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

ஹாய் காலேஜ் பாய்ஸ் & கேர்ள்ஸ்!

மெஹந்தி டிஸைன்ஸ் போட்டி!



புகைப்படம்

பெயர் : ....

பள்ளி/கல்லூரி : ....

விலாசம் : ....

....

....

ஈமெயில் : ....

மங்கையர் மலர் ஆண்டு மலருடன் [பிப்ரவரி '08] இணைப் பாகத் தரப்படவிருக்கும் உங்கள் அபிமான குட்டி புக்கில் அட்டகாச மான மெஹந்தி டிசைன்கள் இடம்பெறவிருக்கின்றன.

இங்கே தரப்பட்டுள்ள கைவடிவ சித்திரத்தில், பாரம்பரியமோ, மார்வாடியோ, அராபிக்கோ, ஃப்யூஷனோ... அழகழகான மெஹந்தி டிசைன்களை வரைந்து கத்தரித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை டிசைன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது. தேர்ந்தெடுக்கப்படும் அழகிய டிசைன்களுக்கு சன்மானம் உண்டு!

சிறந்த 5 டிசைன்களுக்கு ஸ்பெஷல் பரிசும், மெஹந்தி ராணி/ராஜா பட்டங்களும் பூஞ்சாரல் இறுதிப் போட்டி மேடையில் சூட்டப் படும்.

உறையின் மீது 'மெஹந்தி 64' என்று மறக்காமல் குறிப்பிடவும்.

கடைசித் தேதி : 15.12.2007

முக்கியக் குறிப்பு :

★ கல்லூரி மாணவிகளுடன் பிளஸ்டு மாணவிகளும்/ மாணவர்களும் பங்குபெறலாம்.

★ படிக்கும் வகுப்பு, துறை, பள்ளி/கல்லூரி போன்ற தகவல் களோடு அதற்கான அத்தாட்சியையும், புகைப்படத்துடன் மறக்கா மல் இணைக்கவும்.

[ஆர்.]

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

பித்தம் விலக புளிய இலை நுனியை துவையல் அரைத்துச் சாப்பிடலாம்.

- பி. தேவி, தஞ்சை மாவட்டம்.

நெல்லி மரம் உள்ள வீட்டை தீமைகள் அணுகாது. நெல்லி இலையால் அர்ச்சனை செய்தால் திருமால் திருமகள் மனம் மகிழ்கிறார்கள்.

- கே. விஜயா, சென்னை - 78.

எண்ணெய் தேய்க்கும்போது இலேசா கச் சூடுசெய்த பிறகே தடவுங்கள். சருமத்துக்குள் எண்ணெய் எளிதாக இறங்கும்.

- ஏ. இந்திரா, ஈரோடு.

தூங்கச் செல்வதற்கு முன் சிறு துளி கிராம்புத் தைலத்தை மூக்கில் தடவினால் குறட்டை வராது.

- சுகந்தி பாஸ்கர், பெங்களூர்- 8.

சீனியர் சிட்டிஸன்களுக்கு ரயில்வேயில் பயணச் சலுகை மட்டும் தந்தால் போதுமா? தனி ரிசர்வேஷன் கவுண்டரும் தேவை. நிர்வாகம் கவனிக்குமா?

- டி., சௌந்தர்ராஜ், கோயமுத்தூர்.

அயர்ன்பாக்ஸை அணைத்த பின்பும் அந்தச் சூட்டிலேயே கைக்குட் டைகளை அயர்ன் செய்யலாம்.

- புஷ்பா நரசிம்மன், மேடவாக்கம்.




LET YOUR DREAMS COME TRUE......

EARN UPTO Rs. 1,00,000 per month

ISO 9001 : 2000 Certified



Regonised by Govt of India
Educational Loan Facility









Hai friends,

Iam Shalini Bharati from Varanasi, U.P. My Father is working in Banaras Hindu University. Right now Iam doing my Aviation and Hospitality Management Course. Iam in Hostel here, I enjoy my studies. After the course completion, I will become an Air-Hostess.

Thanks to **Newtech**

Yours Faithfully
Shalini

Hai friends,
Iam Mahesh Kumar.C, Iam B.Sc., Physics Student. from Tuticorin, Right now Iam doing my 1 year Diploma in Aviation & Hospitality in Newtech. . Before joining here I have worked in mustoor Private Bank as execution level. but because of the work tension and too much off roaming. I am fired of those jobs. right now in Newtech they have arranged for an education loan for me and the ecucation in very good and Iam also currently working with for India.
Thanks to Newtech
Yours Faithfully
Mahesh Kumar.C

Become an Airhostess / Stewards / Five Star Hotel perssonnel

Course curriculam includes

- Cabin crew training
- Ground service training
- Business english,
- Personality Development
- Hospitality
- Foreign language
- CRS computer reservation system
- Travel & Tourism
- Swimming,
- Beauty Training

Part time Job Offered

Hostel Facilities / Paying Guest accomadation available

Eligibility - +2 / undergraduates / Graduates
Age - 17 - 26 years (Men and Women)
College goers working sectors can do the course in part time

To Realise your dreams

Visit Now

NEWTECH
International Academy
(Recognised by Govt. of India)
THE NO.1 TRAINIER FOR THE SERVICE INDUSTRY
AIR HOSTESS TRAINING

56-A, BLOCK, THIRUMALAI PILLAI ROAD,T.NAGAR, CHENNAI - 17.Ph: 4263 0055 / 66 / 77 Mobile: 98400 34672
Email : info@newtechinternationalacatemy.com Web : www. Newtechinternationalacatemy.com


பட்டு உலகில்
இப்படி ஒரு விலை குறைப்பை
நீங்கள் கண்டதில்லை!
UPTO
60%
OFF
FROM 1.12.07 TO 15.12.07
1980 990
தூய தங்கம், அசல் வெள்ளி ஜரிகையுள்ள
காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள்
13,050
9,090
15,300
9,900
15,300
10,080
16,200
10,800
Kancheepuram
S.M.Silks
The Pride of Pure Silks
Kancheepuram | Chennai | Bangalore
Prince Towers, 94, Purasawalkam High Road,
Chennai. Ph: 044 42042232
10, Nageshwaran Road, Panagal Park, T Nagar,
Chennai. Ph: 044 42121177
103 G A Road, Old Washermanpet,
Chennai. Ph: 044 42049151
H.O.: No. 146, Gandhi Road,
Kancheepuram. Ph: 044 27227686
BANGALORE:
MAJESTIC • CHICKPET • BASAVANGUDI
kancheepuram_smsilks@yahoo.co.in

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN/CC(S)DN/170/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/06-08 · Registered as a Newspaper in Srilanka

என்றும் உங்களுடன் புத்தகம்-2

மங்கையர் மலர்

MANGAYAR MALAR டிசம்பர் 2007




பூஞ்சாரல் தேவி



ஆட்டம்... பாட்டம்... கொண்டாட்டம்!

அன்புத் தோழிகளே,

வணக்கம். சும்மா சிறு தீப்பொறியாகக் கிளம்பிய உற்சாகம், இத்தனைப் பெரிய கலகலா கலர்ஃபுல் வாண வேடிக்கையாகும் என யார்தான் எதிர்பார்த்தார் கள்?

‘கல்லூரி மாணவமணிகளுக்கிடையே கொட்டிக் கிடக்கும் கலைத் திறமையை வெளிப்படுத்த ஓர் அற்புத மேடையை உருவாக்கலாமே’ என மங்கையர்மலர் ஆசிரியர்குழு பேசிக் கொண்ட மறுநாளே, ‘‘நாங்க ரெடி... நீங்க ரெடியா?’’ என்று கோத்ரெஜ் நிறுவன மீடியா மேனேஜர் சுபா ஸ்ரீனிவாசன் பச்சைக்கொடி காட்டினார்.

சிந்தால் மார்க்கெட்டிங் அதிகாரி சின்மய் கேல்கர் உற்சாகமாய் கை கோக்க, திருச்சி, ஸ்ரீமதி இந்திராகாந்தி மகளிர் கல்லூரி முதல்வர் கே.மீனா ஒருங்கிணைப்பாளராக ஒத்துழைக்க...

‘பூஞ்சாரல் ஆட்டம் பாட்டம்... கொண்டாட்டம்’ நிகழ்ச்சியின் முதல் சுற்றுப் போட்டிகள், தமிழகம் முழுவதும், ஒன்பது இடங்களில் 121 கல்லூரிகள் பங்கேற்க, பிரம்மாண்டமாய் நடந்தேறி விட்டன.

ஒவ்வொரு மேடையிலும் ஒவ்வொரு அனுபவம். கல்லூரிப் பருவத்துக்கே உரிய துறுதுறுப்பு, துடிப்பு, துள்ளல், சாகசம், படைப்பாற்றல், அடேயப்பா... முழுக்க முழுக்க நனைந்தாலும் துவட்டவே தேவையில்லாதபடி, திகட்டாத இன்பம் தந்தது பூஞ்சாரல்!

இவ்விழா இனிதே நடக்க உதவிய கல்லூரி முதல்வர்கள், முக்கிய விருந்தினர்கள், ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள், ஒருங்கிணைப் பாளர்கள், தன்னார்வத் தொண்டு மாணவர்கள், போட்டி நடுவர்கள், பார்வையாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்!

‘பூஞ்சாரல்’ முதல் சுற்றுப் போட்டிகளின் சுருக்கமானத் தொகுப்பும், சுவாரசியமான ‘க்ளிக்’குகளும் இந்த இணைப் பில் இடம்பெற்றுள்ளன. நமது மாணவமணிகளின் கைவண்ணமும் ஆங்காங்கே சுவையூட்டும். என்ஜாய்!



- அனுஷா நடராஜன்

கால் இறுதிச் சுற்றுக்குத் தேர்வான கல்லூரிகள் இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்





மதுரை பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிகள் :

- இதயா மகளிர் கல்லூரி, சருகணி.
- என்.பி.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நத்தம்.
- மதுரா கல்லூரி, மதுரை. (ஃபேஷன்)
- அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி. (ஃப்யூஷன்)
- நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தேனி. (ஃப்யூஷன்)
- நாடார் சரஸ்வதி கல்வியியல் கல்லூரி, தேனி. (ஃபிக்ஷன்)
- அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணன்கோவில். (ஃபிக்ஷன்)
- சீதாலக்ஷ்மி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்.
- செயின்ட் மைக்கேல்ஸ் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், காளையார்கோவில்.
- சகாயமாதா ஆசிரியர் பயிற்சி நிறுவனம், காளையார்கோவில்.
- அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரி, பழனி.
- அரசு கலைக் கல்லூரி, சிவகங்கை
- இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.
- பி.ஏ.சி. ராமஸ்வாமி ராஜா பாலிடெக்னிக் கல்லூரி, இராஜபாளையம். (ஃபேஷன்)

'ஹைலைட்'

சும்மா கொளுத்திப் போட்ட சரவெடி மாதிரி, சுருசுருன்னு இருபத்து நாலு கல்லூரிகள் மேடையேறி அசத்தியது மதுரையில்தான்! அதிலும் ஸ்பாட் ரெஜிஸ்ட்ரேஷன் செஞ்ச மதுரை காமராஜ் பல்கலைக்கழக மாணவர்கள் தாரை தப்பட்டைன்னு சும்மா அதிரவச்சுட்டாங்க!



லக்ஷ்மி சுந்தரம் மஹால்

மதுரை

17.08.2007

டண்டணக்கா... டமுக்குடிப்பா!





- ராஜா துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி, சிவகங்கை. (ஃப்யூஷன்)
- ஸ்ரீ சாரதா நிகேதன் மகளிர் கல்லூரி, அமராவதி புதூர். (ஃப்யூஷன்)
- டாக்டர். உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரி, காரைக்குடி.
- அருள்மிகு பழனி ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, பழனி.
- ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை (ஃப்யூஷன்)
- பார்வதீஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டுக்கல். (ஃபிக்ஷன்)
- வி.வி. வன்னியபெருமாள் மகளிர் கல்லூரி, விருதுநகர்.
- ஸ்ரீ கற்பக விநாயக மெடிகல் சயின்ஸ் மற்றும் ஹோட்டல் மானேஜ்மெண்ட் கல்லூரி, மதுரை. (ஃப்யூஷன்)
- மதுரை காமராஜர் பல்கலைக்கழகக் கல்லூரி, மதுரை (ஃப்யூஷன்)
- சாய்ஜோதி ஆசிரியர் பயிற்சி நிறுவனம், மதுரை.

நடுவர்கள்:

டாக்டர் கே. மீனா, திருமதி சுபா ஸ்ரீநிவாசன், திருமதி அனுராதா சேகர்

சிறப்பு விருந்தினர்:

திரு. எஸ். நாகராஜ், ஜாயின்ட் டைரக்டர், சென் கோ-ஆப்டெக்ஸ், ஈரோடு



தன்னம்பிக்கை தளபதி

அகஸ்தீஸ்வரன்

பி.ஏ.சி. ராமசாமிராஜா பாலிடெக்னிக் கல்லூரி
இராசபாளையம்

தலைப்புகள்

ஃபாஷன்

புராணம்

ஃபியூஷன்



சக்தி

ஃபிக்ஷன்

இன்டெர்நெட் திருமணம்




மதுரை








பூவான அதிசயம்!

நீ
வரும் வரையில்
என் செடியில்
மொட்டுக்கள்
மட்டுமே இருந்தன...

உன்னைக் கண்ட
ஆச்சரியத்தில்
அவை எல்லாம்
வாய் பிளந்து
பூக்கள் ஆயின!

- சித. காளீஸ்வரி,
பி.எஸ்ஸி., [இரண்டாம் ஆண்டு],
ஆனந்தா கல்லூரி,
தேவகோட்டை.

வெற்றி வேண்டுமா?


தோழா,
துரத்துவது தோல்வி என்றால்
ஓடாது நில்!
வதைப்பது வறுமை என்றால்
வளையாது நிமிர்!
சிந்தாதது வியர்வை என்றால்
சிதையாது உழை!
ஓடுகிறது காலம் என்றால்
விடாது துரத்து!
கிடைக்காதது வெற்றி என்றால்
மனம் தளராது தேடு!
அப்போதுதான்
வெற்றி உன் வசமாகும்...



- த.சிவலிங்கம்,
தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக் கழகம்,
பி.காம்., [மூன்றாம் ஆண்டு],
கிண்டி, சென்னை - 25.

பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!



'ஹைலைட்'

விழுந்து விழுந்து
கவனிச்சதென்ன....
'கமகம' சாப்பாடென்ன...
சாரா டக்கர் கல்லூரியோட
விழா ஏற்பாடு செம தூள்!
ஆடியோ சி.டி. மக்கர்
பண்ணினாலும், புது சி.டி.
வாங்கிட்டு வந்து,
உற்சாகமா ஆடிட்டுப்போன
கே.ஆர். கலைக் கல்லூரிக்கு
ஒரு 'ஓ' போடுங்க!

சாரா டக்கர் பெண்கள் கல்லூரி

நெல்லை

25 .08.2007



நெல்லை பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிகள்

- செயின்ட் சேவியர்ஸ் கல்லூரி, (தன்னாட்சி), பாளையங்கோட்டை (ஃப்யூஷன்)
- வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி
- ஹோலி க்ராஸ் கல்லூரி, நாகர்கோவில் (ஃபாஷன்)
- சதக்கதுல்லா அப்பா கல்லூரி, திருநெல்வேலி (ஃபிக்ஷன்)
- ஸ்ரீ ஐயப்பன் மகளிர் கல்லூரி, சுக்கான் கடை
- எஸ்.டி. இந்துக் கல்லூரி, நாகர்கோயில்(ஃபிக்ஷன)
- அம்பை கலை கல்லூரி, அம்பா சமுத்திரம்
- பிஷப் கேட்வெல் கல்லூரி, தூத்துக்குடி
- செயின்ட் ஜோசப் செவிலியர் கல்லூரி, கன்னியாகுமரி (ஃபாஷன்)







அடடா.. மிரட்டறாங்களே!



- பாரதியார் நூற்றாண்டு நினைவு பெண்கள் தொழிற் கல்லூரி, எட்டையபுரம்
- சாரா டக்கர் மகளிர் கல்லூரி, திருநெல்வேலி (ஃபியூஷன்)
- கே.ஆர்.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி
- ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம் (ஃபியூஷன்)

நடுவர்கள்:
திரு எஸ். ராமச்சந்திரன், திருமதி ஜி. அனுராதா, திருமதி லக்ஷ்மி பாய் மோகன்

சிறப்பு விருந்தினர்: திருமதி ஐடா ஜோசப், முதல்வர், சாரா டக்கர் மகளிர் கல்லூரி







தன்னம்பிக்கை தளபதி
ராஜலக்ஷ்மி
சாரா டக்கர் பெண்கள் கல்லூரி
திருநெல்வேலி



தலைப்புகள்

ஃபாஷன்
நேற்று – இன்று – நாளை

ஃபியூஷன்
ஆனந்தம்

ஃபிக்ஷன்
கூட்டுக் குடும்பம்

அவளுக்காகத் தாடி வளர்த்தேன்
என்னைக் காட்டி அவள்
குழந்தைக்கு சோறு ஊட்டுகிறாள்
நான் பூச்சாண்டியாம்!

- எஸ்.பிரபு, பி.காம்.,
[இரண்டாம் ஆண்டு],
ஜெய்ராம் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
சின்ன திருப்பதி, சேலம் - 8.

தலைகுனிந்து நின்ற
அவளைத்
தொட்டதும் வார்த்தைகள்
உதிர்த்து விட்டாள் -
என் பேனா.

- மு.வினோபா,
வனக்கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம்,
மேட்டுப்பாளையம்



பொங்கி எழு!

பெண்ணே,
அரிசியாய் இராதே
அரைத்து
நசுக்கி விடுவர்!
உளுந்தாய் இரு!
அரைத்தாலும்
பொங்கி எழலாம்!
கடுகாய் இராதே
தாளித்து விடுவர்.
கருணையோடு இரு,
கடவுளாகி விடுவாய்!

- கே.ரேணுகா தேவி,
DFPN [இரண்டாம் ஆண்டு],
ஸ்ரீ ஆர்த்தி விநாயகா கல்லூரி, மதுரை.

- ஆர்.சந்திரமௌலி,
பி.டெக்.,
[இரண்டாம் ஆண்டு],
ஸ்ரீநிவாச ராமானுஜ
சென்டர், சாஸ்த்ரா
பல்கலைக்கழகம்,
கும்பகோணம்.





மாணவன்

வாழ்க்கையதில் நுழைந்தோம்
வந்த பின்பே உணர்ந்தோம்
ஆம், அனுபவமென்னும்
ஆசான் சொன்னார்
இன்று மட்டுமல்ல
இறக்கும் வரை நீ
மாணவன்தான்!
வாழ்க்கையெனும் வகுப்பறையில்
வாழும் வரை தினம் ஒரு
அனுபவமென்னும் பாடத்தைப் பெறும்
ஒவ்வொரு மனிதனுமே
மாணவன்தான்!

சந்தோஷம்!

உன்னில் இருக்கும் சந்தோஷத்தை
உலகம் முழுதும் தேடி அலைகிறாய்
கண்டுபிடித்தால் உன்னுள்ளேயே
மறைத்து வைக்கிறாய்
எப்போது உன் சந்தோஷத்தை
இந்த உலகத்துடன் பகிர்ந்து கொள்வாய்?



- எம்.ராஜராஜேஸ்வரி, எம்.ஏ. [முதலாம் ஆண்டு],
எம்.ஜி.ஆர்.ஜானகி கல்லூரி, சென்னை - 28.

உன்னுள் இருக்கும் தெய்வத்தைத்
தூங்க விடாதே!
என்னுள் இருக்கும் மிருகத்தை
எழுப்பி விடாதே!

- கஷ்மீர் ஆரோக்கிய தீபா,
பி.எஸ்ஸி., [இரண்டாம் ஆண்டு],
நிர்மலா பெண்கள் கல்லூரி,
கோயம்புத்தூர்.

நான் உன்னை
என் இதயம் என்று
சொல்லமாட்டேன்
ஏனென்றால்
நீ துடிதுடித்து
நான் வாழ்வதா....

- எம்.லட்சுமி, பி.எஸ்ஸி.,[இரண்டாம்
ஆண்டு], வே.வ.வன்னியப்பெருமாள்
பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

கடவுள்!

Jணம் பணமென்று எங்கே செல்கிறாய்?
இங்கே மனமே இல்லாமல் ஓர் சமுதாயம்
சீர்கெட்டுக் கொண்டிருக்கிறது
அரசியலைச் சாக்கடை என
நினைக்காதே

சாதிக்கும் இடமெனக் கருது
வித்திட்டவன் உணவில்லாமல்
விழித்துக் கொண்டிருக்கையில்
வெளிநாடு எதற்கு?
திரும்பிப்பார்
உன் தாய்நாடு ஏக்கத்துடன்
பார்த்துக் கொண்டிருக்கிறது.



- ஏ.ஜெசினா பர்வின்,
பி.எஸ்ஸி., [மூன்றாம் ஆண்டு],
நிர்மலா பெண்கள் கல்லூரி,
கோயம்புத்தூர்

பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!







சேலம் பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிக

- சி.எஸ்.ஐ.ஆசிரியர் மகளிர் பயிற்சி கல்லூரி, சேலம்
- ஸ்ரீ கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்
- ஜே.கே.கே. நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாரபாளையம்
- ஜெய்ராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் (ஃபாஷன்)
- ஸ்ரீ சக்திகைலாஷ் மகளிர் கல்லூரி, சேலம் (ஃபியூஷன்)

'ஹைலைட்'

அதிக ஆண்கள்
பங்கேற்று,
பார்வையாளர்களாகவும்
வந்து அலம்பல் செஞ்சது
இந்த நிகழ்ச்சியிலதான்!
விஸில் பற பற...
உற்சாகம் வர... வர......
கல கல கலனு
களைகட்டிடுச்சுல்ல!



சோனா கல்லூரி

சேலம்

06.09.2007





இளமை இதோ, இதோ!

- ஸ்ரீ அம்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சித்தோடு (ஃபிக்ஷன்)
- கந்தசாமி கந்தர் கல்லூரி, வேலூர்(ஃபியூஷன்)
- பி.எம்.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தர்மபுரி
- ஏ.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்
- வைசியாக் கல்லூரி, சேலம் (ஃபியூஷன்)
- வேளாளர் மகளிர் கல்லூரி, சேலம் (ஃபியூஷன்)
- தியாகராசர் தொழிற் கல்லூரி, சேலம் (ஃபியூஷன்)
- காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தர்மபுரி

நடுவர்கள்: திருமதி சுஜாதா குமரேஷ், திருமதி G. ஹரிப்ரியா, திருமதி அனுராதா சேகர்

சிறப்பு விருந்தினர்: கே.பி.நடராஜன், உரிமையாளர் கே.பி.என். டிராவல்ஸ்







தன்னம்பிக்கை தாரகை

சங்கீதா

காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தருமபுரி

தலைப்புகள்

ஃபாஷன்
கிராமியம்

ஃபியூஷன்
அன்பு

ஃபிக்ஷன்
செல்ஃபோன்





சேலம்



















கடி!

தென்னை மரத்தில் தேங்காய் இருக்கும்;
மாமரத்தில் மாம்பழம் இருக்கும்;
அரசமரத்தில் அரசர் இருப்பாரா?





- க.சரண்யா,
எம்.டெக்.,
[முதலாம் ஆண்டு],
கலசலிங்கம்
பல்கலைக்கழகம்,
கிருஷ்ணன் கோவில்
விருதுநகர் மாவட்டம்



''எங்க அப்பா ஒரு கையால
பஸ்ஸைத் தள்ளுவாருடா!''
''எப்படிடா!''
''எங்க அப்பா பயில்வான்.''
''எங்க அப்பா பஸ்ஸை ஊதியே
தள்ளுவாருடா!''
''எப்படிடா!''
''எங்க அப்பா கண்டக்டர்.''

- கே.ரேணுகா தேவி,
DFPN [இரண்டாம் ஆண்டு],
ஸ்ரீ கற்பக விநாயகா கல்லூரி, மதுரை.

ஹைகூ!

காயப்பட்ட இதயத்தை
நேசி;
நேசித்த இதயத்தைக்
காயப்படுத்தாதே!



கடல் ஓரத்தில் நம் நட்பை
எழுதி வைத்தேன்
அலை வந்து
அடித்துச் செல்லவில்லை
படித்துச் சென்றது!

- மா.ஜெயபாரதி, DFPN
[முதலாம் ஆண்டு],
ஸ்ரீ கற்பக விநாயகா
கல்லூரி, மதுரை

பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!









'ஹைலைட்'

மங்கையர் மலர் வாசகர்
ஒருவர், 'பூஞ்சாரல்'
அறிவிப்பை பார்த்து,
தமது பெண்ணை ஊக்குவித்து,
ஃபேஷன் ஷோவில் கலந்து
கொள்ளச் செய்தார். திடீரென
தயாரான அந்த
VLB ஜானகி அம்மாள்
கல்லூரிக்குப் பரிசும் கிடைச்சது
ஸ்வீட் சர்ப்ரைஸ்! மின்னல்
தெறித்த படுகா டான்ஸும்
வாங்குச்சே ப்ரைஸ்!

கோவை பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிக

- பிஎஸ்.ஜி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை (ஃபிக்ஷன்)
- செயின்ட் ஜோசப் மகளிர் கல்லூரி, திருப்பூர் (ஃபாஷன்)
- அங்கப்பா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை
- பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை (ஃபியூஷன்)



நிர்மலா பெண்கள் கல்லூரி

கோவை

08 .09.2007



கண்ணுக்கு ஜில்... மனசுக்கு தில்...



- ❖ வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் (ஃபிக்ஷன்)
- ● காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சத்யமங்கலம்
- ❖ பயனீர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை(ஃபியூஷன்)
- ❖ நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை (ஃபியூஷன்)
- ❖ வி.எல்.பி.ஜானகி அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை (ஃபாஷன்)

நடுவர்கள் :

திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யன்,
திருமதி விஜயலக்ஷ்மி ஹரிஹரன்,
திருமதி ரமா வெங்கட்

சிறப்பு விருந்தினர் :

திரு ராஜா, நிர்வாக இயக்குனர்,
நியு ஹோப் ஃபுட் இண்டஸ்ட்ரீஸ், ஈரோடு







தன்னம்பிக்கை தூபதி

மனோஜ்

காமதேனு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம்

தலைப்புகள்

ஃபாஷன்

கதர் ஆடை அலங்காரம்

ஃபியூஷன்

நட்பு

ஃபிக்ஷன்

சினிமா



துரு துரு தொகுப்பாளர்கள்



சென்னை



திருச்சி



கோவை



கும்பகோணம்



வேலூர்



நெல்லை



விழுப்புரம்



சேலம்



மதுரை

வி.ஐ.பி. கேலரி



மகிழவைத்த மங்கையர்மலர் அணி



தோள்கொடுத்த சிந்தால் குழு



பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!









'ஹைலைட்'

'கல்கி' நிறுவன
ஊழியர்களான சுகுணாவும்,
அய்யப்பனும் காம்பியரிங்
செய்தது புது முயற்சி
என்றால், கேன்ஸர்
இன்ஸ்டிட்யூடின்
'புற்றுநோய் 20-20'
திட்டத்துக்கு பணம்
சேர்ந்தது நெகிழ்ச்சி!

சென்னை பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிகள்

- குருநானக் கல்லூரி, (மாலை நேரக் கல்லூரி), சென்னை (ஃபிக்ஷன்)
- மெட்ராஸ் காலேஜ் ஆஃப் ஃபார்மஸி, சென்னை
- எஸ்.ஆர்.எம். காலேஜ் ஆஃப் பிசியோதெரபி, சென்னை (ஃபிக்ஷன்)
- டி.ஜி. வைணவக் கல்லூரி, சென்னை
- அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, சென்னை (ஃபியூஷன்)
- என்.கே.டி. தேசிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சென்னை
- சோகா இக்கேடா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை (ஃபாஷன்)
- மொஹமத் சாதக் அஜ் செவிலியர் கல்லூரி, சென்னை (ஃபியூஷன்)
- செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை
- டாக்டர் எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கல்லூரி, சென்னை (ஃபாஷன்)



டாக்டர் எம்.ஜி.ஆர்.- ஜானகி
மகளிர் கல்லூரி

சென்னை

29 .09.2007



கலக்குது பாரு இவங்க ஸ்டைலு!





- ஸ்ரீ எஸ்.எஸ்.ஷாசன் ஜெயின் மகளிர் கல்லூரி, சென்னை
- எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி, சென்னை (ஃபியூஷன்)
- எஸ்.எஸ்.கே.வி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காஞ்சிபுரம்
- பச்சையப்பாஸ் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம் (ஃபியூஷன்)
- ஆர்.வி.அரசு கலைக் கல்லூரி, செங்கல்பட்டு

நடுவர்கள் :

திருமதி தெல்மா ஜசக், திரு மு. மாறன்,
திருமதி வீணா குமரவேல்

சிறப்பு விருந்தினர் : திரு கார்த்திக் சுப்ரமணியன்,
ஏரியா சேல்ஸ் மேனேஜர், கோத்ரெஜ்





தன்னம்பிக்கை தலைவி

வைஷ்ணவி

செல்லம்மாள் மகளிர் கல்லூரி
சென்னை

தலைப்புகள்

ஃபாஷன்

மேற்கத்திய ஆடை அலங்காரம்

ஃபியூஷன்

பகல் – இரவு

ஃபிக்ஷன்

தாய்மை





சென்னை








தந்தைகள்!

சட்டத்துறை- ஜெராமி பெந்தம்
தாவிரவியல் - தியோடிராஸ்டஸ்
மரபியல் - கிரிகர்ஜோகன் மெண்டல்
மருத்துவம் - ஹிப்போகிரட்டஸ்
நோய் எதிர்ப்பியல் - எட்வர்டு ஜென்னர்
பொருளாதாரம் - ஆடம்ஸ்மித்
சமூகவியல் - அகஸ்டஸ்காம்டி
கணிப்பொறி - சார்லஸ் பாபேஜ்
செல்ஃபோன் - மார்டின் கூப்பர்
தமிழ் உரைநடை - வீரமா முனிவர்
நகைச்சுவை - அரிஸ்டோபேனஸ்
வேதியியல் - ராபர்ட் பாயில்
நவீன வேதியியல் - லவாய்சியர்
ரயில்வே- ஜார்ஜ் ஸ்டீபன்சன்
இந்திய ஏவுகணைத்தொழில்நுட்பம் - ஆ.பெ.ஜெ.அப்துல்கலாம்

ஆயுர்வேதம் - தன்வந்திரி
ஹோமியோபதி- சாமுவேல் ஹானிமேன்
டெலிஃபோன் - அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்

- வி.கோபாலகிருஷ்ணன்,
பி.எஸ்ஸி, [முதலாம் ஆண்டு]
அன்பில் தர்மலிங்கம் விவசாயக்
கல்லூரி, திருச்சி-9







காதல்!

உன்னைப் பார்க்கும்போதும்
பார்க்காதபோதும் இதயத்தில்
ஓட்டப் பந்தயம்!

- கா. பாலாஜி, வனக்கல்லூரி,
பி.எஸ்ஸி., [மூன்றாம் ஆண்டு],
மேட்டுப்பாளையம்.

பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!





'ஹைலைட்'

டி.ஆர். ராஜகுமாரி
புகழ் 'சந்திரலேகா'
மாதிரி, தஞ்சை
சாஸ்த்ரா கல்லூரியும்
ஃபஸ்ட் கிளாசா
ஃபியூஷன் டிரம் டான்ஸ்
போட்டாங்க!
என்னா பீட்டு...
வெரி வெரி ஹாட்டு!

கும்பகோணம் பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிகள்

- தமிழ்வேள் உமா மகேஸ்வரனார் கல்லூரி, தஞ்சாவூர் (ஃபிக்‌ஷன்)
- அரசு மகளிர் கலைக் கல்லூரி, (தன்னாட்சி) கும்பகோணம்
- இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்
- சாஸ்த்ரா பல்கலைக்கழகம், கும்பகோணம் (ஃபிக்‌ஷன்)
- சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கும்பகோணம் (ஃபாஷன்)
- டாக்டர் நல்லி குப்புசாமி மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் (ஃபியூஷன்)
- ஏ.டி.எம். மகளிர் கல்லூரி, நாகை
- பண்டிட் ஜவஹர்லால் நேரு வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி கல்லூரி, காரைக்கால்.
- சாஸ்த்ரா பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (ஃபியூஷன்)

நடுவர்கள்:

திருமதி ஜெயம் வெங்கட்ராமன்,
திரு வி. தீபக், திருமதி வசந்தகுமாரி சம்பத்

சிறப்பு விருந்தினர்:

டாக்டர் பத்ரிநாத், Dean,
SASTRA SRC University, Kumbakonam





சாஸ்த்ரா SRC
பல்கலைக்கழகம்

கும்பகோணம்

04.10.2007

எல்லாமே பரவசம்... உற்சாகம் இலவசம்!











தன்னம்பிக்கை தளபதி
தங்கேஸ்வரன்
தமிழ்வேள் உமாமகேஸ்வரனார் கல்லூரி
தஞ்சாவூர்



தலைப்புகள்

ஃபாஷன்
பாரம்பரிய உடைகள்

ஃபியூஷன்
பக்தி

ஃபிக்ஷன்
நகைச்சுவை

பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!



'ஹைலைட்'

எங்கு பார்த்தாலும்
அசின், த்ரிஷா,
ஸ்ரேயாக்களின்
தங்கைகள்தான்
உலாவந்தார்கள்!
அதனாலேயோ என்னவோ
ஆடியன்ஸ் ஆரவாரமும்
அதிரடியா அமைஞ்சு போச்சு!

ஸ்ரீமதி இந்திராகாந்தி மகளிர் கல்லூரி

திருச்சி

06.10.2007



திருச்சி பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிகள்

- ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி, திருச்சி (ஃபாஷன்)
- ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி (ஃபாஷன்)
- அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர் (ஃபாஷன்)
- திருச்சி பொறியியல் கல்லூரி, கோணலை
- டாக்டர் ஜி. சகுந்தலா செவிலியர் கல்லூரி, திருச்சி (ஃபியூஷன்)
- மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பெரம்பலூர் (ஃபியூஷன்)
- மவுண்ட் டபோர் மருத்துவ மிஷன் செவிலியர் கல்லூரி, புதுக்கோட்டை
- பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), புத்தூர்
- அரசு கலைக் கல்லூரி, துவாக்குடி
- கல்தூனா அப்துல்லா ராவுத்தர் மகளிர் கல்லூரி, திருவாரூர் (ஃபிக்ஷன்)
- சீதா லக்ஷ்மி ராமசாமி கல்லூரி, திருச்சி

நடுவர்கள் :

திரு. என். வெங்கட்ராமன்,
திருமதி ராஜேஸ்வரி மஹாலிங்கம்,
திரு. நாராயணன்

சிறப்பு விருந்தினர் :

திருமதி பூமா எம்.பொன்னவைக்கோ, (பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தரின் துணைவியார்)



தீ.. தீ.. தீ.. ஜெகஜ்ஜோதி!











தன்னம்பிக்கை தளபதி

அர்ச்சனா

ஸ்ரீமதி இந்திராகாந்தி மகளிர் கல்லூரி
திருச்சி

தலைப்புகள்

ஃபாஷன்

காய்கறி / தானியம் நகை அலங்காரம்

ஃபியூஷன்

சுதந்திரம்

ஃபிக்ஷன்

அரசியல்






திருச்சி








மங்கையர் மலர்





- செ.கோகிலா பிரியதர்ஷினி,
எஸ்.ஆர்.என்.எம். கல்லூரி, சாத்தூர்.

ஹாய் ஸ்டூடன்ட்ஸ்...

இனி 'பூஞ்சாரல் பக்கங்கள்' மங்கையர் மலரில் தொடர்ந்து இடம்பெறும். அதனால தொடர்ந்து உற்சாகமா எழுதுங்க. கவிதை மட்டுமில்லாம, கதை, கட்டுரை, கல்லூரி அனுபவங்கள், கேம்பஸ் கலாட்டா, சமூக சிந்தனைகள் என எதை வேண்டுமானாலும் எழுதி அனுப்புங்க. தேர்வானால் சன்மானமும் சான்றிதழும் உண்டு.

[ஆர்.]



- சி.வித்யாபதி, பி.எஸ்ஸி.,
[மூன்றாம் ஆண்டு],
தமிழ்நாடு விவசாயப்
பல்கலைக்கழகம்,
மேட்டுப்பாளையம்

பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்



வேலூர் பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிகள்

- ராணிப்பேட்டை பொறியியல் கல்லூரி, வாலாஜா (ஃபியூஷன்)
- ஆற்காடு ஸ்ரீமஹாலக்ஷ்மி மகளிர் கல்லூரி, விளாப்பாக்கம்
- டி.கே.எம். மகளிர் கல்லூரி, வேலூர் (ஃபியூஷன்)
- அக்ஸிலியம் கல்லூரி, வேலூர் (ஃபாஷன்)
- ஸ்ரீ நந்தனம் பொறியியல் கல்லூரி, திருப்பத்தூர் (ஃபாஷன்)
- திருப்பத்தூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர் (ஃபியூஷன்)

'ஹைலைட்'

ஆடாத கால்களும்,
பாடாத வாய்களும்
அருமையாக
அரங்கேறியது,
வேலூர் மேடையில்தான்!
எட்டுக் கல்லூரிகள்
புதுமுகங்கள்! அதில்
ஐந்து கல்லூரிகள்
செலக்ட்டும் ஆயிட்டாங்க...
ஹஓ்ரே!







அக்ஸிலியம் கல்லூரி

வேலூர்

12.10.2007

தக தக டான்ஸு... திரு திரு தில்லு!





- ஜி.பி. டீச்சர் எஜுகேஷன் பயிற்சி நிறுவனம், திருப்பத்தூர்
- ஜி.பி. டீச்சர் எஜுகேஷன் கல்லூரி, திருப்பத்தூர்
- மாரப்பன் லக்ஷ்மி அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர்
- பாரதிதாசன் பொறியியல் கல்லூரி, நாட்றாம்பள்ளி (ஃபியூஷன்)
- ஊரிஸ் கல்லூரி, வேலூர்
- செயின்ட் மேரிஸ் ஆசிரியர் பயிற்சி கல்லூரி, வாணியம்பாடி (ஃபியூஷன்)
- மருதர்கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி, வாணியம்பாடி (ஃபாஷன்)
- செவன்த் டே அட்வென்டிஸ்ட் ரிஃபாம் மூவ்மென்ட் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், வாணியம்பாடி

நடுவர்கள் :

திருமதி தீபா சுரேந்தர், திருமதி ப்ரியா சுரேஷ், திரு. பாபி

சிறப்பு விருந்தினர் :

சிஸ்டர் யுஜீன் ஃபாத்திமா மேரி

முதல்வர் ஆக்ஸிலியம் கல்லூரி, வேலூர்



நிகழ்ச்சிக்கு தலைமை

ஐஸ்வரியா

ஆக்ஸிலியம் கல்லூரி

வேலூர்

தலைப்புகள்

ஃபாஷன்

தென் மாநில உடைகள்

ஃப்யூஷன்

பெண்மை

ஃபிக்ஷன்

மருத்துவம்



பூஞ்சாரல்

ஆட்டம்...பாட்டம்...கொண்டாட்டம்!



'ஹைலைட்'

அடாது மழை
பெஞ்சாலும், விடாது வந்து
வித்தையைக் காட்டினாங்க
நம்ப பிள்ளைங்க!
பல கல்லூரிகள்
ஃபுல் மேக்-அப்போட
கட கடனு ரெடி ஆனது
எனர்ஜியா இருந்தது.
ஃபியூஷன் திருவிழாவோ
சூப்பர் கெட்டப்!
சூப்பர் செட்டப்!!

தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரி

விழுப்புரம்

27.10.2007



விழுப்புரம் பூஞ்சாரலில் பங்கேற்ற கல்லூரிகள் :

- தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரி, விழுப்புரம் (ஃபாஷன்)
- சசிலா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, கள்ளக்குறிச்சி
- ஆதிபராசக்தி செவிலியர் கல்லூரி, மேல்மருவத்தூர் (ஃபியூஷன்)
- இந்திரா காந்தி ஜெயந்தி மகளிர் கல்லூரி, திண்டிவனம் (ஃபிக்ஷன்)
- டாக்டர் ஆர்.கே.சண்முகம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கள்ளக்குறிச்சி (ஃபியூஷன்)
- திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருதாசலம் (ஃபிக்ஷன்)
- ஸ்ரீமத் சிவஞான பாலையா ஸ்வாமிகள் தமிழ் கலைக் கல்லூரி, மயிலம் (ஃபிக்ஷன்)









ஹே... தில்லாலங்கடியோ !





- திருக்கோவிலூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருக்கோவிலூர்
- கம்பன் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, திருவண்ணாமலை
- ஏரிஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (மகளிர்) வடலூர்
- ஸ்ரீ விநாயகா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, உளுந்தூர்பேட்டை
- செயின்ட் ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கடலூர் (ஃபியூஷன்)
- ராஜேஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வடலூர்.

நடுவர்கள் :
திருமதி அறிவு சுந்தர்,
திருமதி சத்யா நாகராஜன், லயன் ஏ.கோபி

சிறப்பு விருந்தினர் :
திருமதி பத்மாவதி, முதல்வர்
தெய்வானையம்மாள் கல்லூரி







தன்னம்பிக்கை தலைவி
கிருஷ்ணவேணி
ஏரீஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
வடலூர்

தலைப்புகள்

ஃபாஷன்
கல்யாண ஊர்வலம்

ஃபியூஷன்
திருவிழா

ஃபிக்ஷன்
வேலைக்குப் போகும் பெண்






சாரல் செய்திகள் சில...

* தமிழகமெங்கும் உள்ள கல்லூரிகளுக்கிடையே 4 நிலைகளில் 'பூஞ்சாரல்' கலைத் திறமை போட்டிகள் நடைபெற்று வருகின்றன.
* இந்த இதழில் நீங்க பார்த்து ரசித்தது முதல் சுற்றுப் போட்டிகளின் தொகுப்பு.
* நிகழ்ச்சிகள், ஃபேஷன், ஃபியூஷன், ஃபிக்ஷன் என மூன்று பிரிவுகளின் கீழ் அமைந்தன. ஒவ்வொரு கல்லூரியும் ஏதாவது ஒரு பிரிவில்தான் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட்டது என்றாலும் ஃப்யூஷன் பிரிவுக்கு டிமாண்ட் எக்கச்சக்கம்.
* ஒவ்வொரு பிரிவுக்கான போட்டிக்குரிய தலைப்பு, நிகழ்ச்சி அமைப்புக் குழுவால் முடிவு செய்யப்பட்டது.
* நிகழ்ச்சிகள் 15 நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற விதியை அநேகமாக பலரும் கடைபிடித்தார்கள்.
* நிகழ்ச்சிக்கான உடைகள், மேடை சாதனங்கள், அனைத்தும் போட்டிகளில் பங்கேற்பவர்களே கொண்டு வர வேண்டும் என்பதால் மாணவர்கள் 'செட் ப்ராபர்டி' எல்லாம் கொண்டு வந்து மலைக்க வைத்தார்கள்.
* ஒவ்வொரு நிகழ்ச்சியின் இறுதியிலும், வினாக்கள் கேட்கப்பட்டு, தன்னம்பிக்கையுடன் பதில் அளிப்பவர்களுக்கு மிஸ்டர் / மிஸ் கான்ஃபிடன்ஸ் (தன்னம்பிக்கை தளபதி) பரிசு தரப்பட்டது.
* வெற்றிப் பெற்றவர்களுக்குப் பரிசும், மற்ற பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ், ஆறுதல் பரிசும் வழங்கப் பட்டதால், அனைவரும் நிறைந்த மனதுடன் திரும்பினர்.
* ஆண்களும் பங்கேற்கலாம் என்றதும் கரை புரண்டோடிய உற்சாகத்துடன் மாணவர்கள் கலந்து கொண்டு அசத்தினர்.
* அனைத்து நிகழ்ச்சிகளிலும், குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பது முதல், ஒருங்கிணைப்பாளர்களாகவும், வாலண்டியர்ஸ், பார்வையாளர்களாகவும் இருந்து சும்மா வி.ஐ.பி. ராங்கில் கலக்கியது மாணவர்கள்தான்.

மீண்டும் சந்திப்போம்!

முதல் சுற்றுப் போட்டிகளே இத்தனை தூள்னா, இன்னும் வரவிருக்கும் கால் இறுதி, அரை இறுதி மற்றும் இறுதிச் சுற்றுப் போட்டிகள் சும்மா கிடுகிடா ரேஞ்சுலதானே இருக்கும்? ஜனவரி / பிப்ரவரி 2008-ல் மீண்டும் சந்திப்போம்.







மங்கையர் மலர்

CINTHOL

க்ளிக்... க்ளிக்... க்ளிக்...







Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN/CC(S)DN/170/06-08 - Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/06-08- Registered as a Newspaper in Srilanka

